
கல்கி



KALKI டிசம்பர் 28, 1952

4 அணா

மிகச் சிறந்த வேலைப்பாடுகள்



TELIYA MANDIR,



சென்னை
தொழிற்சாலை
விலை
ரூ.13,250

1952
STANDARD VANGUARD

எங்கும் பிரசித்தமான
குடும்ப கார்

ஸ்டாண்டர்ட் வான்கார்டு

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிட்.,

சென்னை - பெங்களூர் - உதகமண்டலம்

கல்கி

பொருளடக்கம்

மலர் 12 | இதழ் 22 — 1952 டிசம்பர் 28 — நந்தன மார்கழி 14

டால்டா வனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது



• சமையலுக்கு எல்லாவற்றையும் விடச் சிறந்தது

• சக்திக்கு எல்லாவற்றையும் விடச் சிறந்தது

டால்டா உணவுக்குச் சிறந்த ருசியைத் தருகிறது. மேலும் டாக்டர்கள் உங்களுக்குத் தேவை என்று கூறும் சக்திதரும் கொழுப்பை உங்களுக்குக் கிடைக்கச் செய்கிறது. பிரத்தியேகமான சீல் செய்த டின்னில் அடைத்திருப்பதால் டால்டா உங்களுக்கு புதிதாகவும், சுத்தமாகவும் கிடைக்கிறது. அன்றியும் கைபடாமல் தயாரிக்கப் பட்டது.

ஒரு ஆதர்ச குடும்பஸ்திரீ எப்படிப்பட்டவள்?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள் :
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



டால்டா

தேவைக்குத் தகுந்தவாறு பல சைஸ்களில் கிடைக்கிறது

HVM. 185-50 TM

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார். | இதழ் 22

சிகரத்தைப் பிடித்தார்கள்!

இமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தை எட்டுவதற்காக ஐரோப்பாவிலிருந்து வந்து பிரயத்தனம் செய்தவர்கள் சிலர் அந்த முயற்சியில் தோல்வியடைந்து திரும்பினார்கள்.—இந்தச் செய்தி சென்ற வார தினப் பத்திரிகைகளில் வந்திருந்தது.

அதே சமயத்தில் நமக்குப் பக்கத்து வீட்டுச் சகோதரர்களாகிய ஆந்திரர்களில் பலர் பைத்தியக்காரத்தனத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்தே விட்டார்கள்!—இதைப் பற்றிய விவரங்களையும் நேயர்கள் தினப் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள்.

ரயிலை நிறுத்தல், ரயில் பிரயாணிகளைத் துன்புறுத்தல், தண்டவாளங்களைப் பெயர்த்தல், ரயில்வே நிலையங்களைக் கொளுத்தல், சர்க்கார் காரியாலயங்களை முற்றுகையிடல், கூட்ஸ் வண்டிகளிலிருந்த சாமான் மூட்டைகளைச் சூறையாடல் — முதலிய பைத்தியக்காரச் செயல்களில் ஆந்திர மக்கள் சிலர் ஈடுபட்டார்கள்.

லாபம் ஒன்றுமில்லாத நாசகாரச் செயல்களையும், தனக்குத் தானே நஷ்டம் விளைவித்துக் கொள்ளும் வெறிச் செயல்களையும் 'பைத்தியக்காரத்தனம்' என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது?

* * * *

ஆந்திர ஜில்லாக்களில் நடந்த மேற்கண்ட காரியங்களுக்கு உடனடியான காரணமாயிருந்தவை, ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலு என்னும் ஆந்திர சகோதரரின் நீடித்த உண்ணாவிரதமும் பரிதாபமான மரணமும் ஆகும்.

இந்த நல்ல மனிதர் எதற்காக உண்ணாவிரதம் இருந்தார், எதற்காக உயிர் துறந்தார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வது அவசியம்.

ஆந்திரத் தலைவர்கள் மேற்படி காரணத்தைக் குழப்பி மறைக்க முயல்கிறபடியால், அதைத் தெளிவுபடுத்துவது மிக முக்கியமாகிறது.

ஆந்திர மாகாணம் சம்பந்தமாக ஆந்திரத் தலைவர்கள் வேற்றுமைப் பட்டிருப்பதற்காக வருந்தி, ஆந்திரத் தலைவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தார்.

ஸ்ரீராமுலு மகாத்மாவின் சீடர்களில் ஒருவர் என்று தெரிய வருகிறது. அப்படியானால் அவர் காந்திய வழியிலேதான் உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டும்.

காந்தி மகான் தம் வாணாளில் எத்தனையோ தடவை உண்ணாவிரதமிருந்ததுண்டு. ஒவ்வொரு தடவையும் மகாத்மா தம்முடைய ஆத்மத் தூய்மைக்காகவோ அல்லது தம்மைச் சேர்ந்தவர்களைத் திருத்திப் பரிசுத்தப் படுத்துவதற்காகவோ தான் உண்ணாவிரதமிருந்தார்.

பிரிட்டிஷ் முதன் மந்திரி ராம்ஸே மக்டனல்ட் இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி அளிக்கத் தீர்மானித்தபோது மகாத்மா உண்ணாவிரதமிருந்தது பிரசித்தமானது.

அப்போது என்ன நோக்கத்துடன் காந்திஜி உண்ணாவிரதம் இருந்தார்? ராம்ஸே மக்டனல்டின் மனதை மாற்றுவதற்காக அல்ல.

இந்தியாவில் ஹிந்து சமூகத் தலைவர்கள், ஹரிஜனத் தலைவர்கள்,—இவர்களுடைய மனதை மாற்றுவதற்காகத்தான். இதன் காரணமாகவே, பண்டித மாளவியா ஒரு புறமும் டாக்டர் அம்பேத்கார் இன்னொரு புறமும் நின்று விவாதித்து, பலர் மத்தியஸ்தம் செய்து, கடைசியில் சாதி ஹிந்துத் தலைவர்களும் ஹரிஜனத் தலைவர்களும் கையெழுத்திட்டு ஓர் ஒற்றுமையான முடிவுக்கு வந்தார்கள்.

உடனே மகாத்மா காந்தியும் தமது நீண்ட நாள் உண்ணாவிரதத்தை முடிவு செய்து உணவு அருந்தினார்.

இதே முறையில்தான் ஸ்ரீராமுலுவும் தம்முடைய அன்புக்குரிய ஆந்திரத் தலைவர்களிடையில் ஒற்றுமை உண்டு பண்ணுவதற்கு உண்ணாவிரதம் ஆரம்பித்தார். அவர்களுடைய ஒற்றுமைக் குறைவே ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்குத் தடை செய்கிறது என்று உணர்ந்து அந்த விரதத்தை மேற்கொண்டார். ஆகையாலேயே,



தாம் உண்ணாவிரத மிருப்பதற்குப் பிரபல ஆந்திரத் தலைவர்களின் வீட்டைத் தேடிச் சென்றார். முதலில் மாபெரும் தலைவரின் வீட்டுக்குப் போனார். அவர் "எனக்கு உண்ணாவிரதத்தில் நம்பிக்கையில்லை" என்று சொல்லி விரட்டி அடித்தார். பிறகு, ஸ்ரீ சாம்பமூர்த்தியின் இல்லத்துக்குச் சென்று உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

ஆந்திரத் தலைவர்களின் ஒற்றுமைக்காகவே ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தார் என்பதை ஆந்திரத் தலைவர்களே ஒப்புக் கொண்டார்கள். ஒப்புக் கொண்டுதான், ஸ்ரீராமுலு காலமாவதற்கு முன்பு சகல கட்சி ஆந்திரத் தலைவர்களின் மகா நாடு கூட்டினார்கள். இந்த மகாநாட்டிற்கு ஸ்ரீ பிரகாசமே தலைமை வகித்தார்.

ஒரு நல்ல மனிதர் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டுக் கொண்டிருப்பதை அறிந்திருந்தும் ஆந்திரத் தலைவர்கள் ஒற்றுமைப்படவில்லை.

மேற்படி மகாநாடு குழப்பத்தில் கலைந்தது என்னும் விவரத்தை நேயர்கள் தினப் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள்.

இந்த மகாநாட்டில் ஸ்ரீராமுலுவின் உயிரைக் காப்பாற்ற விரும்பிய சிலர் இருந்தார்கள். அவர்கள் "சென்னை நகரைப் பற்றிய பேச்சை விட்டு, மற்ற ஆந்திர ஜில்லாவைக் கொண்ட மாகாணத்தைக் கேட்போம். கேட்டால், உடனே ஆந்திர மாகாணம் சித்தியாகும். ஸ்ரீராமுலுவின் உயிரைக் காப்பாற்ற இது ஒன்றுதான் வழி!" என்று சொன்னார்கள்.

ஆனால் ஸ்ரீ பிரகாசம்—விசுவநாதன் — சாம்பமூர்த்தி கோஷ்டி அதற்கு இணங்கவில்லை.

சென்னை நகரையும் சேர்த்துக் குழப்பித் தீர்மானம் போட்டார்கள்.

அதை மகாநாட்டில் பலர் எதிர்த்தார்கள். ஸ்ரீ பிரகாசம் கோஷ்டி போன பிறகு அவர்கள், "சென்னை நகர் நீங்கலாக ஆந்திர மாகாணத்தை அமைக்க வேண்டும்" என்று தீர்மானித்தார்கள்.

ஆகக் கூடி, ஆந்திரத் தலைவர்களிடையில் ஒற்றுமை ஏற்படவில்லை.

ஸ்ரீராமுலுவும் உயிர் பிழைக்கவில்லை.

காந்திஜியின் சீடரான ஒரு நல்ல மனிதர் இவ்வாறு ஆந்திரத் தலைவர்களின் ஒற்றுமைக்காக நெடுநாள் உண்ணாவிரதமிருந்து ஆத்மத் தியாகம் செய்து கொண்டார். அந்தத் தியாகியின் ஆத்மா சாந்தி அடைவதாக!

* * *

ஸ்ரீராமுலுவின் பரிதாப மரணத்துக்குப் பிறகு கூட, அவருடைய நோக்கம் இன்றுவரை நிறைவேறவில்லை; விரைவில் நிறைவேறும் என்றும் தோன்றவில்லை.

குழப்பத்தில் முடிந்த மகாநாட்டுக்குப் பிறகு விஜயவாடாவுக்குப் பிரயாணமான ஆந்திரகேசரி

நேரு சர்க்கார் பயப்

ஸ்ரீராமுலுவின் உண்ணாவிரதம், பரிதாப மரணம், இவற்றின் விளைவான ஆந்திர நாட்டுக் கலவரங்கள், — ஆகிய இவற்றுக்கு நேரு சர்க்கார் பயப்பட்டு விட்டார்கள் என்றும், அதன் காரணமாகவே ஆந்திர மாகாணத்தை உடனடியாக ஏற்படுத்த முன் வந்தார்கள் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். இப்படி வியாக்கியானம் பண்ணுவதற்கு இடம் ஏற்பட்டுவிடும் என்று வேறு சிலர் தங்கள் கவலையை வெளியிட்டிருக்கிறார்கள். நேரு சர்க்கார் பயப்பட்டு விட்டார்கள் என்று

ஸ்ரீராமுலுவின் மரணச் செய்தியைக் கேட்டதும் அவசரமாகத் திரும்பி வந்து, அவருடைய ஈமச் சடங்குகள் நடந்த இடத்திலேயே ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய பேச்சுப் பேசினர்.

சென்னை நகரத்தைப் பற்றிய பாத்தியதையை வற்புறுத்தி ஆந்திர மாகாணத்துக்கு முட்டுக் கட்டை போடும் திருப்பணியைச் செய்தார்.

காந்திஜியின் சீடரான ஸ்ரீராமுலுவின் ஆத்மாவுக்கு வேதனை தரக்கூடிய பலாத்காரக் கொடுஞ்செயல்கள் ஆந்திர நாட்டில் நடைபெறுவது தெரிந்தும், அவற்றைக் கண்டித்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

அதற்குப் பதிலாக உத்வேக வெறியைக் கிளப்பி ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முறையில் பேசினர்.

இன்னமும் அதே ரீதியில்தான் ஸ்ரீ பிரகாசமும் அவருடைய கோஷ்டியாரும் பேசிக் கொண்டு வருகிறார்கள்.

இவர்களைப் பொறுத்த வரையில், ஸ்ரீராமுலுவின் உண்ணு விரதமும் ஆத்மத் தியாகமும் நிஷ்பலனாயின என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், வேறொரு விதத்தில் ஸ்ரீராமுலுவின் ஆத்மத் தியாகம் பலன் அளித்திருக்கிறது.

ஸ்ரீ பிரகாசம் கோஷ்டியின் விதண்டாவாதத்தையும் முட்டுக் கட்டையையும் புறக்கணித்து விட்டு, ஆந்திர மாகாணத்தை உடனடியாக ஏற்படுத்துவதென்று இந்திய அரசாங்கத்தார் முடிவு செய்து விட்டார்கள்.

ஸ்ரீ பிரகாசம் கோஷ்டியின் சம்மதியை எதிர் பார்த்தால், ஆந்திர மாகாணமும் இப்போதைக்கு ஏற்படாது, ஆந்திர மக்களின் மனோரதமும் நம் காலத்தில் நிறைவேறாது என்று நேரு சர்க்கார் உறுதியடைந்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

ஆந்திர மாகாணத்தைக் கூடிய சீக்கிரத்தில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் தொடங்கி யிருக்கிறார்கள்.

இந்த அளவில் ஸ்ரீராமுலுவின் உண்ணுவிரதமும் ஆத்மத் தியாகமும் பலன் தந்திருக்கிறது என்றே கூற வேண்டும்.

ஆந்திர மாகாணம் அமைக்கப்பட்ட பின்னராவது ஆந்திரத் தலைவர்கள் தங்களுக்குள் பூசலிட்டுக் கொள்வதை நிறுத்தி, புதிய மாகாணத்தை நல்ல முறையில் நடத்துவதற்காக ஒற்றுமைப் படுவதற்கு முன் வரக்கூடும் அல்லவா!

அவ்வாறு நடந்து, ஆத்மத் தியாகம் செய்த ஸ்ரீராமுலுவின் மனோரதம் நிறைவேறு மென்றும், அவருடைய ஆத்மாவும் சாந்தி அடைய வேண்டு மென்றும் பிரார்த்திக்கிறோம்.

சென்ற வாரத்தில், பைத்தியக்காரத்தனத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த ஆந்திர சகோதரர்கள், புதிய மாகாணம் ஏற்பட்ட பிறகு சுபிட்ச நல் வாழ்வின் சிகரத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

பட்டு விட்டார்களா?

சொல்லுவதற்கு யாதொரு முகாந்திரமும் இல்லை. ஏனெனில், உண்ணுவிரதத்துக்காகவோ கலவரங்களுக்காகவோ, புதிதாக எதையும் கொடுத்துவிட நேரு சர்க்கார் ஒப்புக் கொள்ளவில்லை.

நேருஜி நெடுங் காலமாகச் சொல்லிக் கொண்டிருந்தபடியே, சென்னை நகரத்தைத் தவிர்த்த ஆந்திர மாகாணத்தை ஏற்படுத்துவதற்கே இப்போது முன் வந்திருக்கிறார்.

ஏன் இதை முன்னாலேயே செய்திருக்கக்கூடாது என்று கேட்டால், புதிய ஆந்திர மாகாணம் சுமுக



மான நல்ல சூழ் நிலையில் ஆரம்பிக்க வேண்டுமென்று நேருஜி ஆசைப்பட்டதுதான் காரணம்.

எப்போது ஸ்ரீராமுலு உண்ணாவிரத மிருந்து உயிரை நீத்த பிறகும் ஆந்திரத் தலைவர்கள் ஒற்றுமைப்படவில்லையோ, ஒற்றுமைக்காகப் போட்ட தலைவர்களின் கூட்டம் குழப்பத்தில் கலைந்ததோ, அப்போது இனிமேல் காத்திருப்பதில் பயனில்லை என்று பண்டித நேரு தீர்மானித்தார்.

யார் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளா விட்டாலும், தர்ம நியாயமாக ஆந்திர மாகாணத்தை ஏற்படுத்த முன் வந்து விட்டார்.

முன்னம், பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்ததையும் இச் சமயம் நேயர்கள் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

'இந்தியா ஒரே தேசமாக இருந்து, ஹிந்து முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு இந் நாட்டில் வாழ முடியும்' என்ற நம்பிக்கை சிறிதளவு இருந்த வரையில் காந்திஜியும் நேருஜியும் வல்லபாய் படேலும் பாகிஸ்தான் பிரிவினையை ஒப்புக் கொள்ள மறுத்து வந்தார்கள்.

ஜினாப் ஜின்னாவின் மன மாறுதலைக் கடைசி நிமிஷம் வரையில் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அந்த நம்பிக்கை நிறைவேறப் போவதே இல்லை என்று நிச்சயமாய்த் தெரிந்த பிறகு, பாகிஸ்தான் பிரிவினையை மேற்படி தலைவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

இங்கே, ஆந்திர மாகாண அமைப்பு ஏற்கெனவே ஒப்புக்கொண்ட விஷயந்தான். ஆயினும், தகராறு எதுவுமில்லாமல், சமாதான சமரச சூழ்நிலை ஏற்படுவதற்காக நேருஜி இத்தனை நாள் காத்திருந்து, காத்திருந்து பார்த்தார்.

ஸ்ரீராமுலுவின் பரிதாப மரணத்திற்குப் பிறகும் ஸ்ரீ டி. பிரகாசம் கோஷ்டி மன மாறுதல் ஏற்படவில்லை என்று கண்ட பிறகு, இனிக் காத்திருப்பதில் பயனில்லை என்று அறிந்தார்.

அந்த கோஷ்டியின் ஒத்துழைப்பு இல்லாமற் போனபோதிலும் ஆந்திர மாகாணத்தை ஏற்படுத்திவிட முன் வந்திருக்கிறார்.

ஆகையால், "பயந்து போனார்கள்" என்றோ "பணிந்து விட்டார்கள்" என்றோ சொல்லுவதற்கு இதில் சிறிதும் ஆதாரம் கிடையாது. சரியான காரியத்தை நிலைமை மிதமிஞ்சிப்போவதற்கு முன்னால், நேரு சர்க்கார் செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சென்னை நகருக்காக உண்ணாவிரதமா?

சென்னை நகரில் ஆந்திர காங்கிரஸ் கமிட்டி ஒன்று இருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் சென்னை நகரில் ஆந்திர பாத்தியதையை ஸ்தாபிப்பதற்காக மாற்றி மாற்றி உண்ணா விரதம் இருக்கப் போவதாக அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ பிரகாசம் காரு சென்னை நகரைப் பிடிப்பதற்காகச் சத்தியாக்கிரஹம் — உண்ணாவிரதம் முதலியவை அடங்கிய திட்டம் ஒன்றை வகுக்கப் போவதாகப் பயமுறுத்தி யிருக்கிறார்.

இவர்கள் "ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலு சென்னை நகரைத் தனிக் கமிஷனர் மாகாணம் ஆக்குவதற்காகவும் உண்ணாவிரதம் இருந்தார்" என்று சொல்லுகிறார்கள்.

இது உண்மையாயிருக்க முடியும் என்று நமக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், ஆத்மத் தியாகம் செய்த ஸ்ரீராமுலு காந்தி மகானின் சீடர்.

மகாத்மா காந்தி தமக்கும் தம் சீடர்களுக்கும் வகுத்திருந்த முக்கியமான கொள்கைகளில் ஒன்று 'அபரிக்ரஹம்' ஆகும். அதாவது பிறர் சொத்துக்கு ஆசைப்படாமை.

ஆகையால் ஸ்ரீ ராமுலு சென்னை நகரின் பேரில் ஆசைப்பட்டிருக்க முடியாது.

பாகிஸ்தான் பிரிக்கப்பட்ட போது, கராச்சியும் லாகூரும் பாகிஸ்தானுக்கு உரிமையாக்கப்பட்டன. அந்த இரண்டு நகரின் பேரிலும் ஹிந்துக்கள் பாத்தியதை கொண்டாடுவதற்கு எவ்வளவோ காரணங்கள் உண்டு.

ஆனால் காந்தி மகான் அந்த நகரங்கள் தமக்கு வேண்டும் என்றோ, இந்தியாவுக்கு வேண்டும் என்றோ, உண்ணா விரதம் இருந்திருப்பாரா! அம்மாதிரி மகாத்மா செய்திருக்கக் கூடும் என்று மகாத்மாவை அறிந்தவர்கள் யாரும் கற்பனைகூடச் செய்ய முடியாது.

அப்படி யிருக்க, காந்திஜியின் சீடரான ஸ்ரீராமுலு சென்னைக்காக உண்ணாவிரத மிருந்தார் என்பது நம்பத் தகுந்ததல்ல. அப்படிச் செய்திருந்தால் அவர் மகாத்மாவின் சீடரல்ல.

மகாத்மா காந்தி தம் வாணாளில் கடைசியாக உண்ணாவிரதம் இருந்தது நினைவிருக்கிறதா! டில்லியிலுள்ள ஹிந்துக்களின் மனமாற்றத்துக்காகவே விரதம் இருந்தார். முஸ்லிம்கள் பாகிஸ்தானில் எப்படி நடந்து கொண்டாலும் இங்கே ஹிந்துக்கள் முஸ்லிம்களைச் சரியாக நடத்த வேண்டும் என்று மகாத்மா கருதினார். முக்கியமாக சர்தார் படேலின் மனத்தை இவ்விஷயத்தில் மாற்றுவதற்காகவே காந்திஜி உண்ணாவிரதம் இருந்ததாக அச்சமயம் சொல்லப்பட்டது.

மகாத்மாவின் சீடராகிய ஸ்ரீராமுலுவும் அது போலவே துராசை கொண்ட ஸ்ரீ பிரகாசம் கோஷ்டியின் மனமாறுதலுக்காக உண்ணாவிரதம் இருந்திருப்பார் என்பதுதான் உண்மை யென்று கொள்ளத் தக்கதாகும்.

ஸ்ரீராமுலுவின் பெயரைச் சொல்லிக் கொண்டு, சென்னை நகருக்காக ஆந்திரர்கள் உண்ணாவிரத மிருப்பது காந்தி மகாத்மாவின் சத்தியாக்கிரஹக் கொள்கைக்கு முற்றும் மாறுபட்ட துராசையும் துராக்கிரகமும் ஆகும். அதனால் எவ்விதப்பயனும் விளையப் போவதில்லை என்பது நிச்சயம்.

தடுக்கப்பட்ட விபரீதம்

சென்ற வாரத்தில் ஏற்பட்டது போன்ற நிலைமையில் ஸ்ரீ டி. பிரகாசத்தின் ஆட்சி சென்னை மாகாணத்தில் நிலவி யிருந்தால், எத்தகைய விபரீதங்கள் நேர்ந்திருக்கக் கூடும் என்பதைத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏன்! கல்கத்தாவில் ஷுராவர்த்தியின் அரசாங்கத்தின் கீழ் என்ன நடைபெற்றது!

கல்கத்தா நகரில் மிகப் பெரும்பான்மையோர் ஹிந்துக்கள்தான். ஆயினும் ஷுராவர்த்தியின் பொறுப்பில் அரசாங்க நிர்வாகம் இருந்தபடியால் இந்தியா தேசத்திலேயே அதுவரை கேட்டறியாத ஹிந்துக்களின் படுகொலை நடந்தது. தற்கால சரித்திரத்தில் அச்சம்பவம் ("The Great Killing of Calcutta") என்று பெயர் பெற்றது. அந்தப் பயங்கர சம்பவம் இச்சமயத்தில் சென்னை வாசிகள் பலருக்கும் ஞாபகம் வரத்தான் செய்யும்.

அகில இந்தியத் தலைவர்கள், — நடு நிலைமையாளர்கள் பலர், — ஆந்திரர்கள் சென்னை நகரின்

பேரில் உரிமை கொண்டாடுவது நியாயமல்ல என்று சொல்லி விட்டார்கள்.

நேருஜி "சென்னை நீங்கலாக ஆந்திர மாகாணம் அமைக்கப்படும்" என்று சென்ற வாரம் முடிவாகக் கூறியிருப்பதை ஆந்திர அரசியல் கட்சிகள் பலவும் ஒப்புக் கொண்டு விட்டன.

ஆசிரியர் ரங்கா ஒப்புக்கொண்டார்; ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி ஒப்புக் கொண்டார்; கம்யூனிஸ்டுகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஸ்ரீ பிரகாசமும் அவருடைய கோஷ்டியும் மட்டும் ஒப்புக் கொள்ளவில்லை. சென்னை நகருக்காக மேலும் போர் நடத்தப் போவதாகச் சொல்லுகிறார்கள்.

விஜயவாடா, ராஜமகேந்திரவரம் முதலிய இடங்களில் நடந்த வெறிகொண்ட பலாத்காரச் செயல்களை இதர கட்சித் தலைவர்கள் எல்லாரும் கண்டித்திருக்கிறார்கள்.

"பலாத்காரத்தில் இறங்கி, ஆத்மத் தியாகி ஸ்ரீ ராமுலுவின் பெயரைக் கெடுக்க வேண்டாம்!" என்று கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்ரீ நாகி ரெட்டிகூட வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் ஸ்ரீ டி. பிரகாசமும் ஸ்ரீ சாம்பமூர்த்தியும் அதைப்பற்றி வாய் திறக்கவில்லை.

ஆகவே, ஸ்ரீ பிரகாசம் தற்சமயம் சென்னை ராஜ்யத்தின் அரசாங்கத் தலைவராக இருந்திருந்தால் விஜயவாடா சம்பவங்கள் இன்னும் நூறு மடங்கு பயங்கரத்துடன் நடந்திருக்கும் என்று தமிழர்கள் கருதுவது இயல்பு.

அத்தகைய சம்பவங்கள் சென்னை நகரிலும் பதின்மடங்கு பயங்கர ரூபங்கொண்டு நடந்திருக்கக்கூடும் அல்லவா!

இத்தகைய 'விஜயவாடா முறை'களைக் கையாண்டு சென்னை நகரைக் கைப்பற்றும் நோக்கத்துடனேயே ஸ்ரீ டி. பிரகாசம் கம்யூனிஸ்ட் தோழர்களுடனே சேர்ந்து அரசாங்கம் அமைக்கத் தயாரா யிருந்தார் போலும்!

கடவுளே! சென்னமா நகரம் எத்தனை பெரிய விபரீதத்திலிருந்து காப்பாற்றப்பட்டது!

தமிழர்கள் அறிவில் சிறந்தவர்கள் என்று நாம் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம்.

ஆயினும், தமிழர்களில் சிலர், அதிலும் 'தமிழ்' 'தமிழ் நாடு' என்று தம்பட்டம் அடிப்பவர்கள், ஸ்ரீ டி. பிரகாசத்தைத் தலைவராகக் கொண்ட ஐ. ஐ. மு. கட்சியில் சேர்ந்திருப்பதை நினைக்கும்போது, சிரிப்பதா வருத்தப்படுவதா என்று தெரியாமல் நாம் திணறவேண்டித்தான் இருக்கிறது.

நாத வெள்ளம்

சங்கீத வித்வத் சபையின் வெள்ளி விழா சிறப்புடன் ஆரம்பமாகி, அமோகமாக நடந்து வருகிறது. நாத வெள்ளம் பொங்கிப் பெருகி சங்கீத ரஸிகர்களின் செவிகளை நிரப்பி ஆனந்தக் கடலில் மூழ்கடித்து வருகிறது.

கர்நாடக சங்கீத பரம்பரையில் வந்த வித்வான்களில் மிகப் பெரும்பாலோர் வெள்ளி விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, கச்சேரி செய்கிறார்கள். அவர்களிலே பிற்பகல் நேரங்களில் கச்சேரி செய்யும் இருபத்துநாலு வித்வான்களின் உருவப் படங்களை இந்த இதழில் மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம். (பக்க வாத்தியங்கள் வாசிக்கும் வித்வான்களின் படங்கள் அடுத்த இதழில் வெளியாகின்றன.)

பிற்பகலில் கச்சேரி செய்யும் வித்வான்களில் ஏற்கெனவே நல்ல பிரபல மடைந்தவர்களும் இருக்கிறார்கள். இனிப் பிரபலம் அடைய வேண்டியவர்களும் இருக்கிறார்கள். ஆயினும் அகாடமியின் வெள்ளி விழாவில் கலந்து கொண்டபடியால் அவ்வளவு பேரும் பாரம்பரியமான உயர்தரக் கர்நாடக சங்கீத வித்தையைச் செல்வமாக அடைந்தவர்கள் என்பது நிச்சயமாகிறது.

வருங்காலத்தில் இவர்கள் அனைவரும் கர்நாடக சங்கீத மண்டலத்தில் ஒளிவீசும் நட்சத்திரங்களாகத் திகழ வேண்டுமென்று விரும்புகிறோம்.

இனிப் பிரபலமடைய வேண்டிய இளம் வித்வான்கள் வெள்ளி விழாத் தலைவர் ஸ்ரீ சாம்பசிவ ஐயரின் ரத்தினச் சுருக்கமான அரிய பிரசங்கத்தில் ஒரு அம்சத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். குருகுல வாசம் செய்து சங்கீதத்தை முறையாக அப்பியசிக்க வேண்டியதன் முக்கியத்தை ஸ்ரீ சாம்பசிவ ஐயர் வற்புறுத்திவிட்டு இளம் வித்வான் ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு புதிய பாணியை வகுத்துக் கொள்வதின் அவசியத்தையும் நன்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

சங்கீத உலகில் பிரபலம் அடைய விரும்புகிறவர்கள் இந்த நல்லுபதேசத்தை மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

"மகாராஜபுரம் பாணியில் பாடுகிறார்" என்றோ, "சித்தூரின் பாணியில் பாடுகிறார்" என்றோ பெயர் வாங்கினால் அந்தப் பெரிய வித்வான்கள் பிரபலமா யிருக்கும் வரையில் பின் பற்றிப் பாடுகிறவர்கள் முன்னணிக்கு வர முடியாது.

இளம் வித்வான்கள் புதிய தனிப் பாணியை வகுத்துக் கொள்ளுவது முக்கியம். அது போலவே அந்தப் புதுப் பாணியை ரஸிக்கக் கூடிய கூட்டம் ஒன்றையும் தயாரித்துக் கொள்வது அவசியம்.

சிலருக்கு அதிர்ஷ்ட வசத்தினால் அத்தகைய ரஸிகர் கூட்டம் சீக்கிரத்திலேயே சேர்ந்து விடுகிறது. வேறு சிலர் பொறுமையுடன் நீண்ட காலம் காத்திருக்க வேண்டி வருகிறது.

மதுரை மணி ஐயர் வெகு காலத்துக்கு முன்பே ஒரு தனிப் பாணியை வகுத்துக் கொண்டு பாடத் தொடங்கினார். ஆனால் அதை உணர்ந்து அனுபவிக்கும் ரஸிகர் கூட்டம் சேருவதற்கு அவர் வெகு காலம் பொறுமையுடன் சாதனை செய்ய வேண்டியிருந்தது.

இப்போது மதுரை மணி ஐயரின் பாணியை ரஸிப்பவர்கள் "அதுதான் உண்மையான சங்கீதம்" என்று சத்தியம் செய்வார்கள்.


புதிய பாணியை வகுத்துக் கொண்டு பாடும் இளம் வித்வான்கள் பொறுமையுள்ள விடா முயற்சிச் சாதனைக்கு மதுரை மணி ஐயரைச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

* * *

சங்கீத வித்வத் சபையின் ஆரம்பம், வளர்ச்சி, சேவை ஆகியவற்றைக் குறித்து அந்தச் சபையில் முக்கிய ஸ்தானம் வகிக்கும் இரு பிரமுகர்கள் இந்தக் 'கல்கி' இதழில் கட்டுரை எழுதி யிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கீதக் கலையினால் விளையும் தூய்மையான ஆனந்த பரவசத்தை நமது சித்திரக்காரர் 'மணியம்' உருவகப்படுத்தி எழுதி யிருக்கும் மூன்று தெய்வீக வடிவங்கள் இந்தக் கல்கி இதழின் அட்டையை அலங்கரிக்கின்றன.


AIR



1. வெள்ளி விழா அக்கிராசன பீடத்தில் வீணை ராஜா அமரப் போகிறார்.

2. சீடப் பெண் வீணையில் பொழிந்த தேனிசையைக் கேட்டுக் குரு மகிழ்ந்து பூரிக்கிறார்.

3. வெள்ளி விழாவை ஆரம்பித்து வைத்த கவர்னர் ஸ்ரீ பிரகாசா; அகாடமி தலைவர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்; ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர்.

4. மகா சபை கூடியிருக்கிறது. வலது கோடியில் அமர்ந்திருப்பவர் நீதிபதி டி. எல். வெங்கட்ராமய்யர்.





அத்தியாயம் 26

வீதியில் குழப்பம்

குந்தவை கண்ணீர் விடுவதைப் பார்த்து விட்டு வானதியும் விம்மத் தொடங்கினாள். உலகத்தில் எத்தனையோ இன்ப துன்பங்களைப் பார்த்தவரான அநிருத்தப் பிரம்ம ராயரின் இரும்பு நெஞ்சமும் இளகியது.

"தாயே! சக்கரவர்த்தி இப்போது படும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணமானவன் இந்தப் பாவிதான். என்ன பிராயச் சித்தம் செய்து அந்தப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேனோ, தெரியவில்லை!" என்றார்.

"ஐயா! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆயினும் எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். அந்தக் கரையர் மகள் இறந்து விடவில்லை. உயிரோடிருக்கிறாள் என்பதைத் தந்தைக்குத் தெரிவித்து விட்டால் அவருடைய துன்பம் தீர்ந்து மன அமைதி ஏற்பட்டு விடும். அதைச் சொல்லுவதற்காகவே தங்களிடம் வந்தேன். எப்படியாவது என் பெரியன்னையை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ள வந்தேன். ஆனால் தாங்களே அதற்குப் பிரயத்தனம் செய்திருக்கிறீர்கள்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆம், அம்மா! நானும் அத்தகைய முடிவுக்குத்தான் வந்திருந்தேன். மந்தாகினிதேவி உயிரோடிருக்கும் விவரத்தைச் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து விடத் தீர்மானித்து விட்டேன். ஆனால் வெறுமனே சொன்னால் அவர் நம்ப மாட்டார். முன்னே நான் கூறியது பொய், இப்போது சொல்லுவதுதான் உண்மை என்று எவ்விதம் அவரை நம்பச் செய்வது? அதற்காகவே அந்தத் தேவியை இங்கே அழைத்து வரச் செய்த பிறகு சொல்ல எண்ணினேன். நேரிலே பார்த்தால் நம்பியே தீர வேண்டும் அல்லவா? அதற்காகவே முக்கியமாக இலங்கைத் தீவுக்குச் சென்றிருந்தேன். ஆனால் தங்கள் தம்பியோடும் பெரிய வேளாரோடும் சதி செய்வதற்காக நான் ஈழ நாட்டுக்குப் போனேன் என்று பழுவேட்டரையர்கள் சக்கரவர்த்தியிடம் சொல்லியிருக்கிறார்கள். அது இல்லை என்று நிரூபிப்பதற்காகவேனும் மந்தாகினி தேவியைத் தங்கள் தந்தையின் முன்னால் கொண்டு போய் நிறுத்தப் போகிறேன்" என்றார் அநிருத்தர்.

"ஐயா! அந்த மாதிரி திடீரென்று கொண்டு போய் நிறுத்தினால் தந்தைக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டாலும் நேரிடலாம். முன்னால் தெரிவித்து விட்டுத்தான் அவர்களைப் பார்க்கச் செய்ய வேணும்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆம், ஆம்; அவ்வாறுதான் செய்ய உத்தேசித்திருக்கிறேன். இந்த வீட்டுக்கு மந்தாகினி தேவி வந்து சேர்ந்ததும் போய்ச் சொல்லலாம் என்று நினைத்தேன். இன்று காலை அரண்மனைக்கு வரவே எண்ணியிருந்தேன். அதற்குள் தியாகவிடங்கரின் மகள் நடுவில் தலையிட்டு எனக்கு ஏமாற்றத்தை அளித்து விட்டாள். அந்தப் பொல்லாத பெண்ணுக்கு ஒரு நாள் தகுந்த தண்டனை விதிப்பேன்!" என்றார் முதன் மந்திரி.

"ஐயோ! அப்படி ஒன்றும் செய்யாதீர்கள். அவள் நல்ல பெண்ணோ, பொல்லாத பெண்ணோ, நான் அறியேன். ஆனால் அருள்மொழியைக் கடலில் மூழ்கிப் போகாமல் காப்பாற்றியவள் பூங்குழலிதான் அல்லவா?"

"கடவுள் காப்பாற்றினார் என்று சொல்லுங்கள், தாயே! பாற்கடலில் பள்ளிகொண்ட பகவான் காப்பாற்றினார். அவருடைய அருள் இல்லாவிட்டால், இந்தச் சிறு பெண்ணால் என்ன செய்துவிட முடியும்? ஜோதிட சாஸ்திரம் உண்மையானால், கிரகங்கள் — நட்சத்திரங்களின் சஞ்சார பலன்கள் மெய்யானால், இளவரசரைக் கடலும் தீயும் புயலும் பூகம்பமும் கூட ஒன்றும் செய்ய முடியாது..."

"இறைவன் அருளின்றி எதுவும் நடவாதுதான். ஆனால் இறைவனுடைய சக்தியும் மனிதர்கள் மூலமாகத்தானே இயங்க வேண்டும்? பூங்குழலியை மறுபடியும் நாகைப்பட்டினத்துக்கு அனுப்ப எண்ணியிருக்கிறேன், ஐயா! அல்லது, தாங்கள் வேறு விதமாக எண்ணினால்,— பகிரங்கமாகவே அருள்மொழியை இங்கு வரச் செய்யலாம் என்று கருதினால்..."

"இல்லை, தாயே! இல்லை! சிம்மாதனம் யாருக்கு என்பது நிச்சயமாகும் வரைக்கும் அருள்மொழி வர்மனைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ளாமலிருப்பதே நல்லது. தங்கள் தந்தையை இன்று முடிவாகக் கேட்டுவிட எண்ணியிருக்கிறேன். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதாயிருந்தால், தங்கள் தம்பியை மறுபடியும் ஈழநாட்டுக்குத் திருப்பி அனுப்பி விடுவது நல்லது. அருள்மொழி வர்மர் இங்கு இருக்கும்போது மதுராந்தகருக்கு மகுடம் சூட்டச் சோழ நாட்டு மக்கள் ஒருநாளும் உடன்பட மாட்டார்கள். சோழ நாடு பெரும் ரணகளமாகும்; சோழ நாட்டின் நதிகளில் எல்லாம் இரத்த வெள்ளம் பெருகி ஓடும்..."

"ஐயா! அப்படியானால் பூங்குழலியையும் சேந்தன் அமுதனையும் மறுபடி நாகைப்பட்டினத்துக்கு அனுப்புவதே நல்லதல்லவா?"

"அதுதான் நல்லது. சக்கரவர்த்தி விரும்பினால் ஒருமுறை அருள்மொழி வர்மர் இரகசியமாகத் தஞ்சைக்கு வந்து விட்டுத் திரும்பிப் போகலாம்!"

"ஆம்; ஆம்! மந்தாகினி தேவியும் அருள்மொழியும் உயிரோடிருக்கிறார்கள் என்பதை ஒருமுறை கண்ணால் பார்த்துத் தெரிந்து கொண்டால் தான் சக்கரவர்த்தியின் உள்ளம் அமைதி அடையும்."

"பெரிய இளவரசரைப் பற்றித் தங்கள் தந்தைக்கு எவ்விதக் கவலையும் இல்லை அல்லவா?"

"இல்லவே இல்லை. ஆதித்த கரிகாலனுக்கு அபாயம் விளைவிக்கக் கூடியவர்கள் இந்த உலகத்திலேயே இல்லை என்று சக்கரவர்த்தி நம்பியிருக்கிறார். தாங்கள் என்ன நினைக்கிறீர்கள், ஐயா!"

"எனக்கு என்னமோ அவ்வளவு நம்பிக்கை இல்லை. போர்க்களத்தில் பெரிய இளவரசர் அஸகாய சூரர்தான். ஆனால் மற்ற இடங்களில் அவரை ஏமாற்றுவதும் வஞ்சிப்பதும் கஷ்டமல்ல. பழுவேட்டரையர்கள் அவரை விரோதிக்கிறார்கள். பழுவூர் இளைய ராணி அவருக்கு எதிராக ஏதோ பயங்கரமான இரகசியச் சூழ்ச்சி செய்து வருகிறாள். இந்த இரண்டு செய்திகளையும் கரிகாலருக்கு என் சீடன் மூலம் சொல்லி அனுப்பினேன். ஆயினும் பலன் இல்லை. தஞ்சாவூருக்கு எவ்வளவு சொல்லியும் வரமறுத்தவர் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குப் போயிருக்கிறார்..."

"ஐயா! பழுவூர் இளைய ராணி எங்கள் சகோதரியாயிருக்கக் கூடும் என்று நான் என் தமையனுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறேன். அருகிலிருந்து காப்பாற்றும் படியும் வாணர் குலத்து வீரருக்குச் சொல்லி அனுப்பினேன். ஆகா! வல்லவரையர் மட்டும் இப்போது இங்கே இருந்திருந்தால், நாகைப்பட்டினத்துக்கு அனுப்பி யிருக்கலாம்..."

"அந்தப் பிள்ளை ஏதாவது சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளாமலிருப்பதற்கு நானும் என் சீடனை அனுப்பியிருப்பேன். இப்போது கூடத் தாங்கள் பூங்குழலியை அனுப்பினால், பின்னோடு திருமலையையும் அனுப்ப உத்தேசிக்கிறேன்."

"போனவர்கள் இன்னும் வந்து சேரவில்லையே? என் பெரியன்னை வந்து விட்டால் என் நெஞ்சிலிருந்து முக்கால் வாசி பாரம் இறங்கிவிடும், ஐயா! அவர் வந்தவுடனே, தாங்கள் என் தந்தையைச் சந்தித்துச் சொல்லி விடுவீர்கள் அல்லவா? நான் என் அன்னையிடம் அடிபணிந்து எல்லாக் கதையும் சொல்லியாக வேண்டும்..."

"ஆகா! மலையமான் மகளுக்குத்தான் எத்தனை மனத் துன்பங்கள்! அதோடு, திருக்கோவலூர்க் கிழவனுக்கு இதெல்லாம் தெரியும்போது அவன் என்ன செய்யப் போகிறானோ? தன் பேரப்

பிள்ளைகளுக்குப் பட்டம் இல்லை என்று தெரிந்தால், இந்த நாட்டையே அழித்து விடுவேன் என்று ஒருவேளை மலையமான் கிளம்பக் கூடும்..."

"என் பாட்டனாரைச் சரிக்கட்டும் வேலையை என்னிடம் விட்டு விடுங்கள். இந்தப் பெண் வானதி இருக்கிறாளே, இவளுடைய பெரிய தகப்பனாரைப் பற்றித்தான் எனக்குக் கவலையாயிருக்கிறது. கொடும்பாளூர்ப் பெண் சோழ சிங்காதனத்தில் ஒருநாள் வீற்றிருக்கப் போகிறாள் என்று அவர் ஆசை கொண்டிருக்கிறாராம். இந்தப் பெண்ணின் மனதிலே கூட அந்த ஆசை இருக்கிறது..."

வானதி இப்போது குறுக்கிட்டு, ஆத்திரம் நிறைந்த குரலில், "அக்கா!..." என்றாள்.

அந்தச் சமயத்தில், வானதி மேலே பேசுவதற்குள், பூங்குழலி உள்ளே பிரவேசித்தாள். அவள் தனியாக வந்தது கண்டு மூன்று பேரும் சிறிது துணுக்குற்றார்கள்.

"கரையர் மகளே! உன் அத்தை எங்கே? திருமலை எங்கே?" என்று முதன் மந்திரி பரபரப்புடன் கேட்டார்.

"ஐயா! என் கர்வம் பங்கமுற்றது. நான் சொல்லிப் போனபடி அத்தையை இங்கு கொண்டு வந்து சேர்க்க முடியவில்லை."

"நீங்கள் போவதற்குள்ளேயே காணோமா? அல்லது வருவதற்கு மறுத்து விட்டாளா? அப்படியானால்..."

"இல்லை, ஐயா! கோட்டைக்குள்ளே அழைத்துக் கொண்டு வந்து விட்டோம். அதற்குப் பிறகு தான் ஜனக் கூட்டத்திலே அகப்பட்டு அத்தை காணமற் போய் விட்டார்!" என்றாள் பூங்குழலி. பின்னர், அச்சம்பவம் பற்றிய பின்வரும் விவரங்களைக் கூறினாள் :—

மந்தாகினி தேவி நல்ல வேளையாகச் சேந்தன் அமுதன் வீட்டிலேயேதான் இருந்தாள். அவள் அங்கேயே இருக்கும்படியான காரணங்கள் நேர்ந்திருந்தன. நேற்றிரவு அடித்த புயலில் அமுதனுடைய வீடு சின்னாபின்னமடைந்திருந்தது. தோட்டத்திலிருந்த மரம் ஒன்று வீட்டுக்கூரை மேலேயே விழுந்திருந்தது. சேந்தன் அமுதனோ முதல் நாளிரவு மழையில் நனைந்த காரணத்தினால் கடும் சுரம் வந்து படுத்துப் பிதற்றிக் கொண்டிருந்தான். இரண்டு சகோதரிகளும் விழுந்த மரங்களை அகற்றி வீட்டைச் சரிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். பூங்குழலியைக் கண்டதும் மந்தாகினி மகிழ்ச்சி அடைந்தாள். திருமலையைக் கண்டு கொஞ்சம் தயங்கினாள். அவன் நம்மைச் சேர்ந்தவன் என்று பூங்குழலி கூறிய பிறகு தைரியம் அடைந்தாள். வழியில் பூங்குழலியும் திருமலையும் ஊமை ராணியிடம் என்ன சொல்லுவது, எவ்வாறு சொன்னால் அவள் தயங்காமல் தங்களுடன் வருவாள் என்று பேசி முடிவு செய்திருந்தார்கள். அந்தப்படியே பூங்குழலி அவள் அத்தையிடம் கூறினாள். சக்கரவர்த்தி நோய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருப்பதாகவும், எந்த நேரத்திலும் இந்த மண்ணுலகை விட்டுப் போய் விடலாமென்றும், அவருடைய மூச்சுப் பிரிவதற்கு முன்னால் ஊமை ராணியை ஒரு தடவை பார்க்க ஆசைப் படுகிறார் என்றும், ஊமை ராணியை அவர் இத்தனை காலமாகியும் மறக்கவில்லையென்றும், அவளைப் பார்த்தால் ஒரு வேளை அவர் புதிய பலம் பெற்று இன்னும் சில காலம் உயிர் வாழக் கூடும் என்றும் சமிக்ஞை பாஷையில் தெரியப்படுத்தினாள். அதற்காகவேதான் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் அவளை எப்படியாவது பிடித்து வர ஆட்களை அனுப்பியதாகவும், முதன் மந்திரியின் அரண்மனையிலேதான் முதல் நாளிரவு தான் தங்கியிருந்ததாகவும் கூறினாள். சக்கரவர்த்தியின் அருமைப் புதல்வி குந்தவைதேவி ஊமை ராணியைத் தன் தந்தையிடம் அழைத்துப் போவதற்காக முதன் மந்திரி வீட்டில் காத்திருப்பதாகவும் தெரியப்படுத்தினாள். இதையெல்லாம் ஒருவாறு தெரிந்து கொண்ட பிறகு மந்தாகினி பூங்குழலியுடனும் திருமலையுடனும் புறப்பட்டு வர இசைந்தாள். கோட்டை வாசலுக்கு அவர்கள் வந்து சேர்ந்த போது, சக்கரவர்த்தியின் வேளக்காரப் படையினர் கோட்டைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் போகட்டும் என்று மூன்று பேரும் ஒதுங்கி நின்றார்கள். வேளக்காரப் படையை மந்தாகினி கண் கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். வேளக்காரப் படையைத் தொடர்ந்து ஒரு பெருங் கூட்டம் கோட்டைக்குள்ளே பிரவேசித்தது. அவர்களைத் தடுத்து நிறுத்தவும் கோட்டைக் கதவுகளைச் சாத்தவும் காவலர்கள் செய்த முயற்சி பலிக்கவில்லை. "இந்தக் கூட்டத்தோடு நாம் போக வேண்டாம்; முதன் மந்திரி அரண்மனைக்குப் போகப்

பிரத்தியேகமான சுரங்க வழி இருக்கிறது. அதன் வழியாகப் போகலாம்" என்றான் திருமலை. இதைப் பற்றிப் பூங்குழலி அவளுடைய அத்தைக்குச் சொல்லப் பிரயத்தனப்பட்டாள். ஊமை ராணி அதைக் கவனியாமல் கோட்டைக்குள் போகும் கூட்டத்தோடு சேர்ந்து போகத் தொடங்கினாள். திருமலையும் பூங்குழலியும் பின்னோடு சென்றார்கள். கோட்டைக்குள் பிரவேசித்த பிறகும், திருமலை வேறு தனி வழியாகப் போகலாம் என்று சொன்னதைப் பூங்குழலியின் அத்தை பொருட்படுத்தவில்லை. கூட்டத்துடன் கலந்தே சென்றாள். கூட்டத்தைப் பார்த்துப் பயப்படும் சுபாவம் உடையவள் இம்மாதிரி செய்வதைக் கண்டு மற்ற இருவருக்கும் வியப்பாயிருந்தது. கொஞ்ச தூரம் போன பிறகு கூட்டத்தில் சிலர் மந்தாகினியைக் குறிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தார்கள். "இந்த அம்மாளைப் பார்த்தால் பழுவூர் இளைய ராணியின் ஜாடையாக இல்லையா?" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். திருமலைக்கும் பூங்குழலிக்கும் இது கவலையை அளித்தது. அவர்கள் மந்தாகினிக்கு முன்னால் போய் நின்று தடுத்து நிறுத்த முயன்றார்கள். இதற்குள் ஆழ்வார்க்கடியானைப் பார்த்தவர்கள் சிலர் "இவன் யாரடா வைஷ்ணவன்? பெண் பிள்ளையைத் தொந்தரவு படுத்துகிறான்?" என்றார்கள். இந்த வார்த்தைகள் காதில் விழுந்து வேளக்காரப்படையில் பின்னால் போனவர்கள் திரும்பி வந்தார்கள். ஊமை ராணியைச் சூழ்ந்து கொண்டு மற்றவர்களை அப்புறப் படுத்தினார்கள். அந்த நெருக்கடியில் திருமலையும் பூங்குழலியும்கூட அப்பால் தள்ளப்பட்டு விலகிப் போக நேர்ந்தது. வேளக்காரப் படையில் ஒருவன் மந்தாகினி தேவியிடம் "அம்மா! நீ யார்? உன்னை யார் தொந்தரவு செய்தார்கள், சொல்! அவனை இங்கேயே தூக்கிலே போட்டு விடுகிறோம்!" என்று கேட்டான். ஊமை ராணி மறுமொழி சொல்லாமல் நின்றாள். இன்னும் சிலர் கேட்டதற்கும் அவள் பதில் சொல்லவில்லை. இதற்குள் ஒருவன் "இவளைப் பார்த்தால் பழுவூர் ராணி ஜாடையாக இல்லையா?" என்றான். இன்னொருவன், "அப்படித்தான் இருக்க வேண்டும். அதனாலேதான் இவ்வளவு கர்வமாயிருக்கிறாள்!" என்றான். "பழுவூர்க் கூட்டமே கர்வம் பிடித்தகூட்டம்!" என்றான் மற்றொருவன். இந்த நிகழ்ச்சிகள் சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்குச் சமீபத்தில் நிகழ்ந்தன. ஆகையால் என்ன சச்சரவு என்று தெரிந்து கொள்வதற்காகப் பழுவூர் வீரர்கள் சிலர் அங்கே வந்தார்கள். "பழுவூர்க் கூட்டமே கர்வம் பிடித்த கூட்டம்" என்று வேளக்கார வீரன் ஒருவன் கூறியது அவர்கள் காதில் விழுந்தது. "யாரடா பழுவூர்க் கூட்டத்தைப்பற்றி நிந்தனை செய்கிறவன்? இங்கே முன்னால் வரட்டும்" என்றான் பழுவூர் வீரன் ஒருவன். "நான்தானடா சொன்னேன்! என்னடா செய்வாய்?" என்று வேளக்கார வீரன் முன் வந்தான். "நீங்கள்தானடா கர்வம் பிடித்தவர்கள். உங்கள் கர்வம் பங்கமடையும் காலம் நெருங்கி விட்டது!" என்றான் பழுவூர் வீரன். "ஆகா! எங்கள் இளவரசரைக் கடலில் மூழ்கடித்து விட்டதனால் இப்படிப் பேசுகிறாயா? உங்களைப் போன்ற பாதகர்கள் இருப்பதாலேதான் புயல் அடித்து ஊரெல்லாம் பாழாகிவிட்டது!" என்றான் கூட்டத்தில் ஒருவன். பழுவூர் வீரன் "என்னடா சொன்னாய்?" என்று அவனைத் தாக்கப் போனான். வேளக்கார வீரன் அவனைத் தடுத்தான். பின்னர் கூட்டத்தில் கை கலப்பும் குழப்பமும் கூச்சலும் எழுந்தன. "பழுவூர் வள்ளல்கள் வாழ்க!" என்று சிலரும், "மூன்று உலகம் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க!" என்று சிலரும் கோஷமிட்டார்கள். "கொடும்பாளூர் வேளார் வாழ்க!" "திருக்கோவலூர் மலையமான் வாழ்க!" என்ற குரல்களும் எழுந்தன. அச்சமயத்தில் சின்னப் பழுவேட்டரையரே குதிரைமீது ஆரோகணித்து அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் சண்டை நின்றது. ஜனங்களும் கலைந்து நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். வேளக்காரப் படையினர் முன்னால் சென்றார்கள். பழுவூர் வீரர்கள் காலாந்தக கண்டரைச் சூழ்ந்துகொண்டு நடந்ததைத் தெரிவித்தார்கள். பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் வீதி ஓரத்தில் ஒதுங்கினார்கள். சுற்று முற்றும் கூர்ந்து கவனித்தார்கள். மந்தாகினியைக் காணவில்லை.

"ஐயோ! இது என்ன? இப்படி நேர்ந்து விட்டதே! தலைநகரில் அரசாட்சி அழகாக நடக்கிறது! அத்தையை எப்படிக் கண்டு பிடிப்பது? ஏதாவது கெடுதல் நேர்ந்திருக்குமோ? யாரேனும் பிடித்துக் கொண்டு போயிருப்பார்களோ?" என்று பூங்குழலி கவலைப்பட்

டாள். காலாந்தக கண்டரும் பழுவூர் வீரர்களும் போன பிறகு நாலாபுறமும் தேடிப் பார்த்தார்கள். மந்தாகினியைக் காணவில்லை. திருமலை "நான் இன்னும் சிறிது நேரம் தேடிப் பார்க்கிறேன். நீ சீக்கிரம் சென்று முதன் மந்திரியிடமும் இளையபிராட்டியிடமும் சொல்லு! நாம் இரண்டு பேர் மட்டும் தேடினால் போதாது. முதன் மந்திரியும் இளைய பிராட்டியும் ஏதேனும் ஏற்பாடு செய்வார்கள்" என்றான். பூங்குழலி போவதற்குத் தயங்கினாள். மறுபடியும் ஆழ்வார்க்கடியான், "நான் சொல்வதைக் கேள். உன் அத்தைக்கு ஒன்றும் நேர்ந்திருக்க முடியாது. ஜனக் கூட்டத்தில் யாரோ தெரிந்த மனிதன் ஒருவனை உன் அத்தை பார்த்திருக்கிறாள். அவள் ஒரு திக்கையே கவனமாக நோக்கியதிலிருந்து ஊகிக்கிறேன். அதனாலேதான் கூட்டத்தோடு சேர்ந்து வந்தாள். இப்போதும் அவனைத் தொடர்ந்துதான் போயிருக்கிறாள் என்று தோன்றுகிறது. எப்படியும் கண்டு பிடித்து விடலாம். நீ போய் முதன் மந்திரியிடம் சொல்லு!" என்றான். பூங்குழலி முதன் மந்திரியின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள்.........

இதையெல்லாம் கேட்ட குந்தவை பெரிதும் கவலை அடைந்தாள். அநிருத்தர் அவ்வளவு கவலை கொண்டதாகத் தெரியவில்லை. "பார்த்தீர்களா, இளவரசி! கலகப் பிசாசு எப்போது சந்தர்ப்பம் கிட்டும் என்று காத்துக்கொண்டிருப்பதை அறிந்து கொண்டீர்களா? அருள்மொழி வர்மர் உயிரோடிருக்கிறார் என்று தெரிய வேண்டியதுதான். ராஜ்யமெங்கும் தீ மூண்டு விடும்!" என்றார்.

"தாங்கள் முதன் மந்திரியாயிருக்கும் வரையில் அப்படி ஒன்றும் நேராது. இப்போது, என் பெரியன்னையைப் பற்றிச் சொல்லுங்கள். நான் பயந்தது போலவே ஆகிவிடும் போலிருக்கிறதே! அவரை எப்படிக் கண்டு பிடிப்பது?" என்று கேட்டாள்.

"அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். கோட்டைக்குள் வந்து விட்டபடியால் இனி நான் அறியாமல் வெளியில் போக முடியாது. அதற்குத் தக்க ஏற்பாடு செய்து விடுகிறேன். தேடவும் ஏற்பாடு செய்கிறேன். இனி, சக்கரவர்த்தியைப் பார்க்காமல் மந்தாகினி தேவி இவ்விடம் விட்டுப் போகவும் மாட்டாள்!" என்றார்.

அத்தியாயம் 27

பொக்கிஷ நிலவறையில்

பூங்குழலி மந்தாகினி தேவியை விட்டுப் பிரிந்த இடத்தில் நாம் இப்போது அந்த மாதரசியைத் தொடர்வது அவசியமாகிறது. அவள் கூட்டத்திலும் குழப்பத்திலும் மறைந்துவிட்ட காரணம் பற்றி ஆழ்வார்க்கடியான் கூறியது உண்மையேயாகும். வேளக்காரப் படையுடன் தொடர்ந்து கோட்டைக்குள் பிரவேசித்த கூட்டத்தில் மந்தாகினி ரவிதாஸன் என்னும் சதிகாரனைப் பார்த்துவிட்டாள். ஏதேனும் ஒரு புலன் குறைவாயுள்ளவர்களுக்கு மற்றப் புலன் நன்கு இயங்குவது இயல்பல்லவா? மந்தாகினிக்கோ காது கேளாது; வாய் பேசாது. அவ்வளவுக்கு, அவளுடைய கண் பார்வை கூர்மையாயிருந்தது. ஆழ்வார்க்கடியானும், பூங்குழலியும் மந்தாகினி தேவியையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் அவர்கள் கண்ணிற்குப் படாத ரவிதாஸன் மந்தாகினியின் பார்வைக்கு இலக்கானான்.

வரப்போகும் நன்மை தீமைகளை முன்னாலேயே அறிந்து கொள்ளக் கூடிய இயற்கையான உணர்ச்சி அறிவும் மந்தாகினிக்கு இருந்தது. ஆதலின் ரவிதாஸன் ஏதோ தீய காரியத்துக்காகவே இங்கே வந்திருக்கிறான் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். ஏற்கெனவே ஈழநாட்டில் அருள்மொழி வர்மனை ரவிதாஸன் கொல்ல முயன்றதையும் அவள் அறிந்திருந்தாள் அல்லவா? ஆதலின் கூட்டத்தோடு கூட்டமாகத் தஞ்சையின் வீதிகளில் சென்றபோது அவள் பார்வை ரவிதாஸனை விட்டு அகலவில்லை.

குழப்பத்தின் உச்சமான நிலையில் சின்னப் பழுவேட்டரையர் குதிரைமேலேறி வந்த சமயத்தில் ஜனக்கூட்டம் சடசடவென்று கலைந்ததல்லவா? அச்சமயம் ரவிதாஸனும் இன்னொரு மனிதனும் ஒரு சந்து வழியில் அவசரமாகப் புகுந்து செல்வதை மந்தாகினி பார்த்தாள். உடனே அந்தத் திசையைக் குறி வைத்து அவளும் வேகமாகச் சென்று, அதே சந்து வழியில் பிரவேசித்தாள்.

இது நிகழ்ந்த ஒரு நிமிட நேரத்தில், ஜனக் கூட்டத்தினால் மோதித் தள்ளப்பட்ட திருமலையும் பூங்குழலியும் மந்தாகினியைக் கவனிக்க முடியவில்லை. பிறகு

பார்த்ததில் அவனைக் காணவில்லை. மந்தாகினி சந்து வழியில் புகுந்த பிறகு இரண்டொரு தடவை திரும்பிப் பார்த்தாள், பூங்குழலியும் திருமலையும் வருகிறார்களோ என்று. அவர்களைக் காணவில்லை. ஆனாலும் ரவிதாஸனைத் தொடர்வதே முக்கியமான காரியம் என்று எண்ணிச் சென்றாள். இந்த வரலாற்றின் ஆரம்பத்தில் வந்தியத்தேவன் காலாந்தக கண்டரின் ஆட்களிடமிருந்து தப்பிச் சென்ற வழியிலேயே ரவிதாஸனும் அவனுடைய தோழனும் சென்றார்கள். ரவிதாஸனுடைய தோழனையும் முன்னம் நாம் சந்தித்திருக்கிறோம். திருப்புறம்பயம் பள்ளிப்படையிலே நள்ளிரவு சதிக் கூட்டத்திலே நாம் பார்த்த சோமன் சாம்பவன் என்பவன்தான் அவன்.

அவ்விருவரும் அதி வேகமாகச் சந்து பொந்துகளில் புகுந்து சென்றார்கள். ஆங்காங்கு விழுந்து கிடந்த மரங்களைப் பொருட்படுத்தாமல் தாண்டிக் குதித்துச் சென்றார்கள். மழைத் தண்ணீர் தேங்கியதால் ஏற்பட்டிருந்த சேற்றுக் குட்டைகளையும் கவனியாமல் சென்றார்கள். இன்னமும் இலேசாகக் காற்று அடித்துக் கொண்டிருந்தபடியால் மரக்கிளைகள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. கிளைகளிலிருந்து அவ்வப்போது தண்ணீர்த் துளிகள் சலசல வென்று விழுந்தன. தங்களை யாரும் பின் தொடர்வார்கள் என்ற எண்ணமோ அவர்களுக்கு லவலேசமும் இல்லை. ஆகையால் அவர்கள் திரும்பிப் பாராமலே விரைந்து சென்றார்கள். திரும்பிப் பார்த்திருந்தாலும் மந்தாகினி தேவியை அவர்கள் பார்த்திருக்க முடியாது.

கடைசியில், அவர்களுடைய துரிதப் பிரயாணம் பெரிய பழுவேட்டரையருடைய அரண்மனைத் தோட்டத்தின் பின் மதில் ஓரத்தில் வந்து நின்றது. புயலினால் வேருடன் பறிக்கப்பட்ட மரம் ஒன்று அந்த மதில் மேலே விழுந்து முறிந்து கிடந்தது. ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் அந்த மரத்தின் மீது எளிதில் ஏறி மதிலைக் கடந்து அப்பால் தோட்டத்தில் குதித்தார்கள். அவர்கள் குதிப்பதைப் பார்த்த மந்தாகினி தேவியும் சிறிது நேரத்துக்கெல்லாம் அதே மரங்களின்மீது ஏறி அப்பாலிருந்த தோட்டத்தில் இறங்கினாள்.

ரவிதாஸன் சோமன் சாம்பவனைச் சற்றுத் தூரத்திலேயே நிறுத்தி விட்டுப் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையை அணுகினான். பெரிய பழுவேட்டரையரும் பழுவூர் இளைய ராணியும் இல்லாதபடியால் அரண்மனை சூன்யமாகக் காணப்பட்டது. எனினும் பெண்களின் பேச்சுக் குரல் மட்டும் கேட்டது.

ஒரு முறை இரண்டு தாதிப்பெண்கள் அந்த மாளிகையின் பின் முகப்புக்கு வந்தார்கள். தோட்டத்து மரங்கள் பல முறிந்து விழுந்து கிடந்ததைப் பார்த்தார்கள். "ஆகா! அனுமார் அழித்த அசோக வனம் மாதிரியல்லவா இருக்கிறது?" என்றாள் ஒருத்தி. "நம்முடைய சீதாதேவி இங்கே இச்சமயம் இருந்திருந்தால், ரொம்ப மனவேதனைப் பட்டிருப்பாள்!" என்றாள் இன்னொருத்தி. சற்று நேரம் இவ்விதம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் திரும்ப உள்ளே செல்லும் சமயத்தில் ரவிதாஸன் வாயைக் குவித்துக் கொண்டு ஆந்தைக் குரல் போன்ற ஒலி உண்டாக்கினான். தாதிப் பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். ரவிதாஸன் நன்றாக மறைந்து கொண்டிருந்தான். தாதிகளில் ஒருத்தி "பாரடி! பட்டப் பகலில் கோட்டான் கத்துகிறது! நேற்று அடித்த புயலில் ஆந்தைக்கும் புத்தி சிதறி விட்டது!" என்றாள். இன்னொருத்தி ஒன்றும் சொல்லவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் மறுமொழி சொல்லாமல் சென்றவள் திரும்பி வந்தாள். பழுவூர் அரண்மனைக்கும் பொக்கிஷ நிலவறைக்கும் நடுவில் இருந்த வஸந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தாள். இந்த மண்டபத்திலேதான் வந்தியத்தேவன் பழுவூர் ராணியைச் சந்தித்தான் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அங்கே வந்து நின்று அந்தத் தோழிப் பெண் தோட்டத்தை உற்றுப் பார்த்தாள். மறுபடியும் ஆந்தையின் குரல் கேட்டது. குரல் வந்த இடத்தை நோக்கி அந்தப் பெண் நடந்து வந்தாள். மரத்தின் மறைவிலிருந்து ரவிதாஸனும் முன்னால் வந்தான். காந்த சக்தி கொண்ட கண்களால் அவளை விரித்துப் பார்த்தான்.

"மந்திரவாதி! வந்து விட்டாயா? இளையராணி கூட இங்கே இல்லையே? எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

"பெண்ணே! இளைய ராணி அனுப்பித்தான் வந்திருக்கிறேன்!" என்றான் ரவிதாஸன்.

"போன இடத்திலும் ராணியை நீ விடவில்லையா? இங்கே எதற்காக வந்தாய்? யாருக்காவது தெரிந்தால்......"

"தெரிந்தால் என்ன முழுகிவிடும்?"

"அப்படிச் சொல்லாதே! சின்னப் பழுவேட்டரையர் எங்கள் பேரில் சந்தேகம் கொண்டிருக்கிறார். என்னை அழைத்து ஒருநாள் கடுமையாக எச்சரித்தார். மறுபடியும் மந்திரவாதி வந்தால் தம்மிடம் வந்து சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்......"

"அவன் கெட்டான், போ! அவர்களுடைய காலமெல்லாம் நெருங்கிவிட்டது. நீ ஒன்றும் கவலைப்படாதே! நிலவறையின் சாவி வேண்டும். சீக்கிரம் கொண்டு வந்து கொடு!" என்றான் ரவிதாஸன்.

"ஐயையோ! நான் மாட்டேன்!"

"இதோ பார், உன் எஜமானியின் மோதிரம்!" என்று ரவிதாஸன் இளைய ராணியின் முத்திரை மோதிரத்தைக் காட்டினான்.

"இதை நீ எங்கே திருடினாயோ, என்னமோ, யார் கண்டது?"

"அடி பாவி! என்னையா திருடன் என்கிறாய்? இளையராணியே என்னைக் கண்டு நடுநடுங்குவதைப் பார்த்து விட்டுமா இப்படிச் சொல்கிறாய்? பார்! இன்றிரவே ஒன்பது பிசாசுகள் வந்து உன்னை உயிரோடு மயானத்துக்குத் தூக்கிச் சென்று......"

"வேண்டாம், வேண்டாம்! உன் பிசாசுகள் எல்லாம் உன்னிடமே இருக்கட்டும். எனக்கென்ன வந்தது? இளைய ராணியின் மோதிரத்தைக் காட்டினால் நீ கேட்டதைக் கொண்டுவந்து கொடுத்து விடுகிறேன். ஆனால் அவசரப்படாதே! தோட்டம் அழிந்து கிடப்பதைப் பார்க்க அடிக்கடி பெண்கள் இங்கே வருகிறார்கள். எல்லாரும் சாப்பிடும் சமயத்தில் நான் உன்னிடம் சாவியைக் கொண்டு வந்து கொடுக்கிறேன். அது வரை பொறுத்திரு......!"

"ஆகட்டும்; எனக்கும் கொஞ்சம் சாப்பாடு கொண்டு வா! சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது. நிறையக் கொண்டு வா!" என்றான் ரவிதாஸன்.

தாதிப் பெண் போன பிறகு ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் விழுந்து கிடந்த மரம் ஒன்றின்மேல் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அறியாத வண்ணம் மந்தாகினியும் சற்றுத் தூரத்தில் மறைவான இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

ரவிதாஸனும் தாதிப் பெண்ணும் பேசியது ஒன்றும் அவளுக்குப் புரியாவிட்டாலும் ஏதோ நடக்கப் போகிறதென்று ஊகித்துக் கொண்டாள்.

வெகு நேரம் கழித்து அத் தாதிப் பெண் திரும்ப வந்தாள். ரவிதாஸன் எழுந்து முன்னால் போனான். அவள் கொண்டு வந்திருந்த சோற்று மூட்டையையும் சாவிக் கொத்தையும் வாங்கிக் கொண்டான். பிறகு, வஸந்த மண்டபத்தை அடைந்து அங்கிருந்து பொக்கிஷ நிலவறைக்குச் சென்ற நடைபாதையில் இருவரும் சென்றார்கள். ஒரு சாவி, இரண்டு சாவி, மூன்றாவது சாவியையும் போட்டுத் திருப்பிய பிறகு, பூட்டுத் திறந்தது. நிலவறையின் உள்ளே ஒரே கும்மிருட்டாக இருந்தது.

ரவிதாஸனும் தாதிப் பெண்ணைப் பார்த்து, "அடடா! ஒன்று மறந்து விட்டேனே! இந்த இருட்டறையில் விளக்கு இல்லாமல் எப்படிப் போவது? ஒரு விளக்காவது தீவர்த்தியாவது கொண்டு வா!" என்றான்.

"பட்டப்பகலில் தீவர்த்தியும், விளக்கும் எப்படிக் கொண்டு வருவேன்? யாராவது பார்த்துச் சந்தேகப்பட்டால்?"

"அது எனக்குத் தெரியாது! உனக்கு அவ்வளவு சாமர்த்தியம் இல்லை என்றா சொல்கிறாய்? நான் நம்ப மாட்டேன். தீவர்த்தியாவது தீபமாவது கொண்டு வா! இல்லாவிடில் இராத்திரி பன்னிரண்டு கொள்ளி வாய்ப் பிசாசுகளை அனுப்பி..."

"ஐயையோ! சும்மா இரு! எப்படியாவது கொண்டு வந்து தொலைக்கிறேன்" என்று கூறினாள் அந்தத் தாதிப் பெண்.


"அதற்குள் நானும் சாப்பிட்டு முடிக்கிறேன்" என்றான் ரவிதாஸன்.

தோழிப் பெண் அரண்மனையை நோக்கிச் சென்ற பிறகு ரவிதாஸனும் சோற்று மூட்டையுடன் தோட்டத்துக்குள் பிரவேசித்தான். சோமன் சாம்பவனிடம் வந்தான். அவனிடம் சோற்று மூட்டையைக் கொடுத்து, "ஒரு வேளை இரண்டு மூன்று நாள் நிலவறையிலேயே நீ இருக்கும்படி நேரலாம். சரியான சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் அல்லவா? ஆகையால் இந்தச் சோற்று மூட்டையை வைத்துக் கொள். வேலை எடுத்துக் கொண்டு என்னோடு சத்தமிடாமல் வா! அந்தப் பெண் தீவர்த்தி கொண்டு வரப் போயிருக்கிறாள். அதற்குள் நீ நிலவறைக்குள் புகுந்துவிட வேண்டும்!" என்று சொன்னான்.

இருவரும் துரிதமாகச் சென்றார்கள். மந்தாகினியும் அவர்கள் அறியாமல் பின் தொடர்ந்தாள். (தொடரும்)

திருப்தியே அடையாத வர்களுக்கும் திருப்தி யளிக்கும் ரகங்கள்!

தொழில் முறைத் தேவைகளுக்கும், சர்க்கார் இலாக்காக்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்ற முறையில் மிகச் சிறந்த ரகங்களையே ரகுவன்ஷி மில்ஸ் லிமிடெட் உற்பத்தி செய்கிறது.




நூல்கள்: மிகவும் சன்னமானதும், மிருதுவாயும் உறுதியாயும் உள்ள ரகங்கள். உயர்ந்த ரகத் துணிகளும் உடைகளும் கயிறுகளும் நாடாக்களும் தயாரிக்க மிகவும் ஏற்றவை.

6 முதல் 60ம் நெம்பர் வரையில் ஒற்றை அல்லது மடித்த நூல்கள், கோன்கள் அல்லது சீல்கள் முதலியவை.

CORDED OR COMBED

ஸ்டேபிள் நூல்: 20, 30, 40ம் நெம்பர்களில் ஒற்றை அல்லது சீல்கள் முதலியவை.

சீட்டிகள், மல், வாயில், பாப்லின், புடவைகள் முதலியன. சார்க்கம், வெளுத்தது அல்லது சாயம் தோய்த்தது.



இவ் உடைகளுக்கு ஏற்றதும் பல மதிப்புள்ளதுமான நூல்கள் விலையும் விசேஷமானது.

ரகுவன்ஷி மில்ஸ் லிமிடெட்


விற்பனை ஏஜண்டுகள்:

ஸுரேஷ்சந்திர மகன்லால் & கோ. லிட்.,

52/54, நகோடாத் தெரு., தம்பாகாந்தா, பம்பாய் 3.

டாடா அக்ரிகோ கருவிகள்

உறுதியானவை, பலமானவை, நீடித்துழைக்கக்கூடியவை. அவை ஹை கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டவை. வேலை செய்வதற்கு ஏற்றவாறு அவை தயாரிக்கப்பட்டு தீட்டப்பட்டவை. எல்லாவித சோதனைகளிலும், அக்ரிகோ கருவிகளே சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன.



டாக்க மண்வெட்டி




மேற்கு இந்தியக் கொத்து





ஸ்வான் நெக் மண்வெட்டி



மைசூர் மண்வெட்டி

எல்லாவித நிலங்களுக்கும்

அக்ரிகோ

கருவிகளே தகுதியானவை

தி டாடா அயரன் அண்ட் ஸ்டீல் கம்பனி லிமிடெட்

ஸேல்ஸ் ஆபீஸ்:

23b, நேதாஜி ஸுபாஷ் ரோட், கல்கத்தா-1

கிளை ஆபீசுகள்:

பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், ஹைதராபாத், விஜயநகரம் கண்டோன்மெண்ட், ஜலந்தர் கண்டோன்மெண்ட், கான்பூர்.

AG-3358

சங்கீத சபையின் வெள்ளிவிழா

நீதிபதி டி. எல். வெங்கடராமய்யர்

பாரத தேசத்திற்கு முக்கியமான செல்வங்கள் எவை என்றால் தெய்வ பக்தியும் கலை வளர்ச்சியுந்தான்.

தென்னாட்டில் இவைகள் என்றும் சிறப்புடன் விளங்கின. தெய்வ பக்தியில் நாயன்மார்களும், மத விஷயமாய் ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர் ஆகிய மூன்று மதஸ்தாபகர்களும், சைவ சித்தாந்த ஆசிரியர்களும் செய்துள்ள தொண்டு அபாரமானது. இவர்கள் யாவரும் தென்னாட்டில் தோன்றியவர்கள்.

சங்கீதக் கலையிலும் நமது நாடு அனாதி காலமாய் ஓங்கி வளர்ந்து, சமீப காலத்தில் தியாகய்யர், சாமா சாஸ்திரிகள், தீக்ஷிதர் போன்ற மகான்களால் மேன்மையான பதவியை அடைந்திருக்கிறது.

முன் காலத்தில் சங்கீதக் கலையை அரசர்கள் ஆதரித்து வந்தார்கள். தற்காலம் அந்த ஸ்தானத்தை 'மியூஸிக் அகாடமி'யார் வகித்து, கலையை மேன்மையுடன் காப்பாற்றி வருகிறார்கள் என்று கூறுவது மிகையல்ல.

இந்த ஸ்தாபனத்தில் முத்தய்யா பாகவதர் போன்ற சிறந்த வாக்கேயக்காரர்களும், டைகர் வரதாச்சாரியாரைப் போன்ற சிறந்த காயகர்களும் ஆரம்பம் முதல் செய்த தொண்டின் பயனாக சங்கீத சாஸ்திரத்தின் மர்மங்கள் பிரதி வருஷம் வித்வத் சபையில் நடக்கும் சர்ச்சைகளில் வெளியாகி யிருக்கின்றன. முக்கியமாக ராக லக்ஷணங்களில் பல நூல்களையும், பல கிருதிகளையும் ஆராய்ந்து அதன் முடிவாகச் செய்திருக்கும் தீர்மானங்கள் எக்காலத்திலும் கர்நாடக சங்கீதத்திற்கு வழி காட்டிகளாக விளங்குகின்றன. இப்பொழுது எல்லாப் பிரபல சங்கீத வித்வான்களும், சங்கீத சாஸ்திரத்தில் பயிற்சி யுள்ளவர்களும், சங்கீத ரஸிகர்களும் எல்லோரும் சிரத்தையுடன் இந்த ஸ்தாபனத்தைத் தங்களுடையது என்று ஆர்வத்துடன் நடத்துவதின் காரணமாய்க் கர்நாடக சங்கீதமே மியூஸிக் அகாடமி என்று சொல்லலாம்.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் சங்கீதக் கச்சேரிகள் கேட்டவர்கள், தற்காலத்தில் நடக்கும் கச்சேரிகளைக் கேட்டால் சில மாறுதல்களைக் கவனிக்காமலிருக்க முடியாது. முன் காலத்தில் கச்சேரியில் லக்ஷண ஞானத்துடன் சங்கீதத்தை அனுபவிப்பவர்கள் சிலரே. ராகம், தானம், இவைகளில் சூட்சுமமான பேதங்களை அறிந்து ரஸிப்பவர் மிகச் சொற்பப் பேர்களே இருப்பார்கள். இப்பொழுது அப்படியல்ல. கேட்பவர்களில் பலர், ராகம், தானம், கமக ஜாதிகள் எல்லாவற்றையும் ரஸித்து அனுபவிக்கும் சக்தி வாய்ந்தவர்கள்.

முப்பது வருஷங்களுக்கு முன் கச்சேரிகளில் அனேகமாய் தியாகராஜ ஸ்வாமிகளின் மத்யம காலக் கீர்த்தனங்களைத் தவிர மற்றக் கீர்த்தனங்கள் கேட்பது துர்லபமாக இருக்கும். இப்பொழுது எந்தக் கச்சேரியிலும் விளம்பகாலக் கீர்த்தனங்கள், மத்யம காலக் கீர்த்தனங்கள், முதலில் சொன்ன மூவருடைய கீர்த்தனங்கள், மற்ற வாக்கேயக் காரர்களுடைய கீர்த்தனங்கள் அபரிமிதமாகக் கேட்கலாம். ரவைஜாதிக் கீர்த்தனங்கள், கமக ஜாதிக் கீர்த்தனங்கள், உருக்கமான கீர்த்தனங்கள், கம்பீரமான கீர்த்தனங்கள், ஒரு காலத்தில் பிரபலமாயிருந்து நடுவில் மறைந்திருந்த சில ராகங்களிலுள்ள கீர்த்தனங்கள் — இவைகள் எல்லாவற்றையும் கேட்கலாம். இம்மாதிரியான மாறுதல் ஏற்பட்டதற்குக் காரணம் மியூஸிக் அகாடமி என்றே சொல்ல வேண்டும்.


பரத நாட்டியக் கலையின் முன்னேற்றத்துக்கும் அகாடமியார் காரணஸ்தராவார்கள். ஒரு காலத்தில் சிறப்புடன் விளங்கிய பரத நாட்டியக் கலை, இடைக் காலத்தில் மங்கிப் போய், மறுபடியும் மியூஸிக் அகாடமியாரின் முயற்சியால் பிரகாசத்துடன் விளங்கி வருகிறது.

சமீப காலத்தில் வட இந்தியாவிலிருந்தும், மற்றப் பிரதேசங்களிலிருந்தும் தென்னாட்டிற்கு வந்த கலை அறிஞர்கள், லக்ஷண சங்கீதம் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் தென்னாட்டில் அதிகமாகப் பரவியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தப் புகழ் நாம் பெறுவதற்குக் காரணம் நம்முடைய சிறந்த வாக்கேயக் காரர்களும், அவர்களுடைய சங்கீதத்தைக் காப்பாற்றி வரும் மியூஸிக் அகாடமியுமே யாகும்.

சங்கீத மண்டலம்



எஸ்.வி. பார்த்தசாரதி




ராமநாதபுரம் கிருஷ்ணன்




களக்காடு ராமநாராயணன்



மதுரை சோமசுந்தரம்



சாத்தூர் சுப்பிரமணியம்



கே.வி. நாராயணசாமி

வெள்ளி விழா வித்வத் கோஷ்டி



மணக்கால் ரங்கராஜன்




கல்யாண கிருஷ்ண பாகவதர்



மாயூரம் ராஜம்



டி. ஆர். பாலசுப்ரமணியம்




சி. எஸ். கிருஷ்ணன்



ராமச்சந்திர சாஸ்திரி
புல்லாங்குழல்




விஞ்சமூரி வரதராஜன்



மதுரை வைத்தியநாதன்



குருவாயூர் பொன்னம்மாள்



என். காந்திமதி




பி. ராஜம் அய்யர்




வைத்தியலிங்கம்


வெள்ளி விழா வித்வத் கோஷ்டி




மதுரை டி. வெங்கடேசன்




தேதியூர் நாராயணசாமி



எண்ணப்பாடம் ராமச்சந்திரன்



செம்பை நாராயணன்



ஸ்ரீவைகுண்டம் ராமஅய்யங்கார்



மதுரை பாபு அய்யங்கார்
ஜலதரங்கம்



2. நீலகிரிப் பிரயாணம்

சில நிமிஷங்கள் சிணுங்கிக் கொண்டே படித்த பின்—வரதனின் கையிலிருந்த ஆத்திச் சூடி மறுபடியும் அவன் காலடியில் குப்புற விழுந்தது!

வரதன், சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தபடியே, வராந்தாவின் ஒரு மூலையில் தன் எதிரில் வைக்கப்பட்டிருக்கும் பீங்கான் தட்டிலுள்ள பாலைச் சுவைத்து ரஸித்துக் குடித்துக் கொண்டிருக்கும் நாய்க் குட்டியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனத்தில் என்னென்னவோ எண்ணங்கள் சூறாவளி வேகத்தில் சீறிச் சுழன்று கொண்டிருந்தன.

கொஞ்ச நேரமாயிற்று.

வேலைக்காரக் கிழவி, சோற்றுக் கிண்ணத்துடன் நாய்க் குட்டியிடம் வந்தாள். சோற்றுக் கிண்ணத்தை அதன் எதிரில் வைத்தாள். பாலைக் குடித்துக் கொண்டிருந்த நாய்க்குட்டி பாலைத்தான் குடித்துக் கொண்டிருந்தது; அது சோற்றுக் கிண்ணத்தை ஜாடை மாடையாகக் கூடப் பார்க்கவில்லை! உடனே அவள் நாய்க்குட்டியின் எதிரிலிருந்த பீங்கான் தட்டைச் சட்டென்று இழுத்துப் பின் பக்கமாக மறைத்து வைத்துக் கொண்டாள். சோற்றுக் கிண்ணத்தை அதன் எதிரில் வைத்தாள். நாய்க்குட்டி ஒருகணம் விழித்தது; மறுகணம்...?

அது, பாலை மறந்து சோற்றைத் தின்ன ஆரம்பித்தது! வேலைக்காரக் கிழவி, பால் தட்டைப் பக்குவமாக மறைத்து எடுத்துக் கொண்டு அங்கிருந்து முக மலர்ச்சியுடன் நழுவினாள்!

இத்தனை நேரமும் நடந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த வரதனுக்குப் 'பளிச்'சென்று ஓர் எண்ணம் தோன்றியது.

"இந்த நாய்க்குட்டி, பால் இருக்கும்வரையில்தானே சோற்றை விரும்பவில்லை! பால் தட்டை மறைத்து விட்டால்...? அந்தக் கேடு கெட்ட அடிமைப் பயல் ராஜா இருப்பதனால் தானே, சரசா என்னிடம் கோபித்துக் கொண்டு வெறுத்துக் கேவலமாகப் பேசுகிறாள்! அவனை அங்கிருந்து ஒழித்து விட்டால்...அது சரி, அவனை—ராஜாவை—அங்கிருந்து விரட்டுவது எப்படி?"

வரதன் தீவிரமாக யோசித்தான்.

அந்தச் சமயத்தில் "ஏவ்வ்!" என்று நீண்ட ஏப்பம் விட்டபடி மாடிப் படியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார் அப்பா. அடுத்த கணம்......

வரதன் உலக நீதியை அலற வைத்தான்!

"ம்...வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்!" என்று இரைந்து படிக்க ஆரம்பித்து விட்டான்.

* *

ஆறு நாட்கள் கழிந்தன. ஏழாம் நாள், காலை நேரம். அமைதி கவ்விய பங்களா வராந்தாவில் தன்னந் தனியாக அமர்ந்து என்னவோ யோசித்துக் கொண்டிருந்தான் ராஜா. அவன் அழகு முகம் வாடி வதங்கிக் கிடந்தது! ஏன்......?

"அடேய், ராஜா!..."

இந்தக் குரலைக் கேட்டதும் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான் ராஜா. ஒரு காகிதப் பொட்டலத்துடன் ராஜாவின் எதிரில் வந்து நின்ற வரதன், வெறிச்சோடிக் கிடந்த பங்களாவைப் பார்த்து விழித்தான்.

"என்னடா ராஜா! பங்களா பாழடைந்து கிடக்கிறது! சரசா, அவள் அம்மா எல்லாரும் எங்கே? ஊரில் இல்லையா?" என்று பரக்கப் பரக்க விழித்துக் கொண்டே போலி ஆச்சரியத்துடன் கேட்டான் வரதன்.

சரசா, அவள் அம்மா, அப்பா எல்லாம் எங்கே போயிருக்கிறார்கள்? எப்போது திரும்பி வருவார்கள் என்பதெல்லாம் வரதனுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னமேயே தெரியும்! எனினும், அவன் இப்போது ஒன்றுமே தெரியாதவனைப் போலக் கேட்டுத் துடித்தான்!

ராஜா மெல்ல நிமிர்ந்தான். வரதனை ஒரு விநாடி ஏறிட்டுப் பார்த்துச் சொன்னான்:

"......எஜமான், எஜமானியம்மாள், சரசா எல்லாரும் நீலகிரிக்குப் போயிருக்கிறார்கள். என்னைத் தனியாக விட்டு விட்டுப் போய் விட்டார்கள். திரும்பி வர...இரண்டு மூன்று வாரங்களாகுமாம்!......" என்று ரொம்பக் கவலையுடன் சொன்னான் ராஜா.

வரதன், ஏனனவோ யோசித்து விட்டுக் கேட்டான்: "உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போக சரசாவுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ?..."

"அவள் ஒன்றும் அவ்வளவு கல் நெஞ்சக் காரியல்ல. அவள் என்னையும் அழைத்துப் போக எஜமானிடம் எவ்வளவோ மன்றாடினாள்; ஆனால், எஜமான்தான்......", என்று சொல்லிக் கொண்டே கண்ணைத் துடைத்துக் கொண்டான், ராஜா.

வரதன் யோசித்துப் பேசினான்:

"நீ இப்போது தனியாகவா இருக்கிறாய்? துணைக்கு யாருமில்லையா?..."

"...துணைக்குத் தோட்டக்காரன் இருக்கிறான்...ஆமாம்; நீ எப்போதாவது நீலகிரிக்குப் போயிருக்கிறாயா?..." என்று பேராவலுடன் வரதனைக் கேட்டான் ராஜா.

"ஓ!... எத்தனையோ தடவை போயிருக்கிறேன்! இன்று சாயந்திரம்கூட நான் தனியாக நீலகிரிக்குப் போகப் போகிறேனே!" என்றான் வரதன்.

"என்ன!...... நீலகிரிக்கா? தனியாகவா? அவ்வளவு தூரமா......?" என்று கூறிக் கொண்டே வாயைப் பிளந்தான் ராஜா.

"ஆமாம். நீலகிரிக்குத்தான்! தனியாகத்தான் போகப் போகிறேன். எனக்கு அடிக்கடி போய் ரொம்பப் பழக்கம்! என் அப்பாதான் அனுப்பிவைக்கிறார். அங்கே என் சித்தப்பா இருக்கிறார். சாயந்திரம் நீயும் வருகிறாயா? இரண்டு பேருமாக ஜாலியாகப் போய் வரலாம்?......" என்று பொய்ச்சிரிப்புடன் கேட்டான் வரதன்.

ராஜா திகைத்தான்!

"என்னடா, ராஜா! என்ன யோசிக்கிறாய்? பங்களாவுக்குக் காவல் வேண்டுமே என்றா? ... அதற்குத்தான் தோட்டக்காரன் இருக்கிறானே! நீ பயப்படாமல் வாடா! சும்மா போய்ச் சுற்றிவிட்டு, மறு நாளே திரும்பி வந்து விடலாம்..." என்று ரொம்பக் குஷாலாகச் சொன்னான் வரதன்.

"ஆமாம் ... எனக்கு டிக்கட்டிற்குப் பணம்...?" என்று ராஜா ஏக்கத்துடன் கேட்டான். நீலகிரியின் அழகுக் காட்சிகள் அவன் மனக் கண் முன் காட்சியளித்து, அவனை அப்படியே சொக்க வைத்தன!

வரதன், சிரித்தான்.

"பணமா? அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வருகிறாயா?..."

"உம்..." என்று தலையை ஆட்டினான்.

"சரி, இந்தா. இதைச் சாப்பிடு. சாயந்திரம் நான்கு மணிக்கெல்லாம் தயாராக இரு. என்ன?..." என்று சொல்லிக் கொண்டே, கையிலிருந்த காகிதப் பொட்டலத்தை ராஜாவிடம் கொடுத்துவிட்டு "நான் வரட்டுமா?" என்றான் வரதன்.

"உம்..." - என்றுவிட்டு ஆவலுடன் காகிதப் பொட்டலத்தைப் பிரித்தான் ராஜா.

"இன்றைக்கு உன் பாடு பலே ஜோர் தான்!..." என்று கண்ணை உருட்டி, பல்லைக் கடித்து ஆத்திரமாகக் கூறிக்கொண்டே அங்கிருந்து நழுவினான் வரதன்.

ராஜா அவனைக் கவனிக்கவில்லை.

அவன் பொட்டலத்தைப் பிரித்தான். அதிலிருந்த சாக்லெட்டுகளை நீலகிரியின் அழகில் மயங்கியபடியே ஒவ்வொன்றாகச் சாப்பிட்டான். சாக்லெட்டு இனித்தது போலவே, நீலகிரியைப் பற்றிய நினைவும் இனித்தது!

அன்று சாயந்திரம், ராஜா தயாராக இருந்தான். கொஞ்ச நேரத்திற்குள் வரதனும் வந்து சேர்ந்தான்.

"என்ன ராஜா! புறப்படலாமா?"

"......ம் வந்து" என்று இழுத்தான் ராஜா.

"என்னடா வந்து?"

"எஜமானர் வந்து...?"

"அவர்கள் வீடு திரும்பத்தான் ரொம்ப நாளாகுமேடா! நீ வாடா. அவர்கள் வந்தால் நான் சொல்லிக் கொள்கிறேன். உம், புறப்படு!" என்று ராஜாவைத் தைரியப் படுத்தி அழைத்துக் கொண்டு ரயிலடிக்குக் கிளம்பினான் வரதன்.

கொஞ்ச நேரத்துக்குள் ராஜாவும் வரதனும் ரயிலடிக்கு வந்தார்கள். வரதன், ராஜாவை ஓரிடத்தில் நிற்க வைத்துவிட்டு ஓடோடிச் சென்று எந்த ஊருக்கோ டிக்கட் வாங்கிக் கொண்டு வந்தான். அப்புறம், இருவரும் ரயிலடிக்குள் நுழைந்தார்கள். தயாராகக் காத்திருந்த நீலகிரி எக்ஸ்பிரஸில் ஏறி அமர்ந்தார்கள். ஐந்தாறு நிமிஷங்கள் கழித்து ரயில் கிளம்பியது. ராஜாவும் வரதனும் ஏதேதோ பேசிக் கொண்டேயிருந்தார்கள். ஆனால், இருவரின் உள்ளத்திலும் வெவ்வேறு எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன!

வெகு நேரமாயிற்று! இரவு இரண்டு மணி இருக்கும். சுமார் எண்பது, எண்பத்தைந்து மைல்களைக் கடந்துவிட்ட எக்ஸ்பிரஸ், தொண்ணூறாவது மைலிலுள்ள ஏதோ ஓர் ஸ்டேஷனில் வந்து நின்றது.

இத்தனை நேரமும் ஏதேதோ பேசிக் களைத்துப் போய், வரதனின் தோள் மீது சாய்ந்து தூங்கிப் போன ராஜா, திடுக்கிட்டுக் கண் விழித்தான். கண்ணைக் கசக்கித் துடைத்துக் கொண்டான். ஜன்னலுக்கு வெளியே இயற்கை இருள் இருந்தது. உள்ளே வெளிச்சம் இருந்தது. அத்துடன் ரயிலடிக்கே உரிய கூச்சலும் இலேசாக இருந்தது!

"வரதா! இது என்ன ஸ்டேஷன்?" என்று வெளியே பார்த்துக் கொண்டே கேட்டான், ராஜா. அவன் வினவுக்கு விடையில்லை!

அந்தப் பெட்டியில் மூலைக்கு மூலை தூங்கி விழுந்து கொண்டிருக்கும் ஒரு சிலரைப் போல, வரதனும் தூங்கிக் கொண்டிருக்கிறானோ, என்னவோ?...

ராஜா திரும்பிப் பார்க்காமல் வெளியே பார்த்துக் கொண்டேயிருந்தான். ஐந்து நிமிஷங்களாயின. ஏழாவது நிமிஷம்.

விசில் ஊதப்பட்டது; தூரத்திலுள்ள கைகாட்டி மரத்திலுள்ள பச்சை விளக்கும் 'வரலாம்' என்று உத்தரவு கொடுத்தது; எட்டாம் நிமிஷம்...'குக்கூ....கூ...!' என்று அலறிவிட்டு ரயில் கிளம்பியது!

"வரதா! நீலகிரிக்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது? பொழுது விடிவதற்குள் நீலகிரிக்குப் போய்ச் சேர்ந்து விடுவோமா?" என்று கேட்டுக் கொண்டே மெல்லத் திரும்பிப் பார்த்தான் ராஜா. அடுத்த கணம் அவனுக்குத் திகீரென்றது!

ஏன்?...

அவன் அமர்ந்திருந்த பெட்டியிலிருந்த ஒரு சிலர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களையெல்லாம் பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தான் ராஜா. ஏன்?

வரதனைக் காணோம்!

ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

ராஜா, கல்லாகிப் போனான்!

அவன் ஏதோதோ எண்ணினான். என்னென்னவோ நினைத்தான். சிறிது நேரம் கழித்து எதிரில் தூங்கிக் கொண்டிருந்த யாரோ ஒரு மனிதரை "அய்யா, அய்யா" என்று எழுப்பினான். அந்த மனிதன் முகத்தைச் சுளித்துக் கொண்டே கண் விழித்தார்.

"...என்ன தம்பி?......"

"என் பக்கத்திலே இருந்தானே என் சிநேகிதன், அவன்..." கலக்கத்துடன் பேச்சை முடிக்காமலேயே இழுத்து வலித்தான் ராஜா.

"ஓ...உன் சிநேகிதனா அவன்? அவன் இருபதாவது மைலிலேயே— வேலம்பட்டி ஸ்டேஷனிலேயே இறங்கிப் போய் விட்டானே!" என்றார் அந்த மனிதர்.

ராஜாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை! ஏதேதோ நினைத்து நெஞ்சம் புழுங்கி ஏங்கிக் கலங்கித் தவியாய்த் தவித்தான். இந்த இக்கட்டான சமயத்தில் - வண்டிக்குள் டிக்கட் பரிசோதகர் வந்தார்! (தொடரும்)

"தமிழ் நாடு" சிறு கதைப் போட்டி

பரிசு ரூ. 100

தமிழ் நாட்டாரின் வாழ்க்கையில் அழகான நிகழ்ச்சிகளை வைத்து எழுதப்படும் சிறு கதைகள் "தமிழ் நாடு" ஞாயிறு மலருக்கு வரவேற்கப்படுகின்றன. சிறந்த கதை என்று தேர்ந்தெடுக்கப்படும் மூன்று கதைகளுக்கு ரூ. 100 பரிசளிக்கப்படும்

முதற் பரிசு ரூ. 50. 25 ரூபாய் வீதம் இரண்டு பரிசுகள்.


சிறு கதைகள் 5-1-'58க் தேதிக்குள் கிடைக்கும் படி அனுப்பப்பட வேண்டும். அவை "தமிழ் நாடு" இதழில் 2½ பத்திக்குள் அடங்குவதாக இருக்க வேண்டும். ஒருவர் இரண்டு கதைகள் அனுப்பலாம்.

பரிசு பெற்ற கதைகள் "தமிழ் நாடு" இதழின் உரிமையாகி விடும். பரிசு பெறாத கதைகள் தகுதியுடையனவென்று கருதப்பட்டால் ஞாயிறு மலரில் வெளியிட எடுத்துக் கொள்ளப்படும்.

போட்டி பற்றி எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. கதைகளைத் திருப்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் பில்லை வைத்து அனுப்ப வேண்டும். கதை அனுப்பும் அஞ்சல் கவரில் "போட்டிக் கதை" என்று குறித்தனுப்ப வேண்டும்.

ஆசிரியர் : "தமிழ் நாடு"
தபால் பெட்டி நெ. 49, மதுரை

தங்க விழா



1902

முதல் இந்தியாவின்

தொழிற்சாலைகளுக்கும்

வீடுகளுக்கும்

பெயின்ட் தயாரிப்பவர்கள்

ஷாலிமார் பெயின்ட், கலர் &
வார்னிஷ் கம்பனி லிமிடெட்

கல்கத்தா • பம்பாய் • மத்ராஸ்

புதுடெல்லி • கான்பூர்

SPW. 897



கண்டிப்பு மனிதர்

பாலு

மேஸ்திரி கரூர் கண்ணுசாமியை அந்த ஊரிலேயே யாருக்கும் தெரியாமல் இருக்க முடியாது. பிரபல கண்டிராக்டர்களும் சரி, பெரிய பெரிய என்ஜினியர்களும் சரி, கரூர் கண்ணுசாமியைத் தெரிந்தவர்களாயின், கொஞ்சம் 'உஷாராக'வே இருப்பார்கள். புதிதாக வீடு கட்ட முனையும் சில பணக்காரர்கள், கரூர் கண்ணுசாமியைக் கலந்து கொண்டுதான் தாங்கள் கட்டவிருக்கும் வீட்டிற்கு இவ்வளவு தொகை செலவாகும் என்பதைக் கணக்காக எடுத்து வைத்துக் கொண்டு காரியத்தைத் துவங்குவார்கள். மேஸ்திரி கண்ணுசாமி போடும் மதிப்பில், கொடுக்கும் 'எஸ்டிமேட்'டில் அவர்களுக்கு அத்தனை நம்பிக்கை!

கண்ணுசாமி அந்த நகரவாசிகளிடையே அவ்வளவு பிரபலமடைந்திருப்பதின் காரணம் அவரிடம் மருந்திற்குக்கூட 'வழா வழா' என்றே பேச்சே இடையாது என்பது தான். இதனாலேயே அவரை ஜனங்கள் "கரூர் கண்ணுசாமி" என்று அழைத்தனர்.

ஒரு பங்களாவை வெள்ளை முதலியன அடித்துத் துப்புரவு செய்ய வேண்டுமென்று வேறொரு "வழா வழா" மேஸ்திரியை வரவழைத்து ஒரு வீட்டுக்காரர் கேட்டால் உடனே அவர், "ஒரு நூறு ரூபாய் இருந்தால் எல்லாம் சரி செய்துடலாமுங்கோ; முன்னுடி அந்த ரூபாய்க்கு வெள்ளை, நீலம், டிஸ்டம்பர், கொஞ்சம் சிமிட்டி எல்லாம் வாங்கி வந்து விட்டால், அப்புறம் 'மட மட' வென்று வேலை ஆகிப் போய் விடுமே" என்று சொல்லுவார்.

உடனே அந்த வீட்டுக்காரரும் நூறு ரூபாய்க்கு மேற்குறித்த சாமான்களை வாங்கி அந்த மேஸ்திரியிடம் கொடுப்பார். இரண்டு நாள் பொறுத்து, பாதி வேலையில் அவ்வளவு சாமான்களும் ஆகி விட்டன என்று சொல்லும் போது அந்த வீட்டுக்காரருக்கு எப்படி இருக்கும்? மற்று மொரு முறை சாமான்கள் வாங்கிக் கொடுத்து, மீண்டும் அந்த "வழா வழா" மேஸ்திரியிடம் மல்லுக்கு நின்று வேலையை முடிக்கச் சொல்லிக் கூலியைத் தீர்ப்பதற்குள், வீட்டின் சொந்தக்காரருக்கு வீட்டையே விற்றுவிட்டு எங்காவது ஓடிப்போய் விடலாமா என்று கூடத் தோன்றி விடுமே!

ஆனால் இந்தச் சங்கடமெல்லாம் கரூர் கண்ணுசாமி மேஸ்திரியிடம் கிடையாது. "வீட்டு ரிப்பேரா? நானூறு ரூபாய் இருந்தால் பேசுங்கள், ஸார்" என்று கண்டிப்பாகவும் விநயமாகவும் கூறி விடுவார் அவர். மூந்நூற்று எழுபத்தைந்திற்குள்ளேயே காரியம் முடிந்து விடும். வேலை கொடுத்தவரும் அக மகிழ்வார். கண்ணுசாமி போட்டுக் கொடுக்கும் மதிப்பின் ரகசியமே இதுதான்.

மேலும், கண்ணுசாமி உழைப்பினால் உயர்ந்தவர். சிறு வயதில் எத்தனை கட்டிடங்களில் அவர் மண் சட்டி சுமக்கும் பையனாக உழன்றிருப்பார்! கணக்கு உண்டா அவைகளுக்கு? தினம் ஐந்தணாக் கூலிக்காக நாள் முழுதும் செங்கல் அரைத்து அவர் சிரமப் பட்டிருக்கும் மாதங்கள்தான் எவ்வளவு? உழைப்பு அவரை இன்று உயர்த்தி விட்டது! ஊக்கம் அவரை முன்னேறச் செய்து விட்டது! பொறுமையும் சோம்பலின்மையும் அவரைக் காலப் போக்கில் ஒரு கண்யமுள்ள

மேஸ்திரியாக ஆக்கிவிட்டது! பெரிய என்ஜினியர்கள் மேற்கொள்ளும் பிரும்மாண்டமான வேலைகளிலெல்லாம் கண்ணுசாமி மேஸ்திரிக்குத்தான் பொறுப்பு அதிகம். கண்ணுசாமியிடம் வேலையை அவர்கள் ஒப்புவித்து விட்டு "சிவனே" என்று "ஹாய்யாக" கால் மேல் கால் போட்டுக் கொண்டு இருந்து விடுவார்களே!

வேலை செய்வதில் கண்ணுசாமி எவ்வளவு கறார் பேர்வழியோ, அப்படியேதான் கூலி வாங்குவதிலும்! கண்ணுசாமியின் ஆட்களின் கூலிகளில் ஒரு காலணாவையேனும் குறைத்து விடுவதென்பது நடவாத காரியம்.

கண்ணுசாமி மேஸ்திரி கூலிப் பட்டியல் தயார் செய்து கொடுத்து விட்டால் அது விவாதத்திற்கு உட்படாத "பட்ஜெட்"தான்.

"நாம்ப கஷ்டப்பட்டு வேலை செய்கிறோம்; அதற்கு உண்டான கூலியையும் கேட்கிறோம்; அதைக் குறைக்கவாவது?" என்பான்.

இதுதான் கண்ணுசாமி மேஸ்திரியின் கறாரான தொழில் கொள்கை.

ஒரு சமயம் பிரபல சினிமா நடிகர் குமரய்யாவின் பங்களாவைப் புதுப்பிக்க வேண்டி வந்தது. குமரய்யாவுக்குப் பல வருஷங்களாகவே கண்ணுசாமி மேஸ்திரியைப் பரிச்சயம் உண்டு. கண்ணுசாமி, பங்களாவைப் புதுப்பிக்கும் வேலையில் தம் சிப்பந்திகளுடன் ஈடுபட்டிருந்தார்.

அப்போது குமரய்யா நடித்த வர்ணப்படம் ஒன்று நகரத்திலுள்ள "சுவர்க்க லோகம்" தியேட்டரில் வெளியாகி யிருந்தது. பொது ஜனங்கள் போட்டி போட்டுக் கொண்டு அந்தப் படத்தைப் பார்க்க விரைந்தனர்.

நடிகர் குமரய்யா மனமுவந்து மேஸ்திரியை உற்சாகப்படுத்த எண்ணி, அவருக்கும் அவருடைய சிப்பந்திகளுக்கும் பிரத்யேகமான இலவச பாஸ்களை வழங்கி மேற்படி புதிய வர்ணப் படத்தைப் பார்க்க ஏற்பாடு செய்தார். பாதி வேலை நடந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் பிற்பகலில் கண்ணுசாமியும் அவருடைய சிற்றாள்களும் உற்சாகமாகவே படக் காட்சிக்குச் சென்றனர்.

கட்டிடம் புதுப்பிக்கப்பட்ட வேலை முடிந்தது. கறார் கண்ணுசாமி மேஸ்திரி சமர்ப்பித்த கூலிப் பட்டியலைக் கண்ணுற்ற நடிகர் குமரய்யாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

மேஸ்திரி, சிப்பந்தி ஒவ்வொருவரின் பெயருக்கு எதிரே அவர்களைக் குமரய்யா சினிமாவுக்கு அனுப்பிய தினத்தன்று, "சொர்க்க லோகம் தியேட்டர் பிற்பகல் 3 மணியிலிருந்து 7 மணி வரை: கூலி ஒரு ரூபாய்" என்று போட்டிருந்ததைப் பார்த்தால் குமரய்யாவுக்குத் தூக்கி வாரிப் போடாமல் வேறு என்ன செய்யும்?

ஆயினும் குமரய்யாவால் எப்படி அந்தப் பட்டியலை நிராகரிக்க முடியும்? கறார் கண்ணுசாமி போட்டால் போட்டது தானே!

தூக்கம் பலரகம்



எஸ்.வி.எஸ்



இரவு பதினொரு மணியாகி விட்டது. இன்னும் தூக்கம் வரவில்லை. கொட்டாவி வருகிறது; ஆனால் 'தூக்கம் வரமாட்டேன்' என்கிறது. நித்ராதேவி 'கருணை பாலிக்க மாட்டேன்' என்கிறாள். என்ன செய்வது? நன்றாகத் தூங்கும் புண்ணிய புருஷர்களை நினைத்துக் கொண்டாலாவது தூக்கம் வருகிறதா என்று பார்க்கிறேன்.

அடுத்த வீட்டு மாடி யறையில் இருக்கிறாரே திருவாளர் சிதம்பரம், அவர் ஒரு புண்ணிய புருஷர். ஒரு நாள் நடந்த சம்பவத்தைக் கேளுங்கள்.

"ஹமீத்! ஹமீத்! யூ......" என்று பலத்த குரல் கேட்டது. பிறகு ஒன்றும் தெளிவாகக் காதில் விழவில்லை. குரல் மட்டும் சிதம்பரம் குரல்தான். நல்ல கனத்த குரல். வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல்தான் இருக்கும் அவர் பேச ஆரம்பித்தால்!

சிதம்பரம் அறைக்கு யாரோ ஹமீத் என்ற ஒரு நண்பர் வந்திருக்கிறார் போலிருக்கிறது; அவருடன் ஏதோ காரசாரமான விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார் நண்பர் சிதம்பரம் என்று நினைத்துக் கொண்டேன்.

மறு நாள் பொழுது விடிந்து பக்கத்து வீட்டுக் கீழ் போர்ஷனில் குடியிருப்பவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "சிதம்பரம் அறைக்கு ஹமீத் என்று யாரோ ஒரு நண்பர் வந்திருக்கிறார் போலிருக்கிறது. நேற்று ராத்திரி பன்னிரண்டு மணிவரை காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார் மனுஷர்" என்றேன்.

உடனே அந்த நண்பர், "நீங்க ஒரு பக்கம்! சிதம்பரத்தினுடைய நண்பரும் வரவில்லை; ஒன்பரும் வரவில்லை. நல்ல தூக்கத்தில் 'ஹமீத்! யூ ஸ்டாண்ட் அப் ஆன் தி பெஞ்சு' (ஹமீத்! நீ பெஞ்சியின்மீது ஏறி நில்) என்று கத்தி யிருக்கிறார். பள்ளிக்கூட உபாத்தியாயரோ இல்லையோ, தூக்கத்திலே கூட அந்த ஞாபகம், அதே கனவு!" என்றார்.

இதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"இதற்கே இப்படிச் சிரிக்கிறீர்களே! ஒரு நாள் சிதம்பரம் தூக்கத்தில் முக்கால் மணி நேரத்துக்கு 'பிசிக்ஸ்' வகுப்பே நடத்தி யிருக்கிறார். அதைக் கேட்டு விட்டு, நம்ம விட்டல் ராவ் புஸ்தகத்தைச் சுருட்டி இறப்பில் வைத்து விட்டுப் பரீட்சை எழுதி யிருக்கிறான்" என்றார் இன்னொரு குடித்தனக்காரர்.

இதைக் கேட்டு எனக்குண்டான ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல! 'சிதம்பரம் வாழ்க! அதைவிடச் சிதம்பரத்தின் தூக்கம் வாழ்க!' என்று வாழ்த்துக் கூறினேன்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து, பத்து நாள் கழித்து ஒருநாள் சிதம்பரம் என்னைப் பார்க்க வந்தார்.


"என்ன ஸார்! ராத்திரி யெல்லாம் கூடப் பையன்களைப் பெஞ்சியின்மீது நிற்க வைக்கிறீர்களாம்; பிசிக்ஸ் பாடம் சொல்லித் தருகிறீர்களாம்......ஒரே அமர்க்களமாயிருக்கிறதே உங்கள் விவகாரம்!" என்றேன்.

"இனிமேல் அந்த மாதிரி யெல்லாம் நிகழாது என்ற நல்ல சமாசாரத்தைச் சொல்லத்தான் வந்தேன், ஸார்!" என்றார் சிதம்பரம்.

"ஏன் ஸார்! தூக்கத்தில் பிதற்றாமலிருப்பதற்கு ஏதாகிலும் மருந்து சாப்பிடப் போகிறீர்களா? அல்லது தூங்காமலே இருந்து விடப் போகிறீர்களா?" என்று கேட்டேன்.

"அதெல்லாம் இல்லை; பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலையை விட்டு விட்டு, தந்தி இலாக்காவில் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், அதில் சேரப்போகிறேன்" என்றார்.

"அதாவது, பள்ளிக்கூடப் பாடங்களுக்குப் பதிலாக 'கட்டு கடகட், கட்டு கட கட கட்' என்று இப்படி எங்களுக்குப் புரியாத பாஷையில் தூக்கத்தில் பிதற்றப் போகிறீர்கள் அவ்வளவுதானே?" என்றேன்.



"அதைக் கேட்கும் பாக்கியம் கூட இனி உங்களுக்கு இல்லை" என்று மற்றொரு அணு குண்டைப் போட்டார் நண்பர் சிதம்பரம்.

"ஏன், ஸார்?"

"நான் இந்த இடத்தைக் காலி செய்து விட்டு, தந்தி—தபால் இலாக்கா பக்கத்தில் வேறு ஒரு அறை பார்த்திருக்கிறேன். இரண்டு நாளில் அந்த இடத்திற்குப் போய் விடுகிறேன்......" என்றார்.

அதிலிருந்து பக்கத்து வீட்டிலிருந்த ஒரு சுவாரஸ்யமான அம்சம் குறைந்து விட்டது.

இரவு வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்து விட்டுப் பிரியும்போது, "நல்ல தூக்கம் வருவதாக! இன்பக் கனவுகள் காண்பாயாக!" என்று வாழ்த்துக் கூறிவிட்டுத் தான் பிரிகிறார்கள். இதுதான் ஆங்கில மரபு. ஆனால் மனோதத்துவ ஆசிரியர்கள், தூக்கத்தில் கனவுகள் தோன்றினால் அது நல்ல தூக்கம் என்று சொல்ல முடியாது என்று கூறுகிறார்கள்.


பின் எப்போதுதான் நல்ல தூக்கம் வருகிறது என்று கேட்டால் அதைப்பற்றிப் பலர் பலவித அபிப்பிராயம் கூறக்கூடும். என்னைக் கேட்டால், வேண்டாத சமயத்தில் வரும் தூக்கம்தான் நல்ல தூக்கம் என்பேன்!

நீங்கள் ஏதாவது பரீக்ஷை எழுதியிருக்கிறீர்களா?—இல்லை, பரீக்ஷைக்குப் படிப்பதற்காகக் கண் விழிக்க முயன்றிருக்கிறீர்களா? அப்போது தெரிந்திருக்கும். 'நல்ல தூக்கம்' எது என்பது.

நித்ராதேவி வந்தால், அவளோடு போராடுவதற்காக, ஒரு பிளாஸ்க் நிறைய டீ, ஒரு சொம்பு குளிர்ந்த ஜலம், ஒரு மட்டை நாசிகாசூரணம் இத்தனை அஸ்திரங்களையும் வைத்துக் கொண்டு தயாராய் இருப்பீர்கள்! இத்தனை அஸ்திரங்களையும் ஏய்த்துவிட்டு, நித்ராதேவி, உங்கள்மீது ஆட்சி செலுத்தத் தொடங்கி விடுவாள்! அந்த நித்திரையின் சுகத்துக்கு ஈடு உண்டா? இணை உண்டா? இதற்குத்தான் 'வேண்டாத சமயத்தில் வரும் தூக்கம்' என்று பெயர்.

எங்கள் ஊர்ப்பிள்ளையார் கோவிலில் தினம் இரவு எட்டு மணி முதல் பத்து மணி வரை புராணப் பிரவசனம் நடக்கிறது. எங்கள் எச்சுமு பாட்டி போகிற வழிக்குப் புண்ணியத்தை மூட்டைக் கட்டிக்கொண்டு போகலாம் என்று தினம் கதைக்குப் போய்விட்டு வருகிறாள். அதோடு நின்றால் தேவலையே! "ஏண்டா! நீயும்தான் கதைக்கு வரப்படாதோ? நல்ல வார்த்தையாக நாலு காதில் விழுந்தால் பாவம் தொலையுமோ இல்லையோ?" என்பாள். ஒருநாள், 'நாமும் தான் போய்க் கேட்போமே' என்று, பிரசங்கம் ஆரம்பித்து, பதினைந்து நிமிஷம் கழித்துப் போனேன். ஆகா! அங்கே நான் கண்ட காட்சி, என்ன காட்சி! என்ன காட்சி!

பெண்கள் பக்கத்தில் பாதிப் பேருக்குமேல் உட்கார்ந்து ஆனந்தமாகத் தூங்கி ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டிருந்தார்கள். ஆண்கள் பக்கமும் மேற்படி மேற்படி தான்! பாட்டியைப் பற்றியோ சொல்லத் தேவை



யில்லை. இத்தகைய ரஸிக மகா ஜனங்களை வைத்துக் கொண்டு புராணம் படித்த பௌராணிகரின் நெஞ்சுரத்தைக் கண்டு என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

கதை முடிந்தது. எச்சுமு பாட்டி வீட்டுக்குத் திரும்புவதற்குள் நான் வீட்டுக்கு வந்து விட்டேன். பாட்டி வந்ததும், "பாட்டி! இன்றைக்குக் கதை எப்படி?" என்றேன்.

"பிரம்மானந்தமாக இருந்தது!"

"எது? ... தூக்கந் தானே?" என்று கேலிச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே கேட்டேன்.


பாட்டிக்குக் கோபம் வந்து விட்டது!

பாட்டிக்கு, வயசுக் கோளாறினாலேயோ என்னவோ இரவு தூக்கம் வருகிறதில்லை. 'நச்சு' 'நச்சு' என்று ஏதாகிலும் நச்சரித்துக் கொண்டிருப்பாள்! நடு இரவில் எழுந்திருந்து போய் ஏதாவது உருளியோ, சொம்பையோ உருட்டிவிட்டுத் தூங்குகிறவர்களையெல்லாம் எழுப்பி விடுவாள்.

தனக்குத் தூக்கம் வருவதில்லையே என்று கதைக்குப் போய் வைக்கிறாள். அங்கே தூக்கம் வந்து தொலைகிறது. அந்தத் தூக்கமும் பிரம்மானந்தமாக வந்து தொலைகிறது! கதை முடிந்து வீட்டுக்கு வந்தால் "தூக்கம் பிரம்மானந்தமாக இருந்தது" என்று சொல்வதற்குப் பதிலாக, பௌராணிகர் சொன்ன 'கதை பிரம்மானந்தமாக இருந்தது' என்று அவர் தலையில் பழியைப் போடுகிறாள்!

* * *

ஒரு சமயம் என் நண்பர் ஒருவரை எழும்பூர் ஸ்டேஷனில் சந்தித்து அழைத்து வர வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். நண்பர் வரும் ரயில் சரியாக காலை 5-30 மணிக்கு வருகிறது. நாலு மணிக்கே எழுந்திருந்து, தயாரானால்தான் சரியாக இருக்கும் என்று தீர்மானத்துடன் முதல் நாள் இரவு பத்து மணிக்குப் படுக்கையில் படுத்துக் கொண்டேன். நடுச் சாமத்தில் 'டங்' என்று சத்தம் கேட்டு, உலுக்கி விழுந்து எழுந்திருந்தேன். எழுந்தவன் 'என்ன விழுந்தது? திருடன் புகுந்து விட்டானா?' என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கவில்லை. மணியைத் தான் பார்த்தேன். சரியாகப் பன்னிரண்டு. 'இவ்வளவுதானா' என்று நினைத்துக் கொண்டு



மறுபடியும் படுத்தேன். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கினேன். 'நேரம் ஆகிவிட்டதோ' என்று பயந்து விழித்துப் பார்த்தேன் 8-15 தான் ஆகியிருந்தது. 'சரி, இன்னும் முக்கால் மணி நேரம் இருக்கிறதே' என்று படுத்தேன். "என்னப்பா! நல்ல தூக்கமா?" என்று என்னைத் தட்டி யாரோ எழுப்பவே அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்து பார்த்தேன். நான் ரயிலடிக்குப் போய் அழைத்து வரவேண்டுமென்றிருந்த என் நண்பன்! மணியைப் பார்த்தேன்—சரியாக ஏழு!

மூன்றேகாலிலிருந்து ஏழு மணிவரை நான் தூங்கியிருக்கும் தூக்கம் உண்டே, ஆகா! அது எப்படிப்பட்ட தூக்கம்!

சிலருக்கு இராத் தூக்கமின்மை ஒரு நோயாகவே வருவதுண்டு. புரண்டு புரண்டு படுப்பார்கள்; தூக்க மாத்திரைகள் சாப்பிடுவார்கள்; சாயங்காலமானால் இரண்டு மைல் நடந்துவிட்டு வருவார்கள். என்ன செய்தாலும் இரவில் தூக்கம் வராது.

என் நண்பர் ஒருவருக்கு இப்படிப் பட்ட நோயுண்டு. அவரும் நானும் ஒரே காரியாலயத்தில் வேலை செய்தோம். தினம் அவர் காலையில் சந்தித்ததும் "நேற்று ராத்திரியெல்லாம் தூக்கமே இல்லை" என்று ஆரம்பித்து, தாம் முதல் நாள் இரவெல்லாம் தூக்கம் வராமல் பட்ட பாட்டைப் பற்றி இரண்டு மணி நேரம் சொல்லித் தீர்ப்பார்! எனக்குப் பரிதாபமாக இருக்கும்.

ஒரு நாள் காரியாலயத்தில் அவரும் நானும் இரவெல்லாம் இருந்து வேலை செய்யும்படியாக நேர்ந்தது. பன்னிரண்டு மணி வரை வேலையிருந்தது. பிறகு நாலு மணிக்குத் தான் மறுபடியும் வேலை தொடங்கும் போலிருந்தது. "நாலு மணிக்கு உங்களை வந்து எழுப்புகிறேன். இப்பொழுது சற்று நேரம் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் எங்கள் கீழிருந்த சிப்பந்தி. உடனே நாங்கள் இருவரும் எங்கள் அறைக்கு வந்தோம். என் நண்பர் சிறு துரும்பு விழுந்தாலும், அந்தச் சத்தம் தம் தூக்கத்தைக் கலைத்துவிடும் என்று அறைக் கதவு, ஜன்னல் கதவு, யாவற்றையும் இழுத்துச் சாத்திக் கொண்டு படுத்துக் கொண்டார். நான் என் அறையில் எல்லாக் கதவுகளையும் திறந்து வைத்துக் கொண்டு படுத்தேன்.

சுமார் நாலு மணியிருக்கும். கதவிடிக்கும் சத்தம் கேட்டது. நான் எழுந்திருந்து உட்கார்ந்தேன். இன்னொரு தடவை கதவிடிக்கும் சத்தம் கேட்டது. என் நண்பரின் அறைக் கதவைத் தான் யாரோ இடிக்கிறார்கள் என்பது தெரிந்து கொண்டேன். 'பாவம்! ரொம்ப நாளாகத் தூங்காதவர்! இன்று தான் தூங்குகிறார்! அவரைத் தொந்தரவு செய்து எழுப்பக்கூடாது. தூங்கட்டும்' என்று நினைத்து, "யாரப்பா! இங்கே வா! அவரை எழுப்பாதே! அவர் செய்ய வேண்டிய வேலை எது இருந்தாலும் என்னிடம் கொடு, நான் செய்து விடுகிறேன்" என்றேன். அவனும் வந்தான்; வேலையும் முடிந்தது.

நன்றாகச் சூரியோதயமான பிறகு, மெள்ள என் நண்பர் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

அதற்குள் வேலையெல்லாம் முடிந்து விட்டதால், நானும் வீட்டுக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தேன்.

தூங்கி எழுந்து வந்த நண்பரைப் பார்த்ததும் "நேற்று ராத்திரி பரவாயில்லை. சுமாராகத் தூங்கி யிருக்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்று மகிழ்ச்சியுடன் கூறினேன்.

"தூக்கமாவது ஒன்றாவது! இமை மூடவில்லை. கொட்டு கொட்டு என்று இரவெல்லாம் விழித்துக் கொண்டே படுத்திருந்தேன். இனி இந்த ஜென்மத்திலே எனக்குத் தூக்கம் கிடையாது, ஸார்! தூக்கம் கி...டை...யா...து!" என்றார் மிக்க அலுப்புடன்.

எனக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. "நேரமாகிறது. வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு அவரிடமிருந்து 'தப்பினோம் பிழைத்தோம்' என்று விடைபெற்றுச் சென்றேன்.

* * *

இப்படித் தூக்கத்தில் பல ரகங்கள்! இந்தத் தூக்கத்தையும் ரொம்பவும் ரஸித்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். கும்பகர்ணன் ஆறு மாசம் விடாமல் தூங்குபவனாகவும், பதினான்கு வருஷம் தூங்காமலே இருந்தவனாக லக்ஷ்மணனையும் ஒரே காவியத்தில் சிருஷ்டித்த பெருமை பாரத தேச இதிகாசமாகிய ராமாயணத்துக் கல்லவா?


இவ்வாறு தூக்கத்தைப் பற்றி நினைக்க நினைக்க எனக்குத் தூக்கம் வருகிறது. இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இந்தக் கட்டுரையைப் படித்த உங்களுக்கும் தூக்கம் வருகிறதா? பேஷ்! நல்ல கட்டுரைதான்! உங்களுக்குத் தூக்கமும் நல்ல தூக்கமாக வரட்டும்!

பிரக்யாதி பெற்ற

ஆஸ்டிரிய தயாரிப்பு

(8, 10, 15 & 20 எச். பி.)



ஜென்பாக்

டீசல் என்ஜின்கள்

★ ஹரிசாண்டல்
★ கோல்ட் ஸ்டார்ட்
★ போர் ஸ்ட்ரோக்

எண்ணெய் செலவில் சிக்கனம்

•

விவரங்களுக்கு :

கமானி எஞ்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் லிட்.

கமானி சேம்பர்ஸ்,
பலார்டு எஸ்டேட், பம்பாய்

விற்பனையாளர்கள் :

கமானி என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்

"சாகர் மான்ஷன்"

2, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1

சிக்கண்ணு சன்ஸ், நரசிம்மராஜ ரோடு, பெங்களூர். பார்மிங் மெஷினரி & சர்வீஸஸ், பெனட் ரோடு, பக்கிங்ஹாம்பேட் P. O., விஜயவாடா. எம். பி. செட்டி, C/o தி நேஷனல் லைட்டிங் ஹவுஸ், நெல்லூர். கண்ணன் ஸ்டோர்ஸ், மெயின் ரோடு, மதுரை.

24-12-52 முதல் 18-1-53 வரை சென்னையில் நடைபெறும் மதராஸ் பார்க் பேர் எக்ஸிபிஷனில் எங்களது ஸ்டாலுக்கு ஒருமுறை விஜயம் செய்யக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்!

•

எவ்வளவு நாட்பட்டதாயினும் மிகக் கடுமையாக இருப்பினும் நவீன ரஸாயன முறைத் தயாரிப்பான **வீனஸ் சார்ம் நீரிழிவு** (DIABETES) வியாதியை முற்றிலும் குணமாக்கி விடும். அடங்காத பசி, மரண தாகம், அடிக்கடி சிறுநீர் பிரிதல், சொரி சிரங்கு ஆகிய இவைகளே இவ்வியாதியின் முக்கிய அறிகுறிகள். இதை கவனிப்பின்றி விட்டு விட்டால் கட்டி, பிளவை, கண் கோளாறு முதலிய உபத்திரவங்களில் முடியும். **வீனஸ் சார்ம்** ஆயிரக்கணக்கானவர்களை மரிப்பினின்றும் பிழைக்க உதவியுள்ளது. உபயோகித்த மறுதினமே நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து இதமளிக்கும். இரண்டு மூன்று தினங்களில் பாதி குணமடைந்ததாக நீங்களே உணர்வீர்கள். ஆகார நிபந்தனை கிடையாது. இலவசமான விபரங்கள் அடங்கிய ஆங்கில காட்லாகிற்கு எழுதவும்.

•

50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 6-12-0

(தபால் செலவு இலவசம்)

•

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K.M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா

சென்னை சங்கீத சபை

25-வது வருஷ பூர்த்திக் கொண்டாட்டம்

கீ. பாலசுப்ரமண்ய அய்யர் எம். எல். சி.

1927—ம் வருஷத்தை ஒரு முக்கியமான வருஷமாகச் சென்னை மக்கள் கருத வேண்டும். அவ் வருஷத்தில் நம் தேச நன்மைக்கு உகந்த விசேஷ சம்பவங்கள் சில நடந்தன. ஆகையால் அந்த வருஷத்தை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கும்படியாக ஏற்பட்டிருக்கிறது.

அவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் சென்னை நகரில் காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் நடந்தது. அவ்வருஷத்தில்தான் மேற்படி சபையில் நம்முடைய பாரத நாட்டுக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அதுவரையில் ஆங்கிலேய அரசாங்கத்துக்கு உட்பட்ட சுதந்திரம் கிடைத்தால் போதும் என்ற எண்ணம் அரசியல் வாதிகளுக்கு இருந்தது. அவ்வருஷம் அம்மாதிரி சுருக்கமான நோக்கம் நீங்கி, பூரண சுதந்திரம் பாரத தேசத்தின் பிறப்புரிமை; அதை அடைய இந்திய மக்கள் இடைவிடா முயற்சி எடுத்து, அந்த விரதத்தையே மனத்தில் கொண்டு வேலை செய்ய வேண்டுமென்கிற தீர்மானம் முழு மனத்துடன் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்படி 20- வருடம் கழித்து 1947-ல் பாரததேசம் சுதந்திரம் அடைந்தது.

அந்தக் காங்கிரஸ் மகா சபைக்காக சென்னை ஸ்பர்டாங்க் மைதானத்தில், 10,000 மனிதர்கள் அடங்கக் கூடிய ஒரு பெரும் கொட்டகை போடப்பட்டது. காங்கிரஸ் மகாசபையை ஒட்டி, அந்தப் பந்தலிலேயே இரண்டு முக்கியமான சபைகள் நடத்தப் பட்டன. அவற்றில் ஒன்று அகில இந்திய சங்கீத சபை; மற்றொன்று மதராஸ் புத்தகாலய சங்கம்.

நம்முடைய கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சிக்காகவும் அதை நாடு முழுவதும் பரவச் செய்வதற்காகவும் அந்தச் சங்கீதத்தின் அறிவையும் உணர்ச்சியையும் மேன்மேலும் மக்களுக்கு ஊட்டுவதற்காகவும், பல பெரியோர்கள் சேர்ந்து சென்னையில் ஒரு ஸ்தாபனத்தை நிறுவ, அந்தக் கொட்டகையிலேயே தீர்மானித்தார்கள்.

மேற்படி காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புக்கமிட்டியின் பொக்கிஷதாரராக இருந்து வேலை செய்யும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்தக் காங்கிரஸ் மகாசபை விமரிசையாக நடந்ததற்கு முக்கியமாக இருந்தவர் காலம் சென்ற கனம் எஸ். சீனுவாச ஐயங்கார் அவர்கள்.

காங்கிரஸ் கொட்டகையில் ஏற்பட்ட சங்கீத சபைக்கு ஜீவதசை முழுவதும் அங்கத்தினராகச் சேர்ந்தவர்களுள் நானும் ஒருவன். என்னைப் போலப் பல நண்பர்கள் சேர்ந்தனர். மேற்படி தீர்மானத்தை ஒட்டி 1928-ம் வருஷம், நிரந்தரமான ஸ்தாபனம் 'மியூஸிக் அகாடமி' என்ற பெயருடன் நிறுவப்பட்டது. அப்பொழுது முதற்கொண்டு 25 வருஷ காலமாக கர்நாடக சங்கீத அபிவிருத்திக்காக இடைவிடாமல் வேலை செய்து வருகிறது இந்தச் சபை. அகாடமியின் முதல் தலைவராகக் காலம் சென்ற கனம் டாக்டர் யூ. ராமராவ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்குப் பிறகு 1935-ம் வருஷம் முதற்கொண்டு ராவ்பகதூர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைவராக இருந்து வருகிறார். அவர் தலைவராக இருப்பதே மியூஸிக் அகாடமியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். அவருடைய பெரும் உழைப்பினாலும், ஊக்கத்தினாலும் இன்று 'மியூஸிக் அகாடமி' உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது என்று சொல்வது மிகையாகாது. அவருடைய உருவ ஓவியப்படம் புதிய கட்டடத்தில் வைக்கப்படுவது மிகவும் பொருத்தமானதாகும்.

நம்முடைய பாரத நாட்டில் சங்கீதம் அநாதி காலமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. தொன்று தொட்டே காந்தர்வ வேதம் என்ற பெருமையை அடைந்திருக்கிறது. நம்முடைய பாரத நாட்டின் சங்கீதம் மற்ற நாட்டின் சங்கீதங்களை விட, தனிப்பட்ட முறையும் சுவையும் பெருமையும் உடைத்தானது. பாரத நாட்டுச் சங்கீதம் இரு வகைப்பட்டது. ஒன்று இந்துஸ்தானி சங்கீதம். மற்றொன்று கர்நாடக சங்கீதம். வட இந்தியாவில் இந்துஸ்தானி சங்கீதம் வழங்கப்பட்டு வருகிறது. அதே மாதிரி தென்னிந்தியாவில் கர்நாடக சங்கீதம் வழங்கி வருகிறது. இந்த இரண்டு வகைப்பட்ட சங்கீதத்தினுடைய ஆரம்ப கால நிர்ணயம் ஒருவராலும் செய்ய முடியும் என்று தோன்றவில்லை. வால்மீகி ராமாயணத்திலேயே இசை 'மார்க்கம்' என்றும் 'தேசி' என்றும் இருவகையாகப் பிரிந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு வகை சங்கீதமும் நம்முடைய பாரத நாட்டில் மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்பதைத் தீர்மானமாகச் சொல்லலாம்.

'கர்நாடக சங்கீதம்' என்றால் சிலர் கர்நாடக தேசத்திலிருந்து உண்டானதாக நினைக்கிறார்கள். ஆனால் பெயரிலிருந்து அந்தத் தீர்மானம் செய்ய வேண்டியது அவசியமில்லை. தென் தேசத்தில் உதித்து, வளர்ச்சி பெற்று, மேன்மை அடைந்த சங்கீதமே கர்நாடக சங்கீதம். எப்படி 'இந்தியா' என்ற பெயர் முதன் முதலாக சிந்துநதிக்கு அருகே உள்ள பிரதேசத்தைக் குறித்து வந்து, காலடைவில் பாரத தேசம் முழுவதும் அப்பெயரால் குறிக்கப்பட்டு வழங்கி வருகிறதோ, அதே போல வட இந்தியாவின் அருகாமையில் உள்ள ஜனங்கள் அங்கிருந்த சங்கீதத்தைக் கர்நாடக சங்கீதம் என்று பெயரிட்டு அழைத்தார்கள். அது காலடைவில் தென்னிந்தியாவில் உள்ள சங்கீதத்திற்குப் பெயராக அமைந்து விட்டது. இன்னும் இப்பொழுதும் மலையாள தேசத்திலுள்ளவர்கள் தமிழர்களை அல்லது கிழக்குப் பக்கத்து ஜில்லாவிலிருந்து வந்தவர்களைக் 'கொங்கன்' என்று சொல்கிறார்கள். பழைய காலத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவுக்குக் 'கொங்க நாடு' என்ற பெயர் இருந்தது. இது மலையாள தேசத்துக்குப் பக்கத்து நாடாக இருந்தபடியால், அதற்குக் கிழக்கே இருக்கப்பட்டவர்களுக்குக் 'கொங்கன்' என்ற பெயர் ஏற்பட்டது. இது போல்தான் கர்நாடக சங்கீதம் தென்னிந்தியாவில் உள்ள சங்கீதத்திற்குப் பெயராக அமைந்தது.

முன் காலத்தில், அரசர்களும், ஜமீந்தார்களும், மடாதிபதிகளும் சங்கீதம் கற்றவர்களுக்கு உதவி அதன் வளர்ச்சிக்கு உபகாரங்கள் செய்து வந்தார்கள். சமீப காலங்களில் அரசர்கள் போய் விட்டார்கள். ஜமீன்தார்களுடைய வன்மையும், பணப் பெருக்கும் குறைந்து விட்டன. ஆகை

யால் கர்நாடக சங்கீதத்தினுடைய வளர்ச்சிக்கும், சங்கீதத்தில் வல்லமை அடைந்த பெரியோர்களைக் கௌரவிப்பதற்கும், தகுந்த ஸ்தாபனங்கள் இல்லாதபடியால், மியூஸிக் அகாடமி ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சபை ஏற்பட்டது முதல் சங்கீதம் கற்றவர்களைக் கௌரவப்படுத்தி, ஆதரிப்பதிலும், சங்கீதத்தைப் பரப்புவதிலும் முதன்மை அடைய ஆரம்பித்தது.

நாளடைவில் அபிவிருத்தி அடைந்து இன்று 25 வருடம் பூர்த்தி அடைந்து விட்டது. இது பெரும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய சம்பவம். கர்நாடக சங்கீதத்தின் அபிவிருத்திக்காக இந்த அகாடமி பல துறைகளில் வேலைசெய்து வருகிறது. சங்கீதத்தில் உள்ள அரிய விஷயங்களைச் சர்ச்சை செய்து விளக்குவதற்கும், அதில் உள்ள ஸ்வரங்கள், ராகலக்ஷணங்கள், தாளங்கள் முதலியவற்றை விளக்குவதற்கும் ஒரு சங்கம் டிசம்பர் மாதத்தில் வருடா வருடம் நடைபெற்று வருகிறது. அதில் பல பெரிய வித்வான்களும், சங்கீத ரஸிகர்களும் வந்து கலந்து கொண்டு பயன் அடைகிறார்கள். 1931-ம் வருஷத்திலிருந்து சங்கீதப் பயிற்சிக்கு ஒரு வித்யாசாலை ஏற்படுத்தப்பட்டு அதில் மாணவர்களுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்க ஏற்பாடாகி நடந்து வருகிறது.


பழைய காலங்களில் சங்கீதக் கச்சேரி என்றால் 6 அல்லது 7 மணி நேரம் ஒரேயடியாக நடக்கும். அந்தக் கச்சேரிகளில் என்ன கீர்த்தனைகள் பாடுவார்கள், என்ன ராகங்கள் பாடப் போகிறார்கள் என்பது ரஸிகர்களுக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாது. ஆனால் இப்போது அகாடமியில் நடக்கும் சங்கீத விழாவில், யார் யார் என்ன பாட்டு, என்ன ராகங்கள், தாள வகையறாக்கள், பல்லவிகளுடைய பெயர் முதலியவைகள் அச்சிட்டு எல்லோர்க்கும் தெரியப்படுத்தப் படுகின்றன. கச்சேரியும் நான்கு அல்லது மூன்று மணிக்குள் நடக்க வேண்டுமென்றும் ஏற்பாடாகி நடந்து வருகிறது. இந்தப் புது முறையால் சங்கீதக் கச்சேரிக்கு வருகிறவர்களுக்குப் பாடப்படுகிற கீர்த்தனைகளின் அறிவும், ராக உணர்ச்சியும் நன்றாகப் பரப்பப்படுகிறது. பிரசித்தி பெற்ற சங்கீத வித்வான்களும் சுருக்கமான காலங்களில் அழகாகப் பாடும்படியான தேர்ச்சி அடைந்து வருகிறார்கள். புதிய இளைஞரான வித்வான்களும் மேடையில் வந்து மேன்மை அடையும்படியான உதவியும் மியூஸிக் அகாடமி செய்து வருகிறது. அநேக இளைஞர்களும் சங்கீதப் பயிற்சி இதனால் நன்றாக அடைகிறார்கள். வருஷந்தோறும் ஒரு சங்கீத வித்வானைச் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அதில் அவருக்குச் 'சங்கீத கலாநிதி' என்கிற பிருதை அளித்துக் கௌரவப் படுத்துகிறார்கள். அம்மாதிரி இருபத்துநாலு பெயர் பெற்ற ஸங்கீதரத்னங்கள் பிருதம் அடைந்திருக்கிறார்கள்.

இவ்விருபத்திநான்கு வித்வான்களில் இரண்டு பேர் புகழ்பெற்ற வழக்கு அறிஞர்கள் என்பது கவனிக்கத் தக்கது.

இந்த அகாடமி சென்ற சில வருட காலமாகச் சங்கீதக் கச்சேரிகளை சென்னை ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நடத்தி வந்தது. இனி சொந்தக் கட்டிடமும் அதற்குப் பொருத்தமான விசாலமான ஹாலும் கட்டுவதற்கு ஏற்பாடு ஆகி இருக்கிறது. இந்த 25 வருட பூர்த்தி ஆண்டில் அந்தக் கட்டிடத்தின் நிதிக்காக சங்கீத ரஸிகர்கள் மனமுவந்து முன்வந்து உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன். ஒலிபெருக்கி இல்லாமல் சங்கீதம் நன்றாகக் கேட்கும்படியான ஏற்பாட்டுடன் ஒரு ஹால் கட்ட வேண்டுமென்பது சங்கீத ரஸிகர்களின் எண்ணம். அந்தப்படி அமையுமென்று நம்பிக்கையோடு இருக்கிறவர்களுள் நானும் ஒருவன்.

சங்கீதத் திரிமூர்த்திகள் என்னும் தியாகய்யரும், முத்துசாமி தீக்ஷிதரும், ச்யாமா சாஸ்திரிகளும் தென் தேசத்தில்தான் பிறந்தவர்கள். புரந்தரதாஸ் எனப் பிரசித்திபெற்ற வாக்கேயக்காரரும் தென் தேசத்தில்தான் உதித்தவர். அதேமாதிரி தமிழில் இசையுடன் அமைக்கப்பட்ட பண்ணமரும் உயர்ந்த பாடல்களைப் பாடின நாயன்மார்களும், ஆழ்வார்களும் தென் தேசத்தில்தான் தோன்றினவர்கள். சமீப காலங்களில் கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் முதலான உயர்ந்த இசை வல்லாள்கள் தென் தேசத்தில் பிறந்து பெருமை பெற்றவர்கள். கர்நாடக சங்கீதம் இதுவரையில் மேன்மையாக வளர்ந்து வந்ததுபோல், இனியும் வளர்ந்து மேன்மை குறைவு படாமல் விளங்குவதற்கு மியூஸிக் அகாடமி நன்றாக வருங் காலங்களில் வேலை செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

மாந்தர்கள் கடவுளின் பூரண அருளைப் பெறும்படி செய்யும் சக்தி வாய்ந்தது நம்முடைய கர்நாடக சங்கீதம்தான். இன்னிசையால் தமிழ் பரப்பின ஞானசம்பந்தருக்குக் கடவுளே உலகோர் முன் தாளம் ஈந்தார் என்ற அதிசயம் பெற்றது நம்முடைய கர்நாடக சங்கீதம்தான். காந்தாரம் இசை அமைத்து, காரிகையார் நற்பண் பாடித் திருக்கோயில் வலம் வந்து கடவுள் அருள் புரியும் வைபவத்தைக் கண்டதும் கர்நாடக சங்கீதம் தான். என்றைக்கும் அழியாமல் இந்தச் சங்கீதம் மேல்மேல் வளரும்படி அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.



"நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஆந்திர பிராணின்ன் கொடுப்பதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவே இல்லை. ஆனால், நீங்கள் என் 'அசோகா' பாக்குத்தூளை ஒவ்வொன்றாக எடுத்துத் தின்பதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன்......"



டாக்டர் பரமசிவம் அவர்களின் வீட்டு முன் தாழ்வாரத்தில் இருந்த பெஞ்சியில், தலையில் கம்பளி கட்டிக் கொண்டும் கையில் மருந்து புட்டிகளுடனும் குழந்தை குட்டிகளுடனும் டாக்டரின் பேட்டிக்காக நாலைந்து நோயாளிகள் உட்கார்ந்திருந்தனர்.

டாக்டரின் வீட்டுத் தாழ்வாரத்தில் அவர் பேட்டிக்காகக் காத்திருந்தவர்களில் சிவராமனும் ஒருவன். காலையில் படுக்கையை விட்டெழுந்து குளித்துவிட்டு மடிப்பு கலையாத வெள்ளை வெளேர் என்ற உடைகளுடன் தாழ்வாரத்துக்கு வந்த டாக்டர் முதல் முதலாகச் சிவராமனைத்தான் கவனித்தார். டாக்டருக்குச் சிவராமனை நன்கு தெரியுமாகையினால், "என்ன மிஸ்டர், சிவராமன்! என்ன சமாசாரம்! உங்கள் தாயாருக்கு உடம்பு எப்படி இருக்கிறது!" என்று கேட்டார்.

சிவராமன் இடத்தை விட்டெழுந்து அவர் அருகில் சென்று, "அம்மா நேற்று ராத்திரி வயிற்று வலியினால் துடித்துப் போய் விட்டாள். பொழுது விடியும் போதுதான் சற்று வலி அடங்கிக் கண்ணயர்ந்தாள். என் குழந்தைக்குத் திடீரென்று ராத்திரி ஜுரம் வந்துவிட்டது. இன்னும் குறையவில்லை. கொஞ்சம் வீட்டுக்கு வந்து பார்த்துவிட்டுப் போகிறீர்களா!" என்று கேட்டான்.

"சரி! நான் 'டிஸ்பென்ஸரி'க்குப் போகும் போது வருகிறேன்" என்று டாக்டர் கூறச் சிவராமன் வீட்டுக்குத் திரும்பினான்.

அவனுடைய தாயார் சுமார் ஆறு மாத காலமாகச் சதா 'வயிற்று வலி, வயிற்று வலி' என்று துடித்துக் கொண்டிருந்தாள். எத்தனையோ மருந்துகள், எவ்வளவோ ஊசிகள் போட்டும் ஒன்றும் பயன் ஏற்படவில்லை. ஆகவே சிவராமன் டாக்டர் பரமசிவத்தினிடம் தன் தாயாரின் உடம்பைக் காட்டி யோசனை கேட்டான். அவரும் மருந்து கொடுத்து வந்தார்.

சிவராமன் வீட்டை அடைந்த சுமார் அரை மணி நேரத்திற்கெல்லாம் டாக்டர் பரமசிவம் அவனுடைய வீட்டு வாசலில் காரை விட்டு இறங்கினார். சிவராமன் அவரை வரவேற்றுத் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைக் காட்டினான். டாக்டர் குழந்தையின் உடலைச் சிறிது நேரம் பரிசோதனை செய்து விட்டு, "இது சாதாரண ஜுரம்தான்! வயிற்றில் மந்தம் வேறு இருக்கிறது. நீங்கள் இன்னும் அரை மணி கழித்து 'டிஸ்பென்ஸரி'க்கு வாருங்கள். உங்கள் தாயாருக்கும் குழந்தைக்கும் மருந்து கொடுக்கிறேன்" என்று கூறி விட்டுப் போனார்.

சிவராமன் ஒன்பது மணிக்குள் ஆபீஸுக்குப் போய் ஆக வேண்டும். அப்போதே மணி எட்டு ஆகி விட்டது. காலையில் எழுந்தது முதல் டாக்டர் வீட்டுக்குப் போய் விட்டு வருவதற்குத்தான் நேரம் சரியாக இருந்தது. குளித்து விட்டு ஒரு கொடியில் சென்று மருந்து வாங்கி வந்து விடலாம் என்று சிவராமன் நினைத்த போது, சமையல் அறையிலிருந்து வெளியே வந்த சரஸா, "அடுப்பில் உலையை வைத்து விட்டேன். வீட்டில் ஒரு மணி அரிசிகூட இல்லை; கடைக்குப் போய் அரிசி வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்று கூறிய வண்ணம் பையைக் கொண்டு வந்து நீட்டினாள்.

சிவராமனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. இருந்தாலும் அதை அடக்கிக்கொண்டு, கையில் பையுடன் ஓட்டமும் நடையுமாகக் கடைத் தெருவுக்கு ஓடினான். ஏனோ அன்று கடையில் அதிகக் கூட்டம். ஒரு படி அரிசி வாங்குவதற்குள் அரை மணி ஆகி விட்டது. மணி எட்டரை! மருந்து வாங்கி வருவதற்கு நேரமில்லை என்பதை உணர்ந்து வீடு திரும்பிய அவன், "எனக்கு ஆபீசுக்கு நேரமாச்சு. நான் ஆபீசுக்குப் போனப்புறம் நீ டாக்டரிடம் போய் மருந்து வாங்கிக்கொண்டு வா" என்று கூறிவிட்டு அரைகுறையாகச் சாப்பிட்டு அவசர அவசரமாக உடை யணிந்து கொண்டு ஆபீஸுக்குப் போய்ச் சேர்ந்தான்.

தன் கணவன் ஆபீஸ் சென்றவுடன் மருந்து வாங்கிக்கொண்டு வந்துவிட வேண்டும் என்று தான் நினைத்தாள் சரஸா. ஆனால் அவளுக்கு வீட்டு வேலை சரியாக இருந்தது. குழந்தை தூக்கம் கலைந்து எழுந்து 'வீல் வீல்' என்று அழ ஆரம்பித்து விட்டது. தொட்டிலை ஆட்டிக் குழந்தையைச் சமாதானப்படுத்தி, மறுபடியும் தூங்கப் பண்ணுவதற்குள் மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. டிஸ்பென்ஸரி மூடியாகி யிருக்கும்.

மத்தியானம் மூன்று மணி சுமாருக்குக் காப்பி டிபன் தயாரித்துவிட்டு டிஸ்பென்ஸரிக்குப் புறப்பட்டாள். அங்கே ஏகக் கூட்டமாக இருந்த படியால் அவள் வெகு நேரம் காத்திருக்க வேண்டியதாக இருந்தது. வெகு நேரம் கழித்து டாக்டர் பரமசிவம் சரஸாவை அழைத்து மருந்துப் பொட்டலங்களை அவளிடம் கொடுத்து, "பச்சைக் காகிதத்தில் கட்டி இருக்கும் மருந்து உங்கள் குழந்தைக்கு. சிவப்புக் காகிதத்தில் கட்டி யிருப்பவை உங்கள் மாமியாருக்கு. இந்தத் தடவை உங்கள் மாமியாரின் மருந்தைக் கொஞ்சம் மாற்றியிருக்கிறேன். அந்த அம்மாள் வயிற்று வலியினால் ரொம்ப துடித்தால்தான் இதைக் கொடுக்க வேண்டும். சாதாரண சமயத்தில் கொடுத்தால் உயிருக்கு ஆபத்து வந்துவிடும். இது ஒரு விஷ மருந்து. நான் சாயந்திரம் வந்து குழந்தையைப் பார்க்கிறேன்" என்று கூறினார்.

சரஸா மருந்துப் பொட்டலங்களுடன் விரைவாக வீட்டை அடைந்தாள். குழந்தையும் எழுந்திருக்கவில்லை. மாமியாரும் தூங்கிக் கொண்டிருந்தாள். குழந்தை தூக்கம் கலைந்து எழுந்தவுடன் மருந்து கொடுக்கலாம் என்று எண்ணிக் கொண்டு வேலையில் ஈடுபட்டு விட்டாள் சரஸா.

"குழந்தைக்கு உடம்பு எப்படி இருக்கிறது சரஸா! ஆபீசில் ஒரு மணி நேரம் 'பர்மிஷன்' கேட்டு வந்தேன். மருந்து வாங்கிக் கொண்டு வந்தாயோ!" என்று கேட்டான் சிவராமன்.

"நீங்க ஆபீசுக்குப் போனதிலேயிருந்து வீட்டிலே வேலை சரியாய்ப் போயிடுத்து. இப்போதான் டாக்டர் வீட்டுக்குப் போய் விட்டு வரேன். இன்னும் குழந்தைக்கு மருந்து கொடுக்கவில்லை!"

"குழந்தையைக் கவனிப்பதைவிட உனக்கு என்ன வேலை! காலையிலிருந்து என்ன செய்தாய்! மருந்தை எங்கே வைத்திருக்கிறாய் என்று சொல்லித் தொலை; நானாவது கொடுக்கிறேன்!"

சிவராமனின் கடுஞ் சொற்களினால் மனம் புண்பட்டிருந்த சரஸா, "எல்லாம் அலமாரியிலே தான் வைத்திருக்கிறேன். தேனிலே குழைத்துக் கொடுங்கள்" என்று அலுப்புடன் கூறிவிட்டுக் கணவனுக்குக் காப்பியை ஆற்றிக் கொண்டிருந்தாள். அப்போது சடாரென்று சரஸாவின் கவனத்தில் டாக்டர் சொன்ன விஷயங்கள் நினைவு வந்தன.

"குழந்தைக்கு மருந்தைக் கொடுத்து விட்டீர்களா!" என்றாள் பதை பதைப்புடன்.

"ஆமாம்! நீ கொடுக்காவிட்டால் என்னால் முடியாது என்று நினைத்துக் கொண்டாயோ!" என்று மருந்தைக் குழந்தையின் நாக்கில் தடவிய வண்ணம் சொன்னான்.

"எந்தப் பொட்டலத்தைக் கொடுத்தீர்கள்! சிவப்பா! பச்சையா!" என்று கேட்டாள்.

"ஏன், சிவப்புப் பொட்டலத்தைத்தான்!"

"ஐயோ! குடிமுழுகி விட்டதே! குழந்தைக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்று விட்டீர்களே!" என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

ஒன்றும் புரியாமல் திகைத்த சிவராமன், அழுகையும் அலறலும் கலந்த குரலில் சரஸா சொன்ன விஷயத்திலிருந்து தாயாருக்குக் கொடுத்த விஷ மருந்தைக் குழந்தைக்குக் கொடுத்து விட்டோம் என்பதை உணர்ந்து 'ஐயோ' என்று அலறினான்.

அதற்குத் தகுந்தபடி தூங்கிக் கொண்டிருந்த குழந்தை 'வீல்' என்று கத்தியது. கண்களைத் திறந்து 'பேந்தப் பேந்த' விழித்தது.

"என் கண்ணே! ராஜா!" என்று பதை பதைத்த வண்ணம் அவளை வாரி எடுத்துக் கொண்டு, "ஓடுங்கோ, ஓடுங்கோ! உடனே போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வாங்கோ!" என்று பதறினாள் சரஸா.

'சர்' என்ற சப்தத்துடன் வாசலில் டாக்டரின் கார் வந்து நின்றது. காரின் கதவைத் திறந்து கொண்டு, இறங்கிய டாக்டரைப் பார்த்து, "ஸார்! குழந்தைக்கு விஷத்தைக் கொடுத்து விட்டேன், ஸார்! குழந்தையைக் காப்பாற்றுங்கள். என் குழந்தையைக் காப்பாற்றுங்கள், ஸார்" என்று கைகளைப் பிசைந்த வண்ணம் பதறினான் சிவராமன்.

குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த சரஸா, டாக்டரைக் கண்டவுடன், "இவர் ஆபீஸிலேயிருந்து வந்தவுடன் மருந்து கொடுங்கள் என்றேன். ஆனால் இன்ன பொட்டலம் என்று சொல்லவில்லை. அவர் சிவப்புப் பொட்டல மருந்தைக் கொடுத்து விட்டார்" என்று கூறிவிட்டு அழுதாள்.

அத்துடன் இத்தனை நேரம் மிகுந்த பீதியுடனும் கலவரத்துடனும் காணப்பட்ட டாக்டர், சரஸாவின் வார்த்தைகளைக் கேட்ட பிறகு அமைதியடைந்தார். "மத்தியானம் மருந்துக் கடையில் ஒரே கூட்டம். அந்தச் சமயத்தில்தான் உங்கள் மனைவி மருந்து வாங்குவதற்காக வந்திருந்தாள். என் மூளை குழம்பி இருந்தபடியாலும் கவனக் குறைவினாலும், பச்சைப் பொட்டலத்தில் விஷ மருந்தையும் சிவப்புப் பொட்டலத்தில் குழந்தையின் மருந்தையும் வைத்துக் கட்டிக் கொடுத்து விட்டேன். அதை இப்பொழுது நினைத்துக்

கொண்டாடியால்தான் எங்கே விபரீதமாக நடந்து விடப் போகிறதோ என்று ஓடி வந்தேன். நீங்கள் பொட்டலத்தை மாற்றிக் கொடுத்ததும் நல்ல தாய்ப் போய் விட்டது" என்று அவர் கூறின போதுதான் சரளாவின் அழகிய முகத்திலும் சிவராமன் முகத்திலும் அமைதி காணப்பட்டது.

டாக்டர் குழந்தையைப் பார்த்துச் சிரித்த வண்ணம், "நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரப் பயல்டா, கையைக் காட்டுடா" என்று கூறிக் கொண்டே பரிசோதனையை ஆரம்பித்தார். குழந்தை டாக்டரின் முகத்தைப் பார்த்தபடியே 'பொக்'கை வாயைத் திறந்து சிரித்தது.

<u>படித்துப் பாருங்கள்</u>

ராஜாஜியின் நூல்கள்

ஹிந்து மதத்தின் பிரமாணமெனக் கொள்ளக் கூடிய நூல்களுள் முக்கியமானவை உபநிஷத்துக்கள். சிந்தைக்கும் வாக்குக்கும் எட்டாத பரம்பொருளை அறிந்து கொள்ளுவதற்கு வேதகாலத்து மகரிஷிகள் உபநிஷத்துக்களைச் செய்தார்கள். உபநிஷதக் கருத்தை யாவரும் எளிதில் உணரும் வண்ணம் நம் ராஜாஜி தமிழில் எழுதியிருக்கிறார்.

"வண்டியில் கட்டப்பட்ட குதிரையைப்போல் ஆத்மா சரீரத்தில் கட்டப்பட்டு நிற்கிறது. காண்பது கண் அல்ல; கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆத்மா. பேசுவது நாக்கல்ல; நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவது ஆத்மா. காதைக் கொண்டு இதைக் கேட்பேன் என்பது ஆத்மா. மனதும் ஆத்மா அல்ல; இதை எண்ணுவேன் என்று மனதைக் கொண்டு எண்ணுபவனும் மனதை அடக்குபவனும் ஆத்மா. மனதையே கண்ணாகக் கொண்டு தியானித்துப் பரமாத்மாவைக் கண்டு ஆனந்தம் கொள்ளுபவன் ஆத்மா."

இப்படி மெய்ப்பொருளின் தன்மையும் அதை உணர்ந்து உய்யும் நெறியும் மிகவும் தெளிவாக இந்நூலில் விளக்கப் பட்டிருக்கிறது. நூலின் பெயர் உபநிஷதப் பலகணி. விலை ரூ. 1—0—0.

ரோமாபுரியின் சக்கரவர்த்தியான மார்க்கஸ் அரேலியஸ் மிகப் பெரிய ஆத்ம ஞானி. அவர் தம்முடைய வாழ் நாளில் தமக்கு அவ்வப்போது தோன்றிய எண்ணங்களை யெல்லாம் குறித்து வைத்தார். தமது மனதைக் கட்டுப் படுத்தித் திடஞானம் பெறும் நோக்கத்துடன் அப் பெரியார் குறித்து வைத்தவை யெல்லாம், மனித குலத்தின் மயக்கத்தை நீக்கி அவர்களுக்கு உண்மையறிவை ஊட்டும் அருமருந்தாகத் திகழ்கிறது.

'எது நேரினும் நேர்க. என் உடலை அது தாக்குமே யன்றி என் மனதைப் பாதிக்காது. எதை அது தாக்குகிறதோ அதற்கல்லவோ அதைப் பற்றிக் கவலை! என் எண்ணத்தில் அது துன்பமாகு வொழிய என்னை அது என்ன செய்யும்! அதைத் துன்பமாகக் கொள்ளுவதும் கொள்ளாமல் இருப்பதும் என் சுதந்திரம்"—என்று இந்நூலில் ஓர் இடத்தில் படிக்கும்போது, சஞ்சலம் அடையும் மனதில் சாந்தி பிறவாமல் இராது. ஆத்ம சிந்தனை என்னும் இவ்வரிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்து ராஜாஜி அனைவருக்கும் ஞான விருந்து அளித்திருக்கிறார். விலை ரூ. 1—8—0.

அஞ்சாமை என்பது வெறும் தேக பலத்தினால் மட்டும் பெறக்கூடிய பொருளல்ல; வேதாந்த ஞானத்தின் மூலம், அசைக்க முடியாத ஆத்ம பலத்தைப் பெற்றவன்தான் எதற்கும் அஞ்சாமல் இருக்க முடியும். அச்சமில்லை என்னும் இந்நூல் அச்சமற்ற வாழ்க்கையை அழகாகக் கூறுகிறது. விலை: 0—6—0.

கண்ணன் பார்த்தனுக்குச் சாரதியாகி அவனுக்கு கீதையின் மூலம் ஞானத்தை அருளினார்; கர்மத்தையும் தர்மத்தையும் விளக்கினார்; யோகத்தையும் மோக்ஷத்தையும் பற்றி விவாதித்தார்.

கண்ணன் காட்டிய வழி என்னும் நூலில் ராஜாஜி அவர்கள் கீதை காட்டும் பாதையைத் தெளிவாகக் காட்டுகிறார்.

"பகவத் கீதையானது ஹிந்து மதத்தில் பற்றுள்ள அனைவரும் ஒப்புக் கொண்டு மதிக்கும் நூல். அதை எல்லாச் சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் சாஸ்திரமாக அங்கீகரிக்கிறார்கள். இரண்டு முக்கியமான விஷயங்கள் பகவத் கீதையினால் புத்துயிர் அடைந்ததாகச் சொல்லலாம். ஒன்று, கேவலம் வேள்வி மார்க்கத்துக்குப் பிராதான்யம் குறைந்தது. இரண்டாவது, துறவு மார்க்கம் ஒன்றே மோக்ஷ சாதனம் என்ற அபிப்பிராயம் திருத்தப் பட்டது. வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களை நடத்தியே தருமத்தில் நிற்கலாம் என்ற உண்மையைக் கீதை நன்றாக ஊர்ஜிதப் படுத்திவிட்டது" என்று இந்நூலில் ஓர் இடத்தில் கூறுகிறார். நூல் முழுவதும் படித்தால் இருட்டு அறையில் வெளிச்சம் போட்டது போல் பல அரிய பொருள்கள் சுலபமாகத் தெரிகின்றன. விலை: ரூ. 2-0-0

ரசாயன சாஸ்திரத்தை ஆங்கிலமே தெரியாத பழைய காலத்து மனிதருக்கு விளக்குவது மிகவும் கடினமான காரியம். இந்த அரும் பெருங் காரியத்தை ராஜாஜி திண்ணை ரசாயனம் என்னும் நூலில் நன்கு சாதித்திருக்கிறார். விலை: அணா 12.

எந்த ஒரு சிக்கலான விஷயத்தையும், தத்துவத்தையும் தெள்ளத் தெளிய யாவருக்கும் விளங்க வைக்கும் இணையற்ற ஆற்றல் படைத்தவர் நம் ராஜாஜி என்பது நாடறிந்த உண்மை.


ராஜாஜி மணிவாசகம் என்னும் இந்த நூலில், அவர் பல்வேறு சமயங்களில், பல்வேறு பொருள்களைப் பற்றிக் கூறியவற்றை யெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் கர்மத்துக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி அவர் கூறுகிறார்:

"காப்பி குடிக்கிறீர்கள். வயிறு கெட்டுப் போகிறது. அதுமட்டுமன்று. காப்பியை மறுபடியும் குடிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாகிறது. அப்படியே காப்பி குடிக்கும் வழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அந்த நோயைக் குணப்படுத்த முடிவதில்லை. ஆகவே கர்மம் என்னும் நியதியை அறிந்து கொள்ள வேண்டுமானால், ஒவ்வொரு செய்லுக்கும் இவ்விதமாக ஏற்படும் இரண்டு பயன்களையும் அறிந்து கொள்ள வேண்டும். காப்பி குடிக்கும் பழக்கத்தை ஒழிக்க வேண்டுமானால் அதற்குப் பதிலாக வேறொன்று குடிக்கும் வழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அது போல் தீய செயல் செய்வதை நிறுத்த வேண்டுமானால், நல்ல செயல் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்."

இந்தமாதிரி எத்தனையோ விஷயங்களுக்கு மணி மணியான உதாரண விளக்கங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. விலை: 1—12—0.

பிரசுரம்: பாரதிப் பதிப்பகம்; சென்னை-17.


வாயில் அணிவதால்
உயரும் தோற்றம் (ந. 8)
கடாவ்
வாயில்
ஸ்ரீ கடாவ் மகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கம்பனி லிமிடெட்
மில்: பைகுலா, பம்பாய் - ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய். ஜவுளிக்கடை: மூல்ஜி ஜேதா மார்க்கெட், கோவிந்த் சௌக், பம்பாய் 2.

எல்லைக்கோடு

விமலன்

இந்த எல்லைப் புறச் சண்டை ராஜீய விவகாரங்களில் மட்டுமல்லாமல் ராஜத்தின் வீட்டுக் கொல்லைப் புறத்திலும் வந்து குதித்தது. பக்கத்து வீட்டுக்காரர்களின் எதிர்ப்பும் எழவே, இடிந்து கிடந்த கொல்லைப்புற மண் சுவர் முப்பத்து எட்டாவது அட்சரேகையாக மாறியது!

கலியாணமாக வேண்டிய பெண் ராஜத்திடம் எவ்வளவு அழகு இருந்ததோ, அதைப் போல ஆயிரம் மடங்கு அகம்பாவமும் வாய்த் துடுக்கும் நிறைந்திருந்தது. அதைக் குறித்துப் பெற்றவர்கள் சிறிது வருந்தினாலும் அவள் ஒன்றையுமே லட்சியம் செய்யவில்லை. அவளுடைய ரோஜாச் செடிக்கு விழ வேண்டிய சூரிய வெளிச்சத்தை அடுத்த வீட்டு வேப்ப மரம் மறைப்பதால் அதை அவர்கள் வெட்டி விட வேண்டும் என்று வாதம் செய்தாள். அது பலிக்காமல் போகவே, நாளொரு சண்டையும் பொழுதொரு மனஸ்தாபமுமாகப் பக்கத்து வீட்டு அம்மாளோடு பழகி வந்தாள்.

ராஜத்துக்குத் திடீரென்று அதிர்ஷ்டம் வந்தது. அதாவது, அடுத்த வீட்டுக் கௌரி அம்மாளோடு சண்டைப் பிடித்துக் கொள்ளத் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டு வீட்டுக் கொல்லைக்கும் இடையே இருந்த மண் சுவர் சரிந்து விழுந்து அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி வைத்தது! ஒன்று, கௌரி அம்மாள் காதில் பஞ்சைத் திணித்துக் கொண்டிருக்க வேண்டும் அல்லது காதையே ஒட்ட அறுத்துக் கொண்டிருக்க வேண்டும். ராஜத்தின் குற்றச் சாட்டுகள் ஒவ்வொன்றும் எட்டுக் கட்டை சுருதியில் வந்த போதும் அவள் வாயே திறக்கவில்லை. நிலப் பத்திரங்களில் கண்டிருந்தபடி கௌரி அம்மாள்தான் அந்தச் சுவரைக் கட்ட வேண்டியது. ஏற்கெனவே பண முடையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவளுக்கு, சரிந்து விழுந்த எல்லைப்புறச் சுவர் எல்லையில்லாத மன வருத்தத்தை உண்டாக்கியது.

"வயதாகவில்லை? பிறத்தியார் சிரமத்தைக் கவனிப்பதே யில்லை! குட்டிச் சுவருக்குக் கூடத்தான் வயதாகி யிருக்கிறது! இப்படி ஈரச் சுவரில் இடி விழுந்தாற்போல சொல்லச் சொல்ல சும்மா யிருக்கிறீர்களே!" என்று ஏழரைக் கட்டை சுருதியில் இரைந்து கொண்டிருந்தாள் ராஜம்.

"இந்தாடி, ராஜம்? கொஞ்சம் அடக்கமாக இரு. ஊரிலிருந்து கௌரி மாமியின் மருமான் இன்று வருகிறானாம். வாயைக் காட்டாமல் இரு......" என்று தர்மோபதேசம் செய்ய ஆரம்பித்தாள் ராஜத்தின் தாயார்.

"அவள் மருமான் வந்தால் எனக்கென்னவாம்? நான் ஏன் பயப்பட வேண்டும்? வந்தால், வந்ததுபோல் போகிறான்!"

அம்மாவுக்கும் பெண்ணுக்கும் வாக்கு வாதம் நடந்து முடிந்த சமயம் வாசலில் வண்டியின் சத்தமும் மாடுகளின் 'கல கல' வென்ற மணியோசையும் கேட்டது. விழுந்தடித்துக் கொண்டு திண்ணைக்கு வந்தாள் ராஜம். ஏன் வந்தாள் என்று அவளுக்கே தெரியாது!

வண்டியிலிருந்து கௌரியின் புருஷர் இறங்கினார். அதற்குப் பிறகு?...கண்ணைக் கொட்டாமல் பார்த்தாள் ராஜம். தோளில் தொங்கிக் கொண்டிருந்த காமிரா ஊசலாடக் கையில் ஏதோ ஒரு நாவலை வைத்துக் கொண்டு இறங்கினான் அவர் மருமான். பார்த்த கோடியிலேயே அவன் அழகன் என்று அவளுக்குத் தோன்றியது. ஆயினும் சண்டைக்காரர்கள் வீட்டுப் பிள்ளையல்லவா?

"அந்தஸ்தில் ஒன்றும் குறைச்சலில்லை!" என்று முணுமுணுத்த படியே வீட்டுக்குள்ளே திரும்பி வந்தாள் ராஜம்.

* * *

நடுக்கும் குளிரிலும் அதிகாலையிலேயே குளித்துவிட்டு ஈரத் தலை மயிரை ஆற்றிய படியே கொல்லைப்புறத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாள் ராஜம். பக்கத்து வீட்டு மருமானைப் பற்றிய நினைவுகள் வளைய வளைய வர ஆரம்பித்தன. அவளுக்குப் போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வெகு நாளாக ஆசை. காமிராவும் கையுமாக வந்திருக்கும் பக்கத்து வீட்டுப் பிள்ளை அவளை எடுப்பானா? பக்கத்துக் கொல்லையில் சலசலப்புச் சத்தம் கேட்கவே ராஜம் தன் நினைவு பெற்றாள். இடிந்து கிடந்த ஈரச்சுவர் பழைய சண்டையை நினைவுக்குக் கொண்டு வந்தது.

"இந்தச் சுவரைக் கட்டத் துப்பில்லை! ஒன்று தனக்காகத் தெரிய வேண்டும்; இல்லை. பிறர் சொல்லியாவது தெரிய வேண்டும்!"

வந்து கொண்டிருப்பது கௌரி அம்மாள் என்ற நினைப்பில் வழக்கம் போலப் பல்லவி பாடிக் கொண்டிருந்தாள் அவள்.

"மன்னிக்க வேண்டும். எனக்குச் சுவர் கட்டி வழக்கமில்லை! எனக்குப் போட்டோ எடுத்துத்தான் பழக்கம்."

பதிலும் அதைத் தொடர்ந்து சிரிப்புச் சத்தமும் வரவே, திடுக்கிட்டாள் ராஜம். எங்கிருந்தோ நாணம் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டது. சமாளித்துக் கொண்டாள்.

"உங்களைச் சொல்லவில்லை..."

"நல்ல காலம் பிழைத்தேன்; கொஞ்ச நாட்கள் ஓய்வுக்கு வந்த இடத்தில் என்னைச் சுவரையும் கட்டச் சொல்லி......"

"உங்களை யார் கட்டச் சொன்னது? உங்கள் அத்தையைத்தான்!"

"அடேடே! எங்கள் அத்தை சுவர் கூடக் கட்டுவாளா? எனக்குத் தெரியாதே!"



"வழியும் கோணல்! புத்தியும் கோணல்! என்ன நாகரிகமோ இது!" என்று கேட்டாள் பழையகோபத்தோடு ராஜம்.

சண்டைக்காரர்கள் வீட்டுப் பிள்ளைதானே? மேலே பேச்சை வளர்த்த இஷ்டமில்லாதவளாகக் குடத்துத் தண்ணீரை ரோஜாச் செடிகளுக்கு ஊற்ற ஆரம்பித்தாள். ஆயினும் தன்னை ஒரு தரம் போட்டோ எடுக்க மாட்டானா என்ற ஆசை மட்டும் விடவில்லை.

"அடேடே! ரோஜாவா? நன்றாக மலர்ந்திருக்கிறதே! என்ன கவர்ச்சி!" என்றான் அவன் வேப்ப மரத்தில் சாய்ந்தபடியே. அவளுக்கு என்னவோ போலிருந்தது. ஒருவேளை தன்னைத்தான் 'இலக்கிய பாணி'யில் பரிகாசம் செய்கிறானோ என்று நினைத்தாள்.

"கண் பட்டுவிட்டது, திருஷ்டி கழிக்க வேண்டும்!" என்றாள் துடுக்காக.

"எனக்கும் ஒரு பூ தரமுடியுமா?" என்று கேட்டான் அவன் ஆசையோடு.

"உங்களோடு பேச நேரமில்லை; நான் வருகிறேன்!" என்று உள்ளே வந்துவிட்டாள் ராஜம். அவளுக்குச் சாப்பாடு கூடச் சரியாகச் செல்லவில்லை. பித்துப் பிடித்தவள் போலிருந்தாலும் அடிக்கொரு தடவை 'சுவர்ச் சண்டை' பல்லவி வரிசை மட்டும் பாடத் தவறவில்லை.

மாலை நேரத்தில் சற்றுக் காற்று வாங்கலாம் என்று எண்ணி ராஜம் மொட்டைமாடிக்கு வந்தாள். இரண்டு வீட்டு மாடியையும் பிரித்துக் கொண்டிருந்த குறுக்குச் சுவரில் படர்ந்திருந்த மல்லிகைக் கொடி சலசலத்தது. 'குளு குளு' வென்ற தென்றல் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது அந்த முல்லைக் கொடி.

'தொப்' பென்ற சத்தம் கேட்டது. அடுத்த வீட்டு மருமான் நின்று கொண்டிருந்தான்!

"ஏன் இப்படிக் குதித்தீர்கள்? அம்மாவைக் கூப்பிடட்டுமா?"

"அம்மாதான் உன்னைக் கேட்கச் சொன்னாள். நெருப்புப் பெட்டி வேண்டுமாம்!"

"நெருப்புப் பெட்டி வேண்டுமென்றால் இப்படியா தீவட்டிக் கொள்ளைக்காரன் மாதிரி சுவரேறிக் குதிப்பார்கள்?"

"சுவர் கட்டச் சொல்ல வேண்டுமென்றால் இப்படியா தினமும் சண்டைக்கு நிற்பார்கள்?"

"நெருப்புப் பெட்டி இல்லை!"

"சுவரும் கட்ட முடியாது!"

"கட்ட வேண்டிய அவசியமே இல்லை!" என்ற குரலைக் கேட்டு இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினார்கள். ராஜத்தின் தந்தையைக் கண்டபோது ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. அத்திம்பேரின் சிநேகிதர் என்ற முறையில் பெண் பார்க்க வரும்படி பட்டணத்தில் வைத்துக் கழுத்தை அறுத்தவர் அவரேதான்! அத்திம்பேரும் இவரும் செய்த சூழ்ச்சியா, இது? அதை நினைத்த அவனுக்கும் வெட்கம் வந்துவிட்டது. பேசாமல் கீழே இறங்கிப் போய்விட்டான்.

கொல்லைப்புறத்தில் மீண்டும் அவனைக் கண்டவுடன் அவளுக்கு என்னமோ போல் இருந்தது. அவள் தைரியமாக அவனிடம் வந்து நின்று கொண்டாள். நெருப்புப் பெட்டியை அவனிடம் நீட்டினாள் ராஜம்.

"நாளைக்கே சுவரையும் கட்டிவிடுவோம்!"

"தேவையில்லை. இரண்டும் ஒரே கொல்லைதான் இனிமேல்!"

"பார்த்தாயா, ராஜம்! சண்டை போடும் மனப்பான்மை இருக்கும்வரைதான் எல்லைப் புறத்தில் பிரிவு வேண்டும். அன்பு வந்துவிட்டால் எல்லைக் கோடே தேவை இல்லையல்லவா?" என்றான் அவன்.



லிப்டன்ஸ்
ஹிமாலயன் கோல்டன்
டஸ்ட் டீ
LIPTON'S
HIMALAYAN BRAND
FINEST
GOLDEN DUST
TEA
'சிறந்த
தங்க
நிற
பானம்'

$3\frac{1}{2}$ % **வரியில்லாத** **வட்டி** **வருஷாவருஷம்** **உங்களுக்குக்** **கிடைக்கும்**	**10 வருஷ** **டிரெஷரி** **சேமிப்பு** **டிபாஸிட்டுகள்**

பத்திரங்கள்

100 ரூபாய் பெருக்கத்தில் வழங்கப்படும்

முதலீட்டு எல்லை	எங்கே வழங்கப்படுகின்றன
ரூ. தனி நபர் 25,000 இருவர் சேர்ந்து 50,000 ஸ்தாபனங்கள் 50,000 தர்ம ஸ்தாபனங்கள் 1,00,000 மைனர் குழந்தையின் பேரில் தகப்பனுரோ, தாயாரோ டிபாஸிட் செய்யும்போது, கார்டியன் சர்டிபிகேட்டு தேவையில்லை.	(i) கல்கத்தா, பம்பாய், மதராஸ், டெல்லியில் உள்ள இந்திய ரிசர்வ் பாங்கி ஆபீஸ்களிலும் மற்ற இடங்களில் சர்க்கார் டிரெஷரி அலுவல்களைக் கவனிக்கும் இந்திய இம்பீரியல் பாங்கி கிளை ஆபீஸ்களிலும். (ii) டிரெஷரி அலுவல்களைக் கவனிக்காத இந்திய இம்பீரியல் பாங்கி உள்ள "A" பாகத்திய ராஜ்யங்களில் உள்ள எல்லா ஜில்லா டிரெஷரிகளிலும். (iii) "A" பாகத்திய ராஜ்யங்களில் உள்ள எல்லா சப்-டிரெஷரிகளிலும். (iv) புஜ் (கட்ஜ்), இம்பால் (மணிப்புரி), குடகு - மர்க்காரா (குடகு) இவ்விடங்களில் உள்ள டிரெஷரிகளிலும்.

டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்குப் பிறகு எப்போது வேண்டுமானாலும் வட்டியில் கொஞ்சம் தள்ளுபடியாகத் திருப்பிப் பெற்றுக்கொள்ளக்கூடியவை. வட்டியில் தள்ளுபடியே தவிர முதலீடு அப்படியே இருக்கிறது.

மேற்கொண்டு செய்திகளுக்காகவும் அல்லது இந்த முதலீட்டைக் குறித்த விதிகளுக்காகவும், "கார்ட்டன் காஸில்", சிம்லா-3 என்னும் விலாசத்திலுள்ள நாஷனல் ஸேவிங்ஸ் கமிஷனருக்காவது, அல்லது உங்கள் ராஜ்யத்தின் மாகாண நாஷனல் ஸேவிங்ஸ் ஆபீசருக்காவது தயவு செய்து எழுதிக் கேளுங்கள்.

AC. 437 - TM

நான் நீதிபதியானேன்

ரா.வி.



பிள்ளையென்று பிறந்து விட்டால், இந்தக் காலத்தில் பெற்றோர்கள் பற்பல மனக் கோட்டைகள் கட்டுவது இயல்பே அல்லவா? அதுவும் நாகரிகம் வாய்ந்த இந்த யுகத்தில், 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்னும் வடமொழிப் பழமொழிக்கு விசித்திர வியாக்கியானம் செய்து கொண்டு, நம் பிள்ளை பெரியவனாகிப் படித்து முடித்ததும் அவனை எந்த உத்தியோகத்தில் போடலாம் என்பதைப் பற்றிப் பிள்ளை பிறந்த பத்தாம் நாளைக்கே பெற்றோர்கள் சிந்திக்கத்தொடங்கி விடுகிறார்கள். உலகம் அப்படி ஆகிவிட்டது என்றால் அதில் அவர்கள் தவறு என்ன?


பெற்றோர்கள் என்று எடுத்துக் கொண்டால் எல்லாப் பெற்றோர்களுமே ஒரு மாதிரிதான். மனிதர்களான அவர்களுக்குள் வேறு எந்த விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அபிப்பிராய பேதமே ஏற்படுவதில்லை. அது என்ன விஷயம், தெரியுமா? எந்தப் பெற்றோரும், தான் பார்க்கும் உத்தியோகத்தையே தன் பிள்ளையாண்டானும் பார்க்கட்டுமே என்று எண்ணுவதில்லை. வாத்தியார் தம் பிள்ளையை வாத்தியாராக்க விரும்புவதில்லை. "என்ன 'டனா டாவன்னா' உத்தியோகம், சார்! வேண்டவே வேண்டாம். அது என்னோடு போகட்டும். என் பையனுக்கு வேறு பிதுரார்ஜிதமாக அது வர வேண்டாம். கடனே உடனே பட்டுக் கலெக்டருக்குப் படிக்க வைத்து விடுவது என்று இருக்கிறேன்!" என்றுதான் சொல்லுவார். வக்கீல் தம் பிள்ளையை வக்கீலாக்க விரும்புவதில்லை. 'வறட்' 'வறட்' என்று வறட்டுத் தவளை மாதிரி கத்திக் கொண்டு என்ன சார், வேண்டிக் கிடக்கிறது வக்கீல் வேலை? என் பிள்ளையை டாக்டருக்குத்தான் படிக்க வைக்கப் போகிறேன் என்பார். டாக்டரைக் கேட்டுப் பாருங்கள்! ஒருநாளும் அவர் தம் பிள்ளையை டாக்டராக்க விரும்ப மாட்டார். அவர் சிரமம் அவருக்கல்லவா தெரியும்? "போயும் போயும் இந்த டாக்டர் வேலைக்கா போக வேண்டும்? இரவு—பகல் என்று பாராமல் ஒருவர் கூப்பிட்டால் ஓடவேண்டியிருக்கும்! அதற்கும் கைராசிக்காரர் என்று பெயர் வாங்க வேண்டும். இல்லாவிட்டால் போர்டைத் தொங்க விட்டுக் கொண்டு ஈ ஓட்ட வேண்டியிருக்கும். அதனால் என் பிள்ளையை இன்ஜினியரிங் காலேஜில் சேர்த்து விடுவதாகத்தான் உத்தேசித்திருக்கிறேன்" என்பார்.

மிராசுதாராக இருப்பவர் தம் பிள்ளையைச் சிவனே என்று காடு கழனியைப் பார்த்துக் கொண்டு மிராசுதாராக இருக்க விட மாட்டார். "வெய்யிலிலும் மழையிலும் வயல்-வாய்க்கால் என்று சுற்றிக் கொண்டு. போதும் போதுமே, நான் படுகிற சிரமம்! என் பிள்ளையாண்டான் வேறு படவேண்டுமா? நாலு இனால் படிக்கவைத்து ஏதாவது ஒரு உத்தியோகத்தில் இழுத்துவிட்டு விடலாம் என்றுதான் இருக்கிறேன்!" என்பார்.

அவர் அவர்கள் அப்படிச் சொல்லுவதற்கு என்ன காரணம்? தாம் பார்க்கும் வேலையில். தாம் படுகிற சிரமம் போதும். தம் பிள்ளையாவது நன்றாக இருக்கட்டுமே என்ற நல்லெண்ணமாகத்தானே இருக்க வேண்டும்?

ஏழை மிராசுதாரான என் தகப்பனார் என்னைப் பற்றி அப்படி எண்ணியதில் ஆச்சரியம் இல்லை. 'பிறக்காதா?' என்று தவங்கிடந்து வயது காலத்தில் ஏக புத்திரனாக பிறந்து செல்லமாக வளர்ந்த பிள்ளையான நான் நன்றாகப் படித்து நல்ல வேலையில் அமர்ந்திருப்பதைக் கண் குளிரக் கண்ட பின்தான் நாம் கண் மூட வேண்டும் என்று அவருக்கு அனவற்ற ஆசை. ஆகவே, அவர் என்னை எப்படியாவது நீதிபதியாக்கி விட வேண்டும் என்று இன்பக் கனவு கண்டார்.





முதல் ரஸிகர்:—அவர் சங்கீதத்திலே ஒரு புலி; இவரோ ராகம் பாடுவதில் பெரிய சிம்மம்!

மற்றவர்:—ஏன் வளர்த்துகிறீர்? எல்லாவற்றிலுமே இவர்கள் ஒரு பெரிய மிருகக் காட்சி சாலை என்று சொல்லிவிடுமே!

என் தாயாருக்கும் தகப்பனுருக்கும் எவ்வளவோ விஷயங்களில் மன வேற்றுமை இருக்கலாம். ஆனல் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் மன வேற்றுமையே இடையாது. என்னை நீதிபதி ஆக்கிப் பார்க்க வேண்டும் என்றுதான் என் தாயாரும் ஆசைப்பட்டாள்.

என் பெற்ருேர்கள் ஆசைப்பட்டதற்கு ஏற்ருற்போலவே, ஐந்தாவது வயதிலேயே நீதிபதி ஆவதற்கு வேண்டிய அறிகுறிகள் என்னிடம் தென்பட்டனவாம். என் தாயாருக்கும் தகப்பனுருக்கும் ஏதாவது தகராறு ஏற்பட்டு இருவரும் எலியும் பூனையுமாகி விட்டால், நான் நடுவில் நின்று பிடிவாதமாகக் குரங்கு மத்தியஸ்தம் செய்து வைப்பேனும். இருவரும் பேசாமல் நவக்கிரஹம் போல வக்கரித்துக்கொண்டால், வெகு சுலபமாக இருவருக்கும் ராஜி செய்து வைத்துப் பேச வைத்துவிடுவேனும். என் நியாயத்துக்குத் தலை வணங்கி அவர்கள் ஏற்காவிட்டால் தருக்க தண்டனை அளித்து இருவரையும் ஒன்று சேர்த்து வைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேனும். என்னிடத்தில் ஒரு நீதிபதிக்கு இருக்க வேண்டிய யோக்கியதாம்சங்கள் பரிபூரணமாக இருந்தனவாம். சாம, தான, பேத, தண்டங்களை உபயோகிப்பதில் நான் கை தேர்ந்தவனக இருந்தேனும். இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் என்றுதானே கேட்கிறீர்கள்? என் அப்பாவும் அம்மாவும் சொல்லித்தான்.

அவர்கள் உரையேற்ற உரையேற்ற என் உள்ளத்திலும் உரமேறி நீதிபதியாக வேண்டும் என்ற எண்ண - வித்து விழுந்து விட்டது. வயது ஆக ஆக, அந்த வித்து முளை விட்டு, வேரூன்றிப் பெரிய மரமாகவே கூட ஆகிவிட்டது. நான் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, படிப்பெல்லாம் முடிந்து நீதிபதியாகி விட்டதாகவே கனவு காணலானேன்; கோட்டை கட்டலானேன். "...ஆனல் நீதிபதி ஆவது. இல்லா விட்டால் இல்லை" என்று முடிவும் கட்டினேன். அப்பாவுக்குப் பிள்ளையாக நான் ஆசைப்பட்டதில் என்ன தவறு?

ஆனல் இந்த உலகத்துக் காரியங்கள் நாம் நினைப்பது போல நடந்துவிட்டால்தான் எவ்வளவோ தேவலையே! அப்படி எங்கே நடக்கிறது?

என்னை நீதிபதி ஆக்கிவிட வேண்டும் என்று என் தந்தை போட்டிருந்த திட்டம், என் தாயார் கொண்டிருந்த ஆவல், நான் வளர்த்திருந்த ஆசைக் கொடி எல்லாம் ஒரு நொடியில் தவிடுபொடியாகி விட்டது. எங்கள் எண்ணம் ஈடேறவில்லை. காலச் சக்கரம் என்னைக் கல்லூரி உபாத்தியாய ராக்கியது; ஹிந்தி ஆசிரியராக்கியது; கடைசியில் பத்திரிகைத் தொழிலிலும் புகுத்தியது. ஆனல் சட்டக் கல்லூரியை எட்டிப் பார்க்க விடவில்லை. என் ஆசை முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாக முடிந்து விட்டது.

அன்று காரியாலயத்திலே உட்கார்ந்து அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தபொழுது என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தேன். எனக்கு ஏற்பட்ட வியப்புக்கு ஓர் எல்லையில்லை. என் கண்கள்மீதே நம்பிக்கை ஏற்படாமல் கண்களைக் கசக்கிக் கொண்டு கவனித்தேன்.

ஆம்! நீதிபதி ஆக்கியிருந்தார்கள்! அதுவும் பிரதம நீதிபதி ஆக்கியிருந்தார்கள்! யாரை? என்னை! அதுவும் சட்டக் கல்லூரிப் பக்கம் தலைகூட வைத்துப் படுக்காத என்னை!

அந்த உத்தரவின் வாசகத்தில்தான் என்ன விநயம்! என்ன விநயம்! என் அப்பாவும் அம்மாவும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த, நான் 'கிடைக்குமா?' என்று இலவு காத்த கிளியாகக் காத்திருந்து நம்பிக்கை இழந்து விட்ட அந்த நீதிபதிப் பதவி என்னைத் தானகவே தேடிக்கொண்டு வந்து விட்டது! வலிய வரும் லக்ஷ்மியை யாராவது வேண்டாம் என்பார்களா? நான் உடனே சம்மதந் தெரிவித்துக் கடிதம் எழுதி விட்டேன்!

மதராஸ் ஹிந்தி வித்யாபீடத்துத் தலைவர் ஸ்ரீ சுந்தர கிருஷ்ணமாச்சாரியாரால் அவரது கல்லூரியின் ஆண்டு விழாவை ஒட்டி ஏற்படுத்தி யிருந்த ஹிந்திப் பேச்சுப் போட்டிக்கு நியமிக்கப் பட்டிருந்த நீதிபதிகளில் ஒருவனக இருந்து, மறுநாள் மாலை நான் தீர்ப்பு வழங்கினேன் என்ருல், நான் நீதிபதி ஆனேன் என்பது நிச்சயந்தானே?


என்றும் உங்கள்
கூட்டாளி
நீங்கள் வெளியே செல்லும் போதும், வீட்டிலே தங்கும்போதும் ஐடியால் உங்களுக்கு க்ஷேமத்தை யளிக்கும் கூட்டாளியாக விளங்கும். நீங்கள் அதை பூர்ண நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம். நோய் நிவாரணி, கிருமி நாசினி, நறுமணத்துடன் கூடியது. விஷக் கலப்பற்றது.
ITI
தயாரிப்பாளர்:
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லேபரேட்டரி லிமிடெட்
மல்லேஸ்வரம், பெங்களூர்
விற்பனை ஏஜன்டுகள்:
பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்
தபால் பெட்டி நெ. 63, சென்னை
35 TM.
ITEOL


பார்த்தாலே சொல்லலாம் அந்தப்
பாதரக்ஷைக்கு போட்டிருக்கும்
பாலிஷ் கீவீ என்று
நல்ல பாதரக்ஷைகளுக்கு நல்ல பாலிஷ் வேண்டும். அதனால் தான் எல்லோருமே கீவீ பாலிஷைப் பொறுக்கி எடுக்கிறார்கள். இன்றே கீவீ உபயோகிக்கத் தொடங்குங்கள் உங்களுக்கு அப்போது வித்தியாசம் தெரியும். அது பாதரக்ஷைகளை மிருதுவாகவும், தண்ணீர் தங்கவொட்டாமலும் பாதுகாத்து நேர்த்தியான இன்ப ஒளியைத் தருகிறது. இன்றே கீவீ பாலிஷ் வாங்குங்கள் — பிளாக், டார்க் டான், மற்றும் ஏழு நிறங்களில் கிடைக்கும்.
கவர்ச்சித்தோற்றத்தை விரும்புவோர் பளபளப்பான பாதரக்ஷைகளை அணிகிறார்கள்.
KIWI
BOOT POLISH
BLACK KIWI



19. மாதவி ராணியானாள்!

பட்டக்காரர் துரிதப்படுத்தவே, மாதவிக்கு வேண்டிய இரண்டொரு உடைகளை ஒரு பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டு வள்ளி புறப்படச் சித்தமானாள்.

வீட்டு வாசலில் நின்ற காரில் பெட்டியோடு வள்ளி, மாதவி, பட்டக்காரர் மூவரும் ஏறி அமர்ந்தனர். கார் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி விரைவாகச் சென்றது.

ரயில் புறப்படுவதற்குச் சிறிது நேரம் முன்னால் தான் அவர்கள் ஸ்டேஷனை அடைந்தனர். சிறிது நிற்கக்கூட அவகாசமில்லாமல் வள்ளியும் மாதவியும் வண்டியில் ஏற்றப்பட்டனர். பட்டக்காரர் வண்டியின் கதவை மூடி விட்டு வெளியே பிளாட்பாரத்தில் அவர்களைப் பாதுகாப்பவர்போல் நின்று கொண்டிருந்தார்.

வண்டி புறப்படுவதற்கு இன்னும் ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷ மிருக்கலாம். அந்தச் சமயம் யாரோ ஒரு கனவான் பட்டக்காரரை நெருங்கி, "அந்த நாடோடிப் பயல் தப்பி விட்டான் போலிருக்கிறதே! அவன் காதலி மட்டும் அப்படி சாட்சியம் சொல்லி யிருக்காவிட்டால் அந்தப் பயல் மீள முடியாது......" என்றார். பட்டக்காரர் சங்கடத்தோடு அதை ஆமோதிப்பவர்போல் தலையை ஆட்டினார். அந்த மனிதர் பட்டக்காரரிடம் சொல்லிய வார்த்தைகள் வண்டியில் உட்கார்ந்திருந்த மாதவியின் காதிலும் விழுந்தன.

வண்டி புறப்படுவதற்காக மணி அடிக்கப் பட்டது. வண்டியும் நகர்ந்தது. பட்டக்காரர் வள்ளியிடம் மாதவியை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்தார்.

'சிங்காரம் தப்பித்துக் கொண்டான். அவனுடைய காதலி சொல்லிய சாட்சியத்தினால் தப்பித்துக் கொண்டான்...' இந்த வார்த்தைகள் மாதவியின் செவியில் ஒலித்துக் கொண்டிருந்தன.

'அவனுக்குக் காதலி யார்! என்னைத் தவிர இன்னொருத்தி அவனுக்கு எப்படிக் காதலியாக முடியும்! அப்படி எவளாவது அவனுடைய காதலி என்று சொன்னால் அது சுத்தப் பொய். அதை நான் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன். நான் ஒருத்திதான் அவனுடைய காதலி. எனக்காக அவன் காத்துக் கொண்டிருப்பான். இப்பொழுதே அவனை நான் போய்ச் சந்திக்க வேண்டும்...' என்று அவள் நினைத்தாள். அந்தச் சமயம் வண்டியில் அவளையும் வள்ளியையும் தவிர வேறு ஒருவருமில்லை. அப்பொழுது அவளை வேறு யாரேனும் பார்த்திருந்தால் நிச்சயம் ஒரு பைத்தியக்காரி என்றுதான் நினைப்பார்கள். அவள் சட்டென்று எழுந்தாள். அப்பொழுது வள்ளிக்கு அவளைத் தடுத்து நிறுத்தக் கூட அவகாசமில்லை. மாதவி படபடப்போடு கதவைத் திறந்து ஓடும் ரயிலிலிருந்து பொத்தென்று குதித்து விட்டாள். வள்ளி கதவுக்குப் பக்கத்தில் பாய்ந்து வந்து வீறிட்டுக் கத்தினாள். கீழே குதித்த மாதவி எவ்வித அபாயமு மில்லாமல் ஓடினாள்.

அதுவரையில் மெதுவாக ஓடிக் கொண்டிருந்த வண்டியின் வேகம் அதிகரித்தது. அப்பொழுது வேறு வழி ஏதுவும் தோன்றாமற் போகவே, வள்ளியும் திடீரென்று குதித்து விட்டாள். அவள் குதித்தபோது வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருந்ததாலும் முன் ஏற்பாடு இன்றிக் குதி தவறிக் குதித்ததாலும் அவள் தரையில் விழுந்து படுகாயமடைந்தாள். அப்புறம் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. மாதவி அவள் கண்ணுக்கெட்டாத தூரத்தில் ஓடி மறைந்து விட்டாள்.

வள்ளி ரயிலிலிருந்து விழுந்த சிறிது நேரத்திற்குள் ரயில்வே காவலாளிகள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களிடமிருந்து அவள் எப்படி மீள முடியும்! அந்தச் சமயம் அவளிருந்த நிலைமையில் அவள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா என்பதே சந்தேகமாக இருந்தது.

சமீபத்திலிருந்த ரெயில்வே ஸ்டேஷனுக்கு உடனே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மாதவிக்கு அங்கு என்ன நேர்ந்த தென்பது எப்படித் தெரியும்! அவளைக் குழந்தைப் பருவத்திலிருந்து தாய்க்கு மேலாகச் சீராட்டி வளர்த்த வள்ளிக்கு நேர்ந்த கதியை அவள் எப்படி அறிவாள்! கடைசி நிமிஷம் வரையில் வள்ளி மாதவிக்காகத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தாள் என்பதை அவள் அறிவாளா! அவள் தன் காதலனைக் காண அல்லவா ஓடிக் கொண்டிருந்தாள்!

•
• •

அன்று இரவு ஏரிக் கரையிலிருந்த மைதானத்தில் ஒரே கோலாகலமாக இருந்தது. சிங்காரம் நிரபராதி என்று தீர்மானிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டது அவர்களுக்குப் பெரிய குதூகலத்தை உண்டாக்கியது. இதை ஒருவருமே எதிர்பார்க்கவில்லை. அன்று இரவு விருந்து வைப்பதாக எல்லோரும் தீர்மானித்து விட்டனர். அந்த விருந்து தங்கத்துக்கு வைத்த பரிச விருந்தை விடச் சிறந்ததாக இருக்கும் போல் தோன்றியது.

அந்தப் பெரிய மைதானத்தில் குடிசைகளுக்கிடையே எண்ணெய் விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. பாட்டும் கேளிக்கையும், சிரிப்பும் ஆரவாரமும் மிதமிஞ்சிய உணர்ச்சியோடு இருந்தன. சிங்காரம் விடுதலையடைந்தது இந்த உலகத்தையே வெற்றி கொண்டது போல் இருந்தது அவர்களுக்கு.

தங்கமும் சிங்காரமும் அவர்களிடையே நின்று அந்தச் சந்தோஷக் கொண்டாட்டத்தை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பெத்தண்ணனின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது. தங்கமும் சிங்காரமும் ஒருவரை ஒருவர் ஒட்டினாற்போல் நிற்பதை அடிக்கடி பார்த்துப் பூரிப்படைந்தான். எல்லோரும் மெய்மறந்த நிலையிலிருக்கும் போது அந்தக் கூட்டத்தினரை விலக்கிக் கொண்டு சிங்காரத்தின் பாட்டி வீரம்மா முன்னே வந்தாள். எல்லோரையும் அமைதியாக இருக்கும்படி கையமர்த்திவிட்டு, "இன்று ராத்திரியே நாம் ஒரு ஏற்பாடு செய்திடணும். நம்ம ராணி தங்கத்தாலே என் பேரன் உயிர் மீண்டு வந்தது பெரிசில்லே. அவள் நமக்கெல்லாம் இன்னுமொரு பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கணும். அவளுக்கும் சிங்காரத்துக்கும் இன்று இரவோடு இரவாகக் கல்யாணத்தையும் நாம் முடித்திடணும். இதையே தங்கத்திற்கும் சிங்காரத்துக்கும் நடக்கும் கலியாணக் கொண்டாட்டமாக்கி விடவேண்டும்" என்றாள்.

தங்கமும் சிங்காரமும் ஒருவரை ஒருவர் ஒட்டினாற்போல் நின்றாலும் அந்தரங்க வாழ்க்கையில் அவர்களுக்கிடையே உள்ள இடைவெளியை எப்படிச் சரிக்கட்ட முடியும்! வீரம்மாளின் வார்த்தையை ஆமோதிப்பதுபோல் அந்தக் கூட்டத்தினர் ஆரவாரம் செய்தனர். எல்லோர் முகத்திலும் ஒரு சந்தோஷமும் குதூகலமும் பொங்கி எழுந்தது.

தங்கத்தின் முகம் சோபை இழந்து வெளிறிப் போயிருந்தது. அவள் வாய் திறந்து அந்தத் தீர்மானத்துக்குத் தன்னுடைய சம்மதமின்மையைத் தெரிவிக்க நினைத்தாள். ஆனால் அப்பொழுதிருந்த ஆரவாரத்திலும், குதூகலத்திலும், அவளுடைய வார்த்தை அவர்களுடைய செவியில் ஏறாது என்று அவளுக்குத் தோன்றியது. ஆகவே, பலிக்கு நிறுத்தப்படும் ஆடு போல் தலை குனிந்த வண்ணம் நின்றாள்.

"ஆமாம்! இன்று ராத்திரியே கலியாணமும் நடத்திடணும்" என்ற குரல் தான் சுற்றிலும் எதிரொலித்தது. இந்தச் சமயத்தில் அந்தக் கூட்டத்தின் ஒரு புறத்திலிருந்து ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்தது போல் ஒரு திகைப்பும் கலவரமும் ஏற்பட்டன. யாரோ ஒரு பெண் பலவந்தமாகக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் யார் என்று அந்தக் கூட்டத்தில் அநேகருக்குத் தெரியும். பட்டக்காரரின் பேத்தி மாதவிதான்!

அவள் மூச்சு வாங்க ஆவேசத்தோடு சிங்காரமும் தங்கமும் நிற்கும் இடத்தை நோக்கி வந்தாள். அவளுடைய விலையுயர்ந்த பட்டுப் புடவை பல இடங்களில் கிழிந்து தாக படிந்து போயி



ருந்தது. அவளுடைய தலைக்கேசம் ஒழுங்கின்றிப் பிசிரம் பிசிரமாக நெற்றியில் விழுந்து தொங்கிக் கொண்டிருந்தது. மிரண்ட பார்வையோடும் வெளிறிய முகத்தோடும் அவள் பேய் போலத் தான் அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்தாள். அவள் தங்கமும் சிங்காரமும் நின்று கொண்டிருக்கும் இடத்தை அடையும் வரையில் இடையிலிருந்த ஒருவரையுமே லட்சியம் செய்யவில்லை. அவள் சிங்காரத்தை நெருங்கியதும் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு சட்டென்று திரும்பி அந்தக் கூட்டத்தினரை அலட்சியமாகப் பார்த்தாள்.

இப்படித் திடீரென்று அவள் அங்கு தோன்றியது எல்லோருக்கும் திகைப்பை ஏற்படுத்தியது. அந்தத் திகைப்பில் அவர்கள் சில விநாடிகள் ஊமைகளாகச் சமைந்து விட்டனர்.

மாதவி அந்தக் கூட்டத்தினரைப் பார்த்து, "உங்கள் சிங்காரம் என்னைச் சேர்ந்தவர். எனக்கே உரிமையானவர். அவர் உங்கள் ராணியையோ மற்ற எந்தப் பெண்ணையோ கல்யாணம் செய்து கொள்ள முடியாது. அவர் என்னிடம் தன் உயிரையே ஒப்படைத்திருக்கிறார். அதை வேறு யாரும் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ள முடியாது. நான் உயிரோடு இருக்கும் வரையில்..." என்று சொல்லி விட்டுச் சிங்காரத்தைப் பார்த்து, "நீங்களே உண்மையைச் சொல்லுங்கள்" என்றாள்.

அதுவரையில் அமைதியாக இருந்த கூட்டத்தினர் இதைக் கேட்டதும் மூலைக்கு மூலை ஆத்திரமும் கோபமும் கொண்டவர்களாகப் புகைந்தெழுந்தனர். சிங்காரம் மாதவியைப் பார்த்துக் கொண்டே, "ஆமாம்! இது உண்மைதான். இதற்காக நீங்கள் என்னை இந்தக் கூட்டத்திலேயிருந்து விரட்டினாலும் விரட்டி விடுங்கள். ஆனால் நீங்கள் சொல்கிறபடி நான் தங்கத்தைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது" என்றான். அவனுடைய உணர்ச்சி நிறைந்த குரல் அந்த மைதானம் முழுவதும் எதிரொலி செய்தது.

"இந்தப் பெண் யாரு?..." என்று ஒரு குரல் எழுந்தது கூட்டத்திற்கிடையே.

"இவளை எனக்குத் தெரியும். இந்த ஊர் பட்டக்காரரின் பேத்தி" என்று பதில் கூறியது மற்றொரு குரல்.

"யாராயிருந்தால் நமக்கென்ன! முதலில் இவளை இந்த இடத்திலேயிருந்து துரத்துங்க. இவளாலே தான் நமக்கு இவ்வளவு கஷ்டமும் நேர்ந்திருக்கிறது" என்றது இன்னொரு குரல்.

அந்தக் கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் ஆவேசம் கொண்டவர்கள் போல் எழும்பி மாதவியைத் தாக்க முயன்றனர். ஆனால் சிங்காரம் அவளுக்கு முன்னால் வந்து நின்று தன்னுடைய உறுதியான புஜங்களினால் அந்தத் தாக்குதலைச் சமாளிக்க முற்பட்டான். "யாராவது இவளை விரலால் தொட வேணும் என்றால் முதலில் என்னைச் சாக அடித்து விட்டுத்தான் அதைச் செய்யணும்" என்று கர்ஜித்தான்.

அதே சமயம் திடீரென்று புதிய விநோதமான குறுக்கீடு ஒன்று உண்டாகி ஆவேசம் கொண்ட அந்த மக்களின் மனத்தைத் திடுக்கிட வைத்தது. போலீஸ் ஊதுகுழலின் சப்தத்துடன் பல டார்ச்சு லைட்டுகள் பளிச்சென்று ஒளி வீசின. எல்லோருடைய பார்வையும் ஒளி வந்த பக்கம் திரும்பியது. ஏரிக்கரையை நோக்கி ஐந்தாறு உருவங்கள் வந்து கொண்டிருந்தன. கணப்பொழுதில் அந்த விளக்கொளியோடு வந்தவர்கள் அந்தக் கூட்டத்தினரை நெருங்கி விட்டனர். அவர்கள் யாரையோ தேடுவதுபோல் அங்கு குழுமி இருந்த



"பெரிய கச்சேரி செய்து விட்டாராம், இவர்......"

"ஏன் ஐயா, கச்சேரி பிடிக்கவில்லையோ?"

"பின்னே என்ன ஐயா, என் நண்பருடன் ஒரு விஷயத்தைப் பூரா சொல்லி முடிப்பதற்குள்ளே கச்சேரியைத் திடீரென்று முடித்து விட்டார் மனுஷன்!"

ஒவ்வொருவர் முகத்திலும் விளக்கின் ஒளியை பாய்ச்சிக் கொண்டே வந்தனர். அங்கு வந்த ஐவரில் மூவர் போலீஸ் உடையிலிருந்தனர். இருவர் சாதாரண உடையிலிருந்தனர்.

"யாரும் எங்கேயும் நகரக்கூடாது. நின்ற இடத்திலேயே நிக்கணும்......" என்று கடுமையான குரலில் உத்தரவிட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவருடைய கை விளக்கின் ஒளி சிங்காரமும் மாதவியும் நின்ற இடத்தை நோக்கிப் பாய்ந்தது. சிங்காரம் மாதவியைத் தன்னோடு அணைத்துக் கொண்டு நின்றான். அந்தக் கூட்டத்தினர் பயத்தால் வாயடைத்துப் போய் நின்றனர்.

அந்த ஐவரில் முன்னணியில் நின்றவர் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவருக்கு இரு புறத்திலும் இரண்டு ஜவான்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களை ஒட்டினாற் போல் பட்டக்காரரும் ஆனந்தனும் காட்சியளித்தனர். ஆனந்தனின் கண்கள் அந்தக் கூட்டத்தில் எந்த முகத்தையோ பார்க்க ஆவல் கொண்டு தேடி அலைந்து விட்டுக் கடைசியில் அங்கு ஒரு புறமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்த தங்கத்தினிடம் சென்று நிலைத்து நின்றன. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட பார்வை ஒருவருடைய இருதயத்தை ஒருவர் சரியானபடி அறிந்து கொள்ளப் போதுமானதாக இருந்தது.

அந்தக் கூட்டத்துக்குத் தலைவனாக விளங்கிய பெத்தண்ணன் அவர்களுக்கு முன்னால் வந்து நின்றான். அவர்கள் எதற்காக வந்திருப்பார்கள் என்று தெரிந்து கொண்டவன்போல், "உங்கள் பெண்ணுக்கு எவ்விதமான ஆபத்தும் நேருவதற்கு முன்னால் நீங்களே வந்து சேர்ந்தீங்க. நல்லவேளை! இல்லாவிட்டால் நான் என்னுடைய பலத்தை

எல்லாம் காட்டித்தான் அவளை எங்கள் ஜனங்களிடருந்து பாதுகாத்திருக்க முடியும். நீங்கள் முதலில் அவளை அழைச்சிக்கிட்டுப் போங்கள். அவள் இங்கே வந்து எங்கள் ராணியின் உரிமையைப் பறிக்க எண்ணினாள்......" என்றான்.

"உங்கள் ராணியா......! யார் அது!" என்றார் பட்டக்காரர்.

"ஆமாம்! எங்கள் ராணி தங்கம். அதோ நிற்கிறாள் பாருங்கள், அவள்தான். அவளுக்கு நாங்கள் புருஷனாப் பொறுக்கின சிங்காரத்தைத் தான் கல்யாணம் செய்துக்குவேன் என்று உங்கள் பேத்தி இங்கே வந்து வாதாடுகிறாள்......" என்றான் பெத்தண்ணன்.

பட்டக்காரர், ராணி என்று அவன் சுட்டிக் காட்டிய பெண்ணைப் பார்த்தார். அவர் சட்டென்று அந்தப் பெண்ணிடம் போய் வியப்போடும் ஆர்வத்தோடும் அவளைப் பார்த்துக்கொண்டே, "நீதான் ராணியா...! ஆனால் இந்த யோக்கியதை உனக்குத் துளிக் கூடத் தகுதி இல்லை. நீ இவர்கள் ராணி இல்லை. உன்னுடைய பிறப்பு வேறு. விதி என்னவோ கொஞ்சம் உன்னிடம் விளையாடியிருக்கிறது. நீதான் உண்மையில் குன்னத்தூர் பட்டக்காரரின் பேத்தி. ஆமாம்! என்னுடைய பேத்திதான்!" என்று சொன்னார் அவளை அன்போடு பார்த்துக் கொண்டே. அப்படிப்பட்ட ஆதரவும் அன்பும் பொருந்திய வார்த்தைகள் இதுவரையில் தங்கத்தின் செவிகளில் விழுந்ததே இல்லை. அவள் ஒன்றும் புரியாமல் மதிமயங்கிப் போய் நின்றாள்.

பட்டக்காரர் உடனே திரும்பிச் சிங்காரத்தின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மாதவியைப் பார்த்து, "என்னைப் பார்த்துப் பயப்படாதே, மாதவி. உன்னை நான் இனிமேல் எதற்கும் கட்டுப்படுத்த முடியாது. நீ இவர்களோடு தாராளமாக இருக்கலாம். உன் மனத்திலுள்ள ஆசை எனக்குத் தெரியும். நீ தாராளமாகச் சிங்காரத்தையே கல்யாணம் செய்து கொள்ளலாம். இதோ பார்! நீ தங்கத்தின் பக்கத்தில் வந்து கொஞ்சம் நில்லு. இவர்களெல்லாம் உங்களைப் பார்த்து விட்டு நான் சொல்லப் போகும் அதிசயமான கதையை உண்மையென்று நம்ப வேண்டும்" என்றார்.

மாதவி அவருடைய உத்தரவுப் பிரகாரம் தங்கத்தின் சமீபமாக வந்து நின்றாள். பட்டக்காரர் அந்தக் கூட்டத்தினரைப் பார்த்து, "நீங்கள் ராணி என்று மதித்துக் கொண்டாடும் தங்கம் உண்மையில் இவளுக்குத் தாயாக நீங்கள் நினைக்கும் வள்ளியின் மகளல்ல. இவ்வளவு நாள் வரையில் என்னுடைய பேத்தி யென்று அழைக்கப்பட்டு வந்த மாதவிதான் உங்கள் உண்மையான ராணி. அவள்தான் வள்ளியின் வயிற்றில் பிறந்தவள். வள்ளி தன் குழந்தையை இழந்ததினால் கார் விபத்தினால் அனாதையாக விடப்பட்ட எங்கள் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து தன் குழந்தை என்று சொல்லி அவளை ராணியாக்கி இருந்தாள். தெய்வாதீனமாக வள்ளியின் குழந்தை எங்கள் குழந்தையாகப் பாவிக்கப்பட்டு எங்கள் வீட்டோடு வள்ளியின் பார்வையிலேயே வளர்க்கப் பட்டது. இதுதான் உண்மை. இதை வள்ளி வக்கீலையும் போலீஸ்காரர்களையும் முன்னிலையில் வைத்துக் கொண்டு சாகுந்தறுவாயில் சொல்லியிருக்கிறாள்" என்றார்.

இதைக் கேட்டதும் மாதவி, "வள்ளி இறந்து விட்டாளா! அவள்தான் என் தாயா!" என்று அலறிக் கொண்டே கீழே விழுந்தாள்.

அவளுக்குப் பக்கத்திலிருந்த சிங்காரம் அவளைத் தாங்கி அணைத்துக் கொண்டான். இதைப் பார்த்ததும் அந்தக் கூட்டத்தினர் சில வினாடி அப்படியே வியப்பில் மூழ்கிப் பட்டக்காரரையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் இன்னும் ஏதேனும் திடுக்கிடக் கூடிய விஷயங்களைச் சொல்லுவாரோ என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். மாதவி கண்களிலிருந்து நீர் தாரையாகப் பெருக, "வள்ளி அம்மா! வள்ளி அம்மா!" என்று சொல்லித் துடித்துக் கொண்டே இருந்தாள்.

பட்டக்காரர் அவளைச் சமாதானம் செய்வது போல், "மாதவி, வருத்தப் படாதே! அவள் நல்ல நிலையில் உனக்குப் பக்கத்திலிருக்கும்போது 'நான்தான் உன் தாயார்' என்று உன்னிடம் சொல்லி இருந்தால் உனக்கு எவ்வளவோ ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். நீ ஓடும் ரயிலிலிருந்து குதித்தவுடன் அவளும் குதித்து விட்டாள். நீ எவ்வித அபாயமுமின்றித் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டாய். அவள் படுகாயமடைந்து இறந்து விட்டாள். இறக்கும்போதுதான் அவள் தன் மனத்தில் புதைந்து கிடந்த இந்த ரகசியத்தைச் சொன்னாள்" என்று சொல்லிவிட்டுப் பெத்தண்ணனைப் பார்த்து, "இதோ நிற்கிறாள், உங்களுடைய உண்மையான ராணி! அவளை நான் இதோ உங்களிடம் ஒப்படைத்து விட்டேன். அதற்குப் பதிலாக நான் என்னுடைய சொந்தப் பேத்தியை என் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறேன். எனக்குத் தங்கத்தைப் பார்த்ததும் என்னுடைய பேத்திதான் என்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. ஏனென்றால் இவள் தன் தாயின் சாயலையே ஒத்திருக்கிறாள். என்னுடைய வீட்டில் என் மருமகளின் புகைப்படம் இருக்கிறது. அதைப் பார்த்தாலே உண்மை விளங்கும். இந்த ஊரில் என் மருமகளை நேரில் பார்த்த எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். அவர்கள் இவளைப் பார்த்தாலும் உண்மையைச் சொல்லுவார்கள்" என்றார்.

அவருடைய வார்த்தைக்கு யாரும் அங்கே மறுப்புக் கூறவில்லை. மாதவி தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிங்காரத்தின் முகத்தைப் பார்த்தாள். "அவர் சொன்ன அவ்வளவு விஷயங்களும் உண்மைதான். நான் உங்களைச் சேர்ந்தவள்தான். அதை என் மனமே எனக்குச் சொல்லுகிறது. வள்ளி என்மீது அவ்வளவு பிரியமாய் இருந்ததற்குக் காரணம் நான் அவள் உதிரத்தில் தோன்றிய குழந்தையாக இருந்ததுதான். நான் அவளுடைய மகள்தான். அவள் என்னை உங்கள் கண்ணிலேயே காட்டாமல் வளர்க்க நினைத்தாள். அதுவும் என்னுடைய நன்மையை உத்தேசித்துத்தான். என் சுகத்தைக் கருதித்தான். என் பிறப்பின் ரகசியத்தை எனக்குக் கூடத் தெரியாமல் மறைத்து வைத்து என்னை ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணாகப் பெருமையோடும் சுகத்தோடும் எப்பொழுதும் வைக்க வேண்டுமென்பது அவள் எண்ணம். ஆனால் எனக்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. எனக்கு உங்களோடு இருக்கத்தான் ஆசை! தங்கமே அந்தப் பெரிய மாளிகையில் பெருமையும் கௌரவமுமாக வாழட்டும். எனக்கு அதில் மிகுந்த சந்தோஷம்!" என்றாள்.

அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் அவள்தான் தங்கள் உண்மையான ராணி என்று தெரிந்து கொண்டதும் ஏதோ ஒரு அதிசயமான பிறவியைப் பார்ப்பது போல அவளையும் சிங்காரத்தையும் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள். சிறிது நேரத்திற்கு முன்னால் மாதவியைக் கோபத்தோடும் ஆத்திரத்தோடும் நோக்கிய கண்களெல்லாம் இப்பொழுது ஆதரவோடும் அன்போடும் பரிவோடும் நோக்கின.

அந்தச் சமயத்தில் ஆனந்தன் தங்கத்தை நெருங்கி அவளோடு ஏதோ பேசிக் கொண்டு நின்றான். அவர்கள் இருவரும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது முக்கியமல்ல. அவர்கள் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும் அப்பொழுது அவர்கள் பேசிக் கொண்டிருந்த காட்சி அவர்கள் இருவரையும் பற்றி ஒரு சரியான முடிவுக்கு வரப் போதுமானதாக இருந்தது.

பட்டக்காரர் பெத்தண்ணனைப் பார்த்து, "நான் சொன்னதில் எவ்விதமான தவறும் இருக்காது என்று நினைக்கிறேன். இவை எல்லாம் வள்ளி இறக்கும்போது அவள் வாயால் சொல்லிய வார்த்தைகள். இதோடு மட்டுமல்ல!" என்று சொல்லிக் கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு தங்கச் சங்கிலியை எடுத்துக் காட்டி, "இதோ, இன்னொரு ஆதாரம், தங்கம் என் பேத்தி என்பதற்கு! அவள் பிறந்தவுடன் இந்தப் பச்சைக் கல் பதக்கம் கோர்த்த சங்கிலி அவள் கழுத்தில் போடப்பட்டது. அவளை அபகரித்துக் கொண்டு போன வள்ளி குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றி இவ்வளவு நாளும் பத்திரமாக மறைத்து வைத்துக் கொண்டிருந்திருக்கிறாள். இன்றுதான் இதைத் தன் இடையில் செருகியிருந்த சிறிய துணிப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தாள். இதை நீங்கள் இன்னும் தீர விசாரிப்பதாக இருந்தாலும் விசாரிக்கலாம்" என்றார்.

"நீங்கள் சொன்ன போதே அதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுப் போச்சு. நாங்கள் சந்தேகப்பட இதிலே ஒன்றுமில்லே. ஆனால் நாங்கள் இத்தனை நாளும் எங்கள் உண்மையான ராணி யாரென்று தெரிந்து கொள்ளாம லிருந்தோமே, அதுதான் ஆச்சரியம்! தங்கம் ரொம்பத் தங்கமான பெண்ணு. நாங்கள் அவளை ரொம்பப் பிரியமாகவும் மரியாதையோடும் வளர்த்து வந்தோம். அவள் எங்களை எல்லாம் விட்டுப் பிரிய நேர்ந்தது தான் எங்களுக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. நீங்கள் தாராளமாய் அழைத்துக் கொண்டு போகலாம்!" என்றான் பெத்தண்ணன்.

"மாதவியையும் நான் ரொம்பப் பிரியமாகத் தான் வளர்த்தேன். அவளுக்கு எவ்விதக் குறையையும் நான் வைக்கவில்லை. ஆனால் சில விஷயங்களில் அவளுடைய போக்கு எனக்குப் பிடிக்காததால் கட்டுப்பாடு செய்தேன். ஆனால் அவளிடம் உள்ள பிரியம் எனக்கு என்றும் குறையாது. அவளும் என்னுடைய பேத்தியைப் போலத்தான். ஏனென்றால் அவளுடைய தாய் வள்ளி என் குடும்பத்தாரோடு, எங்கள் வீட்டுப் பெண்போல கூட நான் இருந்திருக்கிறாள். அவளுக்காக நான் என் சொத்தில் ஒரு பாகத்தை அவள் விரும்பா விட்டாலும் எழுதிவைக்கத்தான் போகிறேன்!" என்றார்.

"இதெல்லாம் வள்ளி செய்த ஒரு குற்றத்தினால்தானே ஏற்பட்டது! அவள் தன் குழந்தையின் நன்மையை மனதில் எண்ணியேதான் இந்த ரகசியத்தை இவ்வளவு நாளும் மறைத்து வைத்துக்கொண்டிருந்தாள்!" என்றான் பெத்தண்ணன்.

"இவ்வளவு நாள் அந்த ரகசியத்தை மறைத்து வைத்துக் கொண்டிருந்தது மாத்திரம் அவள் குற்றமில்லை. இப்பொழுது அந்த ரகசியம் வெளியாகிவிடப் போகிறதே என்பதற்காக ஒருவனைக் கொலை செய்தாள் பாரு, அதுவும் ஒரு பெரிய குற்றம்!" என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"என்ன! அவள் ஒரு மனிதனைக் கொலை செய்தாளா!" என்று கேட்டான் பெத்தண்ணன்.

"ஆமாம்; கோவிந்தனை அவள்தான் கொன்றாள். கோவிந்தனுக்கு மாதவியைப் பற்றியும்

பாடகர் படும் பாடு!



தங்கத்தைப் பற்றியும் ஆரம்பத்திலிருந்தே சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிறவியின் ரகசியத்தைப் பற்றி வள்ளியை மிரட்டித் தெரிந்து கொள்ள நினைத்திருக்கிறான். அன்று இரவு கோவிந்தன் வள்ளியை அந்தப் பாதையில் தனியே பார்த்த போது அவளைப் பலவந்தமாக மிரட்டி உண்மையைத் தெரிந்து கொள்ள முயற்சித்திருக்கிறான். அப்பொழுது வள்ளி அவனைக் கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறாள். இதையெல்லாம் அவளே சாகுந்தறுவாயில் சொல்லி விட்டாள்!'' என்றார் பட்டக்காரர்.

பெத்தண்ணன் பெருமூச்சு விட்டுக்கொண்டே, ''நல்ல வேளை! அவள் குற்றவாளியாகி விசாரணை செய்யப்பட்டுத் தண்டனை யடையாமல் இந்த மட்டும் அவளுக்கு உயிரைப் போக்கிக் கொள்ளக் கடவுள்தான் ஒரு வழியைக் காட்டி இருக்கனும்'' என்று சொல்லிவிட்டுத் தங்கத்தைப் பார்த்து, ''இதோ பாரு, தங்கம்! இவர்தான் உன் தாத்தா! நீ இவரோடு சௌகரியமாய் இரு. ஆனால் பதினேழு வருஷமாக உன்னைக் கண்ணைக் காக்கும் இமையைப்போல வளர்த்து வந்த இந்த ஏழைகளை மாத்திரம் மறந்துவிடாதே. அதுவே எங்களுக்குப் போதும்'' என்றான் சோகம் தோய்ந்த முகத்தோடு.

''நான் எப்படித் தாத்தா உங்களையெல்லாம் மறக்க முடியும்! என் உயிருள்ள வரையில் உங்களுக்கெல்லாம் என்னுலான உதவிகள் செய்து கொண்டிருந்தால்தான் என் மனத்துக்குத் திருப்தியாக இருக்கும். நீங்கள் ஏன் ஊர் ஊராகப் போக வேண்டும்! இதையே உங்கள் சொந்த ஊராக நினைத்துக் கொண்டு இருந்து விடுங்களேன்!'' என்றாள் தங்கம்.

பெத்தண்ணன் சிரித்துக்கொண்டே, ''நீ அசட்டுப் பொண்ணு, அம்மா! ஒன்றும் தெரியாமல் சொல்லுகிறாய். இந்த ஊரையே நாங்கள் ஆளும்படி விட்டாலும் ஒருக்காலும் தரிச்சிருக்க மாட்டோம். அது எங்கள் பிழைப்பு. அது தான் எங்களிடம் இருக்கிற ஒரே ஒரு பெரிய நல்ல கொள்கை!'' என்றான்.

''எனக்கும் தெரியும். உங்களைத் தடுத்து நிறுத்த முடியாதுதான். நான் இத்தனை நாளாய் உங்களோடு இருந்ததில் சிங்காரத்திற்காக நான் செய்த சிறு உபகாரம் என் மனதுக்கு எப்போதும் ஆறுதலைக் கொடுக்கும். உங்களுடைய வற்புறுத்தலின் பேரில் அவனுக்காக நான் சாட்சி சொன்னாலும் அதை ஆபத்தில் செய்ய வேண்டிய முக்கிய உதவியாகக் கருதியதால் எனக்கு ஒரு கெடுதலும் நேரவில்லை. மாதவி இதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவளும் சிங்காரமும் புருஷன் மனைவியாகி எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'' என்றாள்.

ஆனந்தன் உண்மையை உணர்ந்துகொண்டான். பிறருடைய வற்புறுத்தலின் பேரில்தான் தங்கம் நீதி மன்றத்தில் சிங்காரத்தின் உயிரை மீட்பதற்காக அப்படிச் சாட்சியம் சொல்ல நேரிட்டது என்பதைத் தெரிந்து கொண்டான். உண்மையாகச் சிங்காரத்துக்கு அவள் மீதோ அவளுக்குச் சிங்காரத்தின் மீதோ காதல் இல்லை என்பதை அந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவன் சரியாகத் தெரிந்து கொண்டான்.

பெத்தண்ணனோடு பேசிக் கொண்டிருந்த பட்டக்காரர் ஆனந்தனைப் பார்த்து, ''என்னையும் இன்ஸ்பெக்டரையும், இவர்கள் இன்று ராத்திரி நடத்தப் போகிற கொண்டாட்ட விளையாட்டுக்களை யெல்லாம் பார்த்து விட்டுப் போகும்படி பெத்தண்ணன் வேண்டிக் கொண்டிருக்கிறான். என் பேத்தி இதையெல்லாம் பார்த்து அனுபவித்தவள். அவள் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு சொந்த வீட்டுக்கு வருவதால் அவளைத் தாமதிக்க வைக்கக் கூடாது. நீதான் அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போக வேண்டும், ஆனந்தா! அவளை உன் கையில் ஒப்படைத்து விட்டேன். தெரிந்ததா! இப்பொழுது அவளுக்குத் துணையாயிருந்து வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவது போல எப்பொழுதும் துணையாக இருந்து அவளுக்கு நீதான் வழி காட்டவேணும்'' என்றார் குறும்பாகச் சிரித்துக் கொண்டே.

ஆனந்தன் ''சரி மாமா!'' என்றான் வெட்கத்தோடு சிரித்துக் கொண்டே. தங்கம் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு ஆனந்தனோடு கிளம்பினாள். சிறிது தூரம் சென்றதும் ஆனந்தன் மெதுவாக அவள் கையைப் பிடித்துக் கொண்டு, ''தங்கம்......இந்தப் பெயர் உனக்கு யார் வைத்தார்கள்!'' என்று அன்போடும் ஆதரவோடும் கேட்டான்.

''ஏன்! இந்தப் பேரு நன்றாய் இல்லையா!'' என்றாள் தங்கம் அவன் முகத்தை உற்றுப் பார்த்துப் புன்முறுவல் செய்து கொண்டே.

''இல்லை. இந்த நாடோடிகளுக்கும் இவ்வளவு அழகாகவும் பொருத்தமாகவும் பெயர் வைக்கத் தெரிகிறதே என்றுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது'' என்றான் அவளுடைய அழகிய கன்னத்தில் மெதுவாக ஒரு தட்டுத் தட்டி.

இந்தக் காதலர்களின் உருவம் ஏரிக் கரையின் இருளோடு சென்று மறைந்தபோது அந்த மைதானத்திலிருந்து வாத்தியங்களின் ஒலியும், பாட்டும் கரகோஷமும் எழுந்து இரவின் அமைதியைக் குலைத்தன. அந்தச் சமயம் பட்டக்காரர் மாதவியின் கரத்தைப் பிடித்துச் சிங்காரத்தின் கரத்தில் வைத்து ஆசி மொழி கூறினார். அப்பொழுது மாதவியின் இருதயத்தில் பொங்கி எழும் ஆனந்தம் அவள் முகத்தில் பிரதி பலித்தது. (முற்றும்)



கோலினோஸ்

இயற்கையின் அற்புதப் பச்சை க்ளோரோபில் சேர்ந்தது

'...உங்கள் பல் சுத்திகரிப்பில் இதுவரை ஏற்படாத மாபெரும் அபிவிருத்தி!

செடிகொடிகளை பசுமையுடன் வைத்திருக்கும் பொருளாகிய இயற்கையின் சிருஷ்டி க்ளோரோபில் உதவியால் நாள் முழுதும் வாய் துர்நாற்றத்தை அகற்றுங்கள்....பல் சிதைவும் சாதாரண ஈறுக்கோளாறுகளும் ஏற்படாமல் தடுங்கள்!

உங்கள் பல் பராமரிப்புக்கு இதுவரை இல்லாத முறையில் மிகப் பயன்படக்கூடிய மார்க்கம் இதுவே, சந்தேகமில்லை. க்ளோரோபில் சேர்ந்த அற்புதமான கோலினோஸ் பல் சிதைவையும் நோய்க் கிருமிகளையும் நேரடியாகத் தாக்குவது மட்டுமின்றி, வாய் துர்நாற்றத்தையும் நாள் முழுவதிலும் ஒழித்து விடுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பச்சை க்ளோரோபில் தான் — தாவரங்களை பசுமையுடன் வைத்திருக்க இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட அற்புத ரசாயனப் பொருள்!

க்ளோரோபில் சேர்ந்த கோலினோஸ் விசேஷ பலனளிப்பது தவிர, சிக்கனமானதுங்கூட—ஈரமில்லாத பிரஷ் மீது அரையங்குலமே போதுமானது. பச்சை அட்டைப் பெட்டியில் எல்லா ஸ்டோர்களிலும் கிடைக்கும். இன்றே வாங்கி, தந்த விஞ்ஞானத்தில் இதுவரை இல்லாத இம்மகோன்னத அபிவிருத்தியின் பயனை அடையுங்கள்!

புதிய பச்சை அட்டைப் பெட்டியை கவனியுங்கள்
ஸ்டாண்டர்ட் கோலினோஸ் (மஞ்சள் லேபில்) கூட கிடைக்கும்

2000 அமெரிக்க பல் நோயாளிகள் க்ளோரோபிலின் குணநயங்களை நிரூபிக்கின்றனர்

நான்கு வருட ஆராய்ச்சி மற்றும் சுமார் 2000 அமெரிக்க பல் நோயாளிகளைக்கொண்டு நடத்தப்பட்ட மிக விரிவான சோதனைகள்....இவைகளின் பலனாக நிரூபணமான முடிவை வெளியிட், க்ளோரோபில் உடன் கூடிய டெண்டல் க்ரீம்:—

- வழக்கமான சகல வகை ஈறுக் கோளாறுகளையும் சீராக்குகிறது.
- நாள் பூராவும் வாயில் துர்நாற்றம் ஏற்படாமல் தடுக்கிறது.
- பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்துக் கட்டுகிறது.

உங்கள் பல் டாக்டர் இச்சோதனைகளைப்பற்றி கூறுவார்....அவற்றின் பலன்களையும் வர்ணித்தும் செய்வார்.





'கோலினோஸ்' புன்னகையில் ஆரோக்யம் ததும்புகிறது!

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய் 1. கிளைகள்: கல்கத்தா — மதராஸ் — டில்லி


மேனி
அழகிற்கும்
யௌவன எழிலுக்கும்
KANTI TOILET SOAP
KANTI
KANTI
காந்தி
தரத்தில் சிறந்த ஸோப்
அளவில் பெரிய ஸோப்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், வடாலா, பம்பாய்.
SOM 178-Tamil



பிரசவ ஆஸ்பத்திரி வார்டிலிருந்த அவன் மனைவி சாரதாவையும் பிறந்து பத்து தினங்களாகியிருந்த கைக் குழந்தையையும் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான் கலியாணராமன். வார்டைத் தாண்டியதும் ஆஸ்பத்திரி லேடி டாக்டர் அவனைச் சந்தித்தார். கலியாணராமன் லேடி டாக்டரைப் பார்த்து, "இந்த வார்டு பத்தாவது நம்பர் படுக்கையிலிருப்பவள் என்னுடைய மனைவி. அவளுடைய பிரசவத்தைக் கவனித்துப் பார்த்து நீங்கள் அளித்த உதவிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குழந்தை பிறந்து இன்றோடு பத்து நாட்கள் முடிந்து விட்டதால் நாளைக்கு என் மனைவியையும் குழந்தையையும் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன். அதற்கு உங்கள் அனுமதி வேண்டும்" என்றான்.

லேடி டாக்டர் புருவத்தைக் கையால் தடவிய வண்ணம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு சட்டென்று ஞாபகம் வரவே "பத்தாம் நெம்பர் படுக்கையிலிருக்கும் சாரதாவைத்தானே நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்!" என்று கேட்டார்.

"ஆமாம்" என்று கலியாணராமன் பதிலளிக்கவே லேடி டாக்டர் மேலும் தொடர்ந்து "இந்தப் பிரசவத்தினால் அவளுடைய ஆரோக்கியமே அடியோடு சிதறிப்போயிருக்கிறது. அத்துடன் உடலிலிருக்கும் ரத்தம் வெகுவாகக் குறைந்திருக்கிறது. இப்பொழுதிருந்தே நல்ல சிகிச்சையும் அதற்கான உணவும் கொடுக்கா விட்டால் முடிவில் உங்கள் மனைவி தீராத நோய்க்கு ஆளாகலாம். தவிரவும் பிறந்திருக்கும் குழந்தையும் மிகவும் பலஹீனமாகவும் எடையில் குறைந்தும் காணப்படுகிறது. இதையெல்லாம் உத்தேசித்து உங்கள் மனைவியையும் குழந்தையையும் வேறு வார்டுக்கு மாற்றிக் கொஞ்ச நாட்கள் வைத்திருந்து சிகிச்சை செய்து அனுப்பலாம் என்று அபிப்பிராயப் படுகிறேன்" என்று கூறினார்.

வேறு வழியின்றிக் கலியாணராமன் லேடி டாக்டரிடம் "உங்கள் விருப்பம் போல் செய்து விடுங்கள்" என்று கூறி விடை பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான். அவன் வீட்டிற்குத் திரும்பியதும் திருச்சியிலிருந்து சாரதாவின் பிரசவத்தை ஒட்டி ஒத்தாசைக்காக வந்திருந்த அவனுடைய தங்கை கமலா "அண்ணா, என் வீட்டுக்காரரிடமிருந்து இன்றைக்குக் கடிதம் வந்திருக்கிறது. இன்னும் இரண்டொரு நாளில் புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறார். நீங்கள் மன்னியையும் குழந்தையையும் நாளைக்கு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டால் நாளை ராத்திரி ரயிலிலேயே நான் திருச்சிக்குப் போகலாம் என்று நினைக்கிறேன்."

"இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி வரும்படி எழுதி விட்டாரா, உன் கணவர்! நீ இன்னும் கொஞ்ச நாட்களாவது இங்கே தங்குவாய் என்று நினைத்தேன்" என்றான் கலியாணராமன்.

"நாளைக்கு மன்னியும் குழந்தையும் வந்து விட்டால் நான் ஊருக்குப் போவதில் உங்களுக்கு ஆட்சேபனை இருக்காது என்று நினைத்துத்தான் கேட்டேன்" என்றாள் கமலா மறுபடியும்.

கலியாணராமன் "கமலா! நாளைக்குச் சாரதாவும் குழந்தையும் ஆஸ்பத்திரியிலிருந்து இங்கே வர மாட்டார்கள். இன்றைக்கு லேடி டாக்டரைச் சந்தித்துப் பேசினேன். அவர் உன்னுடைய மன்னியின் தேக நிலைமையையும் கைக் குழந்தையின் உடல் நிலையையும் உத்தேசித்து இன்னும் குறைந்த பட்சம் இரண்டு மாதமாவது அவர்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் தங்கி மருந்து சாப்பிட்டு உடம்பைத் தேற்றிக் கொண்டால்தான் நல்லது என்று அபிப்பிராயப்படுகிறார். இதைக் கேட்டதும் எனக்கு முதலில் என்ன செய்வது என்று தெரியவில்லை. சாரதா இப்பொழுது இங்கே வந்தால் மறுபடியும் ஓய்வு ஒழிவு இல்லாமல் அவளுக்கு வேலை இருந்து கொண்டிருக்கும். அதனால் நான் லேடி டாக்டரின் அபிப்பிராயத்தை ஆமோதித்து விட்டேன். ஆனால்......" என்று தயங்கினான் கலியாணராமன்.

"என்ன அண்ணா! பேச்சைப் பாதியில் நிறுத்தி விட்டீர்களே!" என்றாள் கமலா.

"ஒன்றுமில்லை. நீயோ நாளை ராத்திரி ரயிலுக்குத் திருச்சிக்குப் போகவேண்டுமென்று சொல்லுகிறாய். இந்த நிலைமையில் என்னுடைய குழந்தைகள் ரகுவையும் லலிதாவையும் யார் கவனித்துக் கொள்வார்கள் என்றுதான் எனக்கு நிச்சயிக்க முடியவில்லை. இந்த இரண்டும் கெட்டான் குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு ஆபீசுக்குப் போனால் எனக்கு வேலையே ஓடாது" என்றான்.

"அண்ணா, நான் ரகுவையும் லலிதாவையும் என் கூடவே அழைத்துக்கொண்டு போய்த் திருச்சியில் வைத்துக் கொள்கிறேன். மன்னியிடமும் சொல்லி விடுகிறேன். ஆஸ்பத்திரியிலிருந்து மன்னியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு வந்ததும் திருச்சியிலிருந்து ரகுவையும் லலிதாவையும் திரும்பக் கூட்டிக் கொண்டு வந்து விடலாம்" என்றாள் கமலா.

"எதற்கும் யோசனை செய்து சொல்லுகிறேன்" என்று பதிலளித்து அப்போதைக்குப் பேச்சை முடித்துக் கொண்டான் கலியாணராமன்.

2

அடுத்த நாள் காலை ஆபீசுக்குப் போகும் வழியில் கலியாணராமன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து சாரதாவைப் பார்த்தான். அவளிடம் அதற்கு முன் தினம் தனக்கும் லேடி டாக்டருக்கும் நடந்த சம்பாஷணையைப் பற்றியும், அதைத் தொடர்ந்து தானும் கமலாவும் பேசிக் கொண்ட விவரத்தையும் தெரிவித்தான். எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டாள் சாரதா. கலியாணராமனைப் பார்த்து "கமலாவுக்கு எப்பொழு

துமே முன் கோபம். இது உங்களுக்குத் தெரியாததல்ல. நம்முடைய குழந்தைகளோ முரண்டும் சுபாவம் உள்ளவை. அவைகளை அங்கே அனுப்பினால் அவளும் கஷ்டப்படுவாள். குழந்தைகளும் அவஸ்தைப்படும்" என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள் அவள்.

கல்யாணராமன் "சரி. வேறு வழி என்ன என்று சொல்லு. எனக்கோ காலையில் எட்டு மணிக்கு ஆபீசுக்குப் போனால் சாயங்காலம் ஆறு மணிக்குத்தான் திரும்பி வர முடிகிறது. நான் வீட்டில் இல்லாத சமயத்தில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேறு யார் இருக்கிறார்கள்! கமலாவை நான் இங்கே எத்தனை நாள் நிறுத்தி வைக்க முடியும்! அவள் கணவனிடமிருந்து நேற்று கடிதம் வந்துவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக கமலா, அவளாகவே குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு போகிறேன் என்றாள். நான் சரி என்று ஒப்புக் கொண்டு விட்டேன். உன்னிடமும் அனுமதி கேட்க வந்தால் நீயும் முகம் கோணாமல் என்னுடைய ஆலோசனையை ஆமோதித்து விடு" என்றான் கல்யாணராமன் நிதானமாக.

"சரி! புது இடத்தில் போய்க் குழந்தைகள் கண் கலங்க வேண்டுமென்று அவைகளுக்குத் தலையெழுத்திருந்தால் அதை யார் தடுக்க முடியும்!" என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் சாரதா.

கல்யாணராமன் பொறுமையை இழந்து "வேண்டாததையெல்லாம் நினைத்து மனத்தை அலட்டிக் கொள்ளாதே. அவள் முன் கோபியாயிருந்தாலும் கமலாவுக்குக் குழந்தைகள் மேல் எவ்வளவோ ஆசை. தனக்குக் கல்யாணமாகி ஆறு வருஷங்கள் கழிந்தும் குழந்தை பிறக்கவில்லையே என்ற கவலையை என்னிடம் அவள் எத்தனை தடவை கூறிக் கண்ணீர் விட்டிருக்கிறாள் தெரியுமா! இப்படிப்பட்டவள் நம்முடைய குழந்தைகளை வேண்டுமென்றே கொடூரமாக நடத்துவாள் என்று நாம் நினைப்பது தெய்வத்துக்கே அடுக்காது" என்றான்.

கல்யாணராமனின் உணர்ச்சி மிகுந்த பேச்சு சாரதாவின் மனத்தில் தெளிவை உண்டாக்கியது. "கமலா என்னிடம் வந்து கேட்டால் நானும் 'சரி' என்று கூறிவிடுகிறேன்" என்றாள் சாரதா.

சாரதா எதிர்பார்த்தபடியே அன்று மாலை கமலா அவளிடம் வந்து விடை பெற்றுக்கொண்டு அன்றிரவு ரயிலிலேயே குழந்தைகள் ரகு, லலிதா இவர்கள் சகிதம் திருச்சிக்குப் பிரயாணமானாள்.

நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு வாரமும் திருச்சியிலிருந்த கமலாவிடமிருந்து கல்யாணராமனுக்குச் சாரதாவின் உடல் நிலையைப் பற்றியும் கைக் குழந்தையின் வளர்ச்சியைப் பற்றியும் விசாரித்தும் திருச்சியிலிருக்கும் குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பற்றித் தெரிவித்தும் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. இக் கடிதங்களைக் கல்யாணராமன் சாரதாவிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லும் போது சாரதாவுக்கு அவை எவ்வளவோ மன ஆறுதலை அளித்தன.

3

இதற்கிடையில் மூன்று மாதங்கள் உருண்டோடின. சாரதாவையும் கைக் குழந்தையையும் கல்யாணராமன் ஒரு நல்ல நாளில் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தான். குழந்தைகள் ரகுவும் லலிதாவும் இல்லாத வீடு சாரதாவுக்கு வெறிச் சென்றிருந்தது. வந்த தினத்திலிருந்தே குழந்தைகளைத் திருச்சியிலிருந்து கூட்டிக் கொண்டு வரவேண்டுமென்று கல்யாணராமனை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள் சாரதா. ஒவ்வொரு தடவையும் கல்யாணராமன் அவளுக்கு ஏதாவது சமாதானம் கூறுவான்.

கல்யாணராமனுக்கு உடனே போய்க் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வரவேண்டுமென்று ஆர்வம் இல்லை. காரணம் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வந்தால் அவைகளை வைத்துப் பராமரிப்பதற்குள்ள உடல் வலிமையைச் சாரதா இன்னும் பெறவில்லை என்று அவன் அறிந்திருந்தது தான். இன்னும் இரண்டொரு மாதம் கழித்துக் குழந்தைகளைத் திரும்பக் கூட்டிக் கொண்டு வரும் விஷயத்தைக் கவனித்தால் போதுமென்ற முடிவுக்கு வந்திருந்தான். இதை நேரிடையாகச் சாரதாவிடம் வெளியிடாமல் ஏதோ சாக்குச் சொல்லி வந்தான்.

இவ்வளவுக்கும் நடுவில் திருச்சிக்குச் சமீப காலத்தில் போயிருந்த கல்யாணராமனின் நண்பர் ஒருவர் குழந்தைகள் ரகுவும் லலிதாவும் ஒரு குறையுமின்றிச் சௌக்கியமாக இருக்கிறார்கள் என்ற தகவல் வேறு கொடுத்திருந்தது கல்யாணராமனின் தீர்மானத்திற்குப் பக்க பலமாக அமைந்தது.

இவ்விதமாக இரண்டு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் மாலை கல்யாணராமன் ஆபீசிலிருந்து



திரும்பி வந்ததும் திருச்சியிலிருந்து அவனுக்கு வந்த கடிதத்தைக் கொடுத்தாள் சாரதா. கடிதத்தை வாசிக்கும் போதே கல்யாணராமனின் முகத்தில் கவலையின் ரேகை படர்வதை நோக்கிய சாரதா படபடப்புடன் "என்ன! குழந்தைகளுக்கு ஏதாவது உடம்பு சௌக்கியமில்லையா!" என்று கேட்டாள்.

"குழந்தைகள் சௌக்கியமாக இருக்கிறார்களாம். ஆனால் கமலாவுக்குத்தான் இப்பொழுது இரண்டு மூன்று மாதங்களாக அடிக்கடி மயக்கமும் வாந்தியும் வருகிறதாம். நாளைக்கு அவளை டாக்டரிடம் கூட்டிக்கொண்டு போகலாம் என்று தீர்மானித்திருக்கிறாராம் அவள் வீட்டுக்காரர். சௌகரியப்பட்டால் ஒரு தடவை திருச்சி வரைக்கும் என்னை வந்து போகும்படி அவர் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்" என்றான் கல்யாணராமன்.

"அப்படியானால் நாளைக்கு நாம் திருச்சிக்குப் போய்க் கமலாவையும் பார்த்து விட்டு அப்படியே குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து விடலாம்" என்றாள் சாரதா.

"அதே மாதிரிதான் நானும் முடிவு செய்திருக்கிறேன்" என்றான் கல்யாணராமன்.

அடுத்த நாள் காலை ரயிலேறி இரண்டு நாள் பிரயாணம் செய்து கல்யாணராமனும் சாரதா

வும் கைக் குழந்தையும் திருச்சி சேர்ந்தார்கள். அங்கிருந்த கமலாவின் வீட்டை அடைந்ததும் கமலா ஆவலோடு அவர்களை எதிர்கொண்டு அழைத்துக் கைக் குழந்தையைக் கையில் வாங்கிச் சீராட்டத் தொடங்கினாள். குசலப் பிரச்னம் முடிந்ததும் கலியாணராமன் கமலாவைப் பார்த்து "உனக்கு உடம்பு சரியில்லை என்று எழுதியிருக் தாரே மாப்பிள்ளை" என்றான் கவலையோடு.

கலியாணராமனின் கேள்விக்கு நேரிடையாகப் பதில் அளியாமல் சாரதாவைத் தனியாக அழைத்துப் போய் அவளிடம் ஏதோ கூறினாள் கமலா.

முகத்தில் சந்தோஷம் ததும்ப சாரதா திரும்பி வந்து கலியாணராமனிடம் "நேற்றைக்கு லேடி டாக்டரிடம் கமலாவைக் கொண்டு போய்க் காட்டினாராம் மாப்பிள்ளை. உங்களுக்கு இந்த வருஷக் கடைசிக்குள் ஒரு மருமான் அல்லது மருமாள் பிறக்கப் போவதாக லேடி டாக்டர் கூறியிருக்கிறாராம்" என்றாள்.

இதைக் கேட்ட கலியாணராமனின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. "அப்படியானால் நான் அதிர்ஷ்டசாலிதான்" என்றான் குதூகலம் பொங்க.

இதற்குள் வெளியே விளையாடச் சென்றிருந்த ரகுவும் லலிதாவும் திரும்பி வந்தனர். குழந்தைகள் இரண்டுக்கும் நல்ல உடைகள் அணிவிக்கப்பட்டிருந்தன. அவைகள் இருவரும் தளதளவென்று வளர்ந்து ஆரோக்கியமாகக் காணப்பட்டார்கள். உள்ளே வந்ததும் அவர்கள் பெற்றோர்களைக் கண்டதும் அவர்கள் கலியாணராமனையும் சாரதாவையும் சூழ்ந்து கொண்டார்கள். குழந்தைகள் இரண்டையும் கொஞ்ச நேரம் கூட வைத்துக் கொண்டு கொஞ்சிக் குலாவினார்கள் கலியாணராமனும் சாரதாவும்.

சற்றுப் பொறுத்து கமலா, குழந்தைகள் இருவரையும் பார்த்து "அம்மாவும் அப்பாவும் இங்கேயே தான் இருப்பார்கள். அதற்குள் நீங்கள் உள்ளே போய்ச் சாப்பிட்டு விட்டு வாருங்கள்" என்றாள். குழந்தைகள் இருவரும் மறு பேச்சின்றி உள்ளே சென்றனர்.

இதைத் தொடர்ந்த சாரதா நன்றி கலந்த கண்களோடு கமலாவைப் பார்த்த வண்ணம் "கமலா, குழந்தைகளை இவ்வளவு நேர்த்தியாகப் பார்த்துக் கொள்ளுவாய் என்று நான் எதிர் பார்க்கவே யில்லை" என்றாள்.

"மன்னி, இப்பொழுது உண்மையைச் சொன்னால் பாதகமில்லை. நீ மூன்று மாதத்துக்கு முன்பு இருந்த நிலைமையில் நீ பிழைத்து எழுந்திருப்பாய் என்று என்னால் நம்ப முடியவில்லை. அது முதலே இந்தக் குழந்தைகள் பேரில் எனக்கு அளவுக்கு மீறி அபிமானம் விழுந்து விட்டது தவிரவும் இவர்களை இங்கே கொண்டு வந்து சில நாட்கள் வரை அவர்கள் போக்குப்படியே விட்டுப் பிடித்தேன். நாளடைவில் அவர்களைக் கண்டிக்க வேண்டிய சமயத்தில் கண்டித்துச் செல்லம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் செல்லம் கொடுத்து வளர்த்து வந்தேன். இப்பொழுது நாங்கள் ஒருவர் மனத்தை மற்றவர் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டோம்" என்றாள் கமலா.

இரண்டு நாள் தங்கிவிட்டுக் கலியாணராமனும் சாரதாவும் திருச்சியை விட்டுப் புறப்படும்போது ரகுவும் லலிதாவும் அவர்களுடன் வருவதற்கு மறுத்து விட்டார்கள். சாரதா அவர்களை வற்புறுத்தி அழைக்க அவர்கள் இருவரும் கமலாவின் கால்களைப் போய்க் கட்டிக் கொண்டனர். குழந்தை லலிதா, சாரதாவைப் பார்த்து, "அம்மா, உனக்குக் கோபம் வந்தால் நீ என்னையும் ரகுவையும் அடி அடி என்று அடித்து நொறுக்கி விடுவாய். அத்தைக்குக் கோபம் வந்தாலோ ஒரு தரம் எரிந்து விழுவாள். அத்திம்பேருக்குக் கோபமே வராது" என்றாள் அவள் மழலைச் சொல்லில்.

இதைக் கேட்டதும் கலியாணராமனும் சாரதாவும் சிரித்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள். கடைசியாகக் கமலா கலியாணராமனைப் பார்த்து "அண்ணா, எப்படியும் இன்னும் இரண்டு மூன்று மாதம் கழித்து என்னை வளை காப்பு வைபவத்துக்கு அழைத்துக் கொண்டு போக வரவேண்டாமா? அதுவரைக்கும் ரகுவும் லலிதாவும் இங்கேயே இருக்கட்டும்" என்றாள். வேறு வழியின்றிக் கலியாணராமன் அதை ஆமோதித்தான்.

* * *

அன்று திருச்சியிலிருந்து திரும்பும்போது சாரதா கலியாணராமனிடம், கமலா இவ்வளவு லகுவாகக் குழந்தைகள் மனத்தைக் கவர்ந்து விட்டாளே. அவள் அடியோடு மாறிப் போய் விட்டாள். பழைய கமலா மாதிரி இல்லையே" என்று கூறி ஆச்சரியப்பட்டாள்.

"குழந்தைகளின் அருமை தெரிந்த காரணத்தினால் தானோ என்னவோ அவளும் சீக்கிரத்தில் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள்" என்று சொன்னான் கலியாணராமன்.

ஒரு தாயாருக்குரிய மனோபாவம் கமலாவுக்கு இத்தனை நாள் வராத காரணத்தினால் தான் ஒரு வேளை குழந்தைப் பேறு இதுவரை அவளுக்குக் கிடைக்கவில்லையோ என்னவோ என்று ஒருகணம் ஐயமுற்றது சாரதாவின் தாய் உள்ளம்.



யாழ்ப்பாணத்தில் பட்டமளிப்பு விழா

தமிழ்ப் பெரும் புலவர்களைக் கௌரவித்து அவர்களின் பணிகளைப் பாராட்டும் வழக்கம் தொன்று தொட்டுத் தமிழகத்தில் இருந்து வருகிறது. ஆகவே யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் சமீபத்தில் செந்தமிழ் மணங்கமழும் யாழ்ப்பாணத்தில் பட்டமளிப்பு விழா ஏற்படுத்தி ஈழத்துப் புலவர்கள் நால்வருக்கும் பட்டங்கள் வழங்கியது.

இப் பட்டமளிப்பு விழா கவி யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைமையில் இந்த மாதம் முதல் தேதி அன்று யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்யாலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவுடன் சங்கத்தின் இருபத்தொன்பதாவது வருடாந்தர விழாவும் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரும், தபால் செய்தி அமைச்சருமான கௌரவ சு. நடேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் சிறப்பான அழைப்பை யேற்றுப் பன்மொழிப் புலவரும் பேராசிரியருமான திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பறந்து வந்து ஆண்டு விழாவில் இலக்கிய விரிவுரைகள் ஆற்றினர்.

சங்க காலப் புலவர்களின் வாழ்க்கையை நினைவூட்டிக் கொண்டு, ஈழத்தில் தமிழ்ப் பணியாற்றி வருபவர்கள் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசய்யர் அவர்களாவர்.

ஐயரவர்களின் ஆழ்ந்தகன்ற அறிவும் பேருழைப்பும் தமிழுக்குத் தந்த கருவூலங்கள் பல. அரச கேசரியின் இரகுவம்ச உரையும், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரமும், தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை - சொல்லதிகாரம், சேனாவரையருரை-பொருளதிகாரம் (பிற்பகுதி), பேராசிரியருரை என்பவற்றுக்குத் தனித் தனியாக எழுதிய உரை விளக்கக் குறிப்புகளும் அவற்றுள் விசேடமானவை. இப் பெரும் புலவருக்குச் சங்கத்தினர் **வித்துவ சிரோமணி** என்னும் கௌரவப் பட்டம் வழங்கினர்.

பண்டித மணி பிரம்ம ஸ்ரீ க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள், சங்கச் சான்றோர் செய்யுளோடொப்ப நின்று நிலவும் தகைமைத்தாய் மூவியலான் நாற்பொருளும் தெருட்டும் **உலகியல் விளக்கம்** என்னும் நன்னூல் தந்த வள்ளன்மையார். வடமொழி, செந்தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை வாய்ந்த பாரதியார் அவர்களுக்குப் **புலவர் மணி** என்னும் பட்டம் பாஷாபி விருத்திச் சங்கத்தினரால் வழங்கப்பட்டது.

சுன்னாகம் ஸ்ரீ குமாரசாமிப் புலவர், முத்தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகளார் ஆகிய இருபெரும் புலவர்களிடம் பாடங் கேட்டுப் பண்டிதராக விளங்கும் திரு வ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள், மட்டக்களப்புத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள். செந்தமிழ்ச் சுவை நனி சொட்டச் சொட்ட, தேனினும் இனிய பாடல்களைப் பொழியும் திறன் இவருக்கு இயற்கையாக உண்டு. ஆண்டு விழாவில் பண்டிதரவர்கள் தமது பகவத்கீதை வெண்பா என்ற நூலினை (கையெழுத்துப் பிரதி) அரங்கேற்றினார்கள். இவ்வாண்டு அப்புலவருக்குப் **பண்டித மணி** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராக இன்று விளங்குபவர் வித்துவான் ந. சுப்பைய பிள்ளை அவர்கள். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களின் கல்வித் தொண்டைப் பின்பற்றித் தமிழ்ப் பணியாற்றும் இப் பெரியார் செந்தமிழிலும் ஆரியத்திலும் புலமை வாய்ந்தவர். தஞ்சை வாணன் கோவை, சொக்கப்ப நாவலர் உரைக்கு ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதிய பெருமை இவருக்கு உரியது. சங்கம் இத் தமிழ்ப்பேரறிஞருக்குப் **பண்டித மணி** என்னும் கௌரவப்பட்டத்தை வழங்கிப்பாராட்டியுள்ளது.

கலையாக்கத் துறையில் சலியாது தொண்டாற்றி வரும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் என்றும் நின்று நிலவுவதாக! — **மணி.**



பட்டம் பெற்ற ஈழநாட்டுத் தமிழ்ப் பெரும் புலவர்கள்



அதனால்தான் மிகச்சிறந்த பால் உணவான "கிளாக்ஸோ"வை எனக்கு அளிக்க வேண்டும். இது உஷ்ண தேசங்களில் உள்ள குழந்தைகளுக்கு பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்டது. கிளாக்ஸோ கைபடாதது. அதனாலேயே கெடுதல் விளைவிக்கும் கிருமிகளுக்கு இடம் தருவதில்லை.

படிப்படியான வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பொருள்களும் கிளாக்ஸோவிலிருந்து எனக்கு கிடைக்கின்றன.

Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான சிறந்த உணவு



தாய்மார்களுக்கு ஓர் முக்கிய செய்தி! குழந்தைகளுக்கு முதலாவதாக கொடுக்க வேண்டிய கெட்டியான உணவு **பாரெக்ஸ்** இந்தியாவில் மறுபடியும் விற்கப்படுகிறது.

கிளாக்ஸோ லேபரட்டரீஸ் (இந்தியா) லிமிடெட் பம்பாய், கல்கத்தா, மதராஸ்

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

47. பாதஹஸ்தாசனம்

செய்யும் விதம்:—இரண்டு குதிக் கால்களைச் சேர்த்து வைத்து நேராய் நிமிர்ந்து நிற்கவும். இரண்டு கைகளைத் தலைக்குமேல் நேராய் நீட்டவும். கைகள் காதுகளை ஒட்டினாற் போல் இருக்க வேண்டும். இரண்டாவது சித்திரத்தைச் சிறிது கூர்ந்து கவனித்துப் பார்க்கவும்.

மூச்சை நன்றாய் இழுத்துக் கொள்ளவும். பின் மூச்சை இலேசாய் விட்டுக் கொண்டே முன் பக்கம் குனிந்து மூன்றாவது சித்திரத்திலுள்ளபடி கால் பெரு விரல்களைக் கைகளால் பிடித்துக் கொள்ளவும். இது முதல் படி.

சிறிது மூச்சை வாங்கி, மறுபடி விட்டுக் கொண்டே தலையை இன்னமும் குனிந்து கைகளால் கால் பெரு விரல்களைப் பிடித்தவாறே முழங் கைகளைச் சற்று அகல மடித்து முகத்தை முழங் கால்களுக்கு இடையில் ஒட்டும்படி வைக்கவும். முதல் சித்திரத்தைக் கவனித்துப் பார்க்கவும். இது இரண்டாவது படி.

இந் நிலையில் ஐந்து முதல் பத்து எண்ணும் வரைக்கும் இருக்கவும். இப்பொழுது இலேசாய் மூச்சை விடவும் வாங்கவும் செய்யலாம். பின், தலையைச் சற்று நிமிர்த்தி மூன்றாவது சித்திர நிலைக்கு வரவும். பின், கைகளைக் காதுகளை ஒட்டினாற் போலவே வைத்துக் கொண்டு மூச்சை இழுத்தவாறே முன், — ஆரம்பத்திலிருந்தபடி, முதல் சித்திரத்திலுள்ளபடி,—நிற்கவும். இந்நிலையிலிருந்தே மறுபடி ஆரம்பித்து முன் சொன்னது போல் அவரவர்களுக்கு வேண்டியபடி மூன்று முதல் பத்து பன்னிரண்டு தடவைகள் வரை செய்யலாம்.



படம்] 1.

ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கு இந்த ஆசனம் ஆரம்பத்தில் சரியாய்ச் செய்ய வராது. சிலருக்குக் கை எலும்புகள் வளைவாய் இருக்கும். அப்பேர்ப்பட்டவர்களுக்குக் கைகளை நேராய் உயர்த்த வராது. வளைவாய்த்தான் தூக்க முடியும். சிலருக்குக் கைகள் காதுகளை ஒட்டினாற்போல் வைத்துக் கொள்ள வராது. அது அவரவர்களின் இயற்கைப் பிறவியின் எலும்பின் தன்மை. அதை இப்பொழுது திருத்த முடியாது. அப்படி இருப்பதால் பலன் ஒன்றும் குறைந்து விடாது. சிலருக்கு முதல் படியாகிய கால் கட்டை விரலையே குனிந்து பிடிக்க வராது. முதுகெலும்பின் விறைப்பின் காரணமாகவும் இம் மாதிரி பிடிக்க முடியாமல் இருக்கலாம். வயிறு பெருத்திருந்தாலும் சரியாய்க் குனிய முடியாமலுமிருக்கலாம். தினமும் முயற்சி செய்து வந்தால் சில நாட்களில் வரும். குனிந்தவாறே தரையைத் தொடுவதுபோலப் பல தடவை செய்து வந்தால், முதுகெலும்பின் பிடிப்பு விட்டுப் பின், கால் பெரு விரலைப் பிடிக்க வரும். வயிறு பெருத்துத் தொந்தியாக இருப்பவர்கள் சலபாசனம், தனுராசனம், சர்வாங்காசனம், முதலியவைகளைச் செய்து வந்து இதையும் முயற்சியுடன் செய்து வந்தால், வயிறு கரைந்து சில மாதங்களில் விரல்களை எட்ட முடியும். காலைத் தொட வந்த பின் கால் விரல்களைப் பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். முழங்கால்களைப் பிடிக்காமல் எவ்வளவு முடிகிறதோ அவ்வளவு செய்ய வேண்டும். காலை மடித்துச் செய்தால் சுலபமாய்ப் பிடிக்க வரும். ஆனால் கவனம் வைத்து முழங்கால்களை மடிக்காமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். சிலருக்குக் கால் பிடிக்க வந்து விடும். ஆனால் தலையும் கைகளுடன் சேர்ந்து குனிய வராது. விடா முயற்சியுடன் செய்து வந்தால் முதுகெலும்பு தானாகவே வளைந்து அதுவும் சில நாட்களில் சரியாய்ச் செய்ய வந்து விடும்.

முதல்படி சரியாய்ச் செய்ய வந்த பின் இரண்டாவது படிக்குப் போகலாம். முகத்தை மட்டும் இன்னமும் குனிந்து முழங்காலுக்குச் சமீபம் கொண்டு போக முயற்சி செய்ய வேண்டும். விடா முயற்சியுடன் செய்து வந்தால் அதுவும் சில நாட்களில் வந்துவிடும். இந்த ஆசனத்தைச் செய்யும் போது, சிலருக்குத் தொடை நரம்புகள் ஜில்வென்று இழுத்து வலிக்கும். முதுகெலும்பு வலிக்கும். வயிறு நசுங்குவதால் அதுவும் வலிக்கும். ஆகையால் அதிக வலி எடுக்கும்படி இன்றே சித்திரத்தில் உள்ளபடி செய்து முடித்துவிட வேண்டும் என்று முரட்டுத்தனமாய் எதையும் பழகக் கூடாது. மெதுவாய், நிதானமாய் நாளுக்கு நாள் சிறிது அதிகம் குனிய முயற்சி செய்ய வேண்டும். முதலில் சிறிது வலிக்கத்தான் செய்யும். வலிக்குப் பயந்து விட்டு விடவும் கூடாது. முதலில் ஒரு வாரம் பத்து நாட்கள் அப்படி வலிக்கும். பிறகு தானாகவே வலி மறைந்து விடும். செய்தால் சுகமாகக் கூடத் தோன்ற ஆரம்பித்து விடும்.

பலன்:—இந்த ஆசனத்தை ஹஸ்த பாதாசனம் என்று கூடச் சொல்லுவதுண்டு. பஸ்சிமோத்தானாசனத்திற்கு என்னென்ன பலன்கள் உண்டோ அவை அத்தனையும் இதற்கும் உண்டு.

இது நின்று கொண்டு செய்வதால் கால்கள் உறுதி அடையும். தலை கீழ் நோக்கிக் குனிவதால் ரத்தம் சிரசிற்கும் சிறிது போகும். அதனால் முகம் தேஜஸ் அடையும். இந்த ஆசனத்தில் வயிறு, அமுங்கி நன்கு நசுங்குவதால் வயிற்றிலுள்ள ஆகாரப் பை அமுங்குகிறது. அதனால் ஆகாரப் பைக்குப் பயிற்சி ஏற்பட்டு அது என்றும் ஆரோக்கியமாய் இருக்கும். மண்ணீரலும் அமுங்குவதால் அதுவும் சுறுசுறுப்பெய்தி அதன் வேலைகளும் தங்குதடையில்லாமல் நடைபெறும். பித்தப் பையும் அமுங்குவதால் அதில் கற்கள் ஏதும் ஏற்படாதபடி என்றும் சுறுசுறுப்பாய் வேலை நடக்கும். கல்லீரலும் சுறுசுறுப்பாய் மெதுவாய் இருக்கும். பாங்கிரியாஸும் விழிப்படைந்து சரிவர இன்ஸுலினைக் கக்கும். சிறு குடல் சோம்பலை விட்டுத் தன்னிடம் வரும் ஆகாரச் சத்தை வேண்டிய அளவு கிரகிக்கும். பெருங்குடல் விழிப்படைந்து தன்னிடம் மலம் சேராமல் அவ்வப்போது வெளியில் தள்ளச் சித்தமாய் இருக்கும்.

முதுகெலும்பு வளைவதால் முது கெலும்பின் கீழ்த்தண்டிலிருந்து பிரியும் நரம்புக் கூட்டங்களெல்லாம் ஆரோக்கியமடைந்து யௌவனம் ஸ்திரப்படும். அந்த நரம்புகள் ஆளும் பாகங்களெல்லாம் நோயே அணுகாமல் இருக்கும். வயிற்றில் கொழுப்பு சேர வகையில்லாமல் போய்விடுகிறது. அப்படி யிருந்தாலும், பிராணவாயு ரத்தத்தின் மூலம் வயிற்றிலுள்ள சகல இடங்களிலும் நன்றாக ஊடுருவிப் பாய்ந்து பரவுவதால் கொஞ்சநஞ்ச கொழுப்பிருந்தாலும் கரைந்து விடும்.

குண்டிக் காய்களுக்கும் இதில் பயிற்சி ஏற்படுவதால் எப்பொழுதும் மூத்திர சம்பந்தமான வியாதிகளே வராது. சுறு சுறுப்பாய் அதன் வேலைகளைச் சிரமமின்றிச் செய்யும். அதன்மேல் இருக்கும் அட்ரினேல் கோளமும் விழிப்படைந்து அதன் ரசத்தைச் சரிவரக் கக்கும். இடுப்பு வலுவடையும். இடுப்பு வலி, முதுகு வலி மறையும். சந்து வாதம், மற்ற வாதங்களுக்கும் இது மிகவும் நல்லது.

இந்தப் பயிற்சியைப் போன்றது, அதாவது முதல் படி வரை சாதாரணமாய்ப் பள்ளிக் கூடங்களிலும், மற்றப் பயிற்சிகளுடன் சொல்லித் தருவார்கள். சிறுவர்கள் இந்த முதல் படி வரை செய்யலாம். மிருந்த நன்மையுண்டு. பன்னிரண்டு வயதுக்குமேல் உள்ளவர்கள் இரண்டாவது படியைக் கூடச் செய்யலாம்.

நீரழிவு, மலட்டுத்தனம், வயிற்றுவலி, தலைவலி, மூலக் கடுப்பு, இடுப்பு வலி, முதுகு வலி, நரம்பு பலவீனம் முதலியவை போகும். இடுப்பு சிறுத்து வலுவடையும். பெண்களுக் குண்டாகும் மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முழுதும் விலகிவிடும். சுகப் பிரசவம் ஏற்படும்.

வயிற்றில் ஆப்பரேஷன் செய்து கொண்டவர்கள் ஆசன ஆசிரியரின் ஆலோசனையின் பேரில்தான் இந்த ஆசனத்தைச் செய்யலாம். குடல் பிதுக்க முள்ளவர்கள் இதைச் செய்யக் கூடாது. இரத்த அமுக்க முள்ளவர்களும் இதை ஆரம்பத்தில் செய்யக் கூடாது.



படம் 3.

வழக்கமாய்ச் செய்து வருகின்ற ஸ்திரீகள் கர்ப்பம் கொண்டால் மூன்று மாதங்கள் வரை இரண்டாவதுபடி வரை செய்யலாம். பின் ஒரு மாதம் முதல் படி வரை செய்யலாம். அதன்பின் இவ்வாசனத்தைச் செய்யக் கூடாது. ஆசனம் முன் பின் செய்து பழக்கமில்லாதவர்கள் கர்ப்ப காலத்தில் இந்த ஆசனத்தைச் செய்யக் கூடாது.

* * *

ஆசனங்கள் இன்னும் சில தான் மீதி இருக்கின்றன. இல்லறத்தில் இருந்து கொண்டு எந்த வேலைகளுக்கும் கெடுதல் இல்லாமல் பழக வேண்டிய ஆசனங்களை மட்டும்தான் எழுதி வருகிறேன். எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டமும், வேலை செய்யும் இடங்களில் போதிய வருவாய் இல்லாமலும் லட்சக் கணக்கான மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். சொல்ல முடியாமல் திண்டாடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஆரோக்கியம் குன்றி நோய்வாய்ப்பட்டு விட்டால் எத்தனை விதமான கஷ்டங்கள் ஏற்படும் என்பதை விவரிக்கவே முடியாது.

அதிலும் ஒருவர் சம்பாதித்து அந்த சம்பாத்தியத்தில் ஏழெட்டு ஜீவன்கள் வாழ்ந்து வருகின்ற குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. அந்த மாதிரி குடும்பத்தில் சம்பாதிக்கும் திறமையுள்ளவர் நோயால் படுத்துவிட்டால் அக் குடும்பம் என்ன ஆவது! நோயாளியைக் கவனிப்பார்களா! குடும்பம் நடத்துவதற்குப் பொருள் தேடுவார்களா! அருமையான வாழ்க்கையை வாழத் தெரியாமல் மனம் கெட்டு, சுகமாக இருப்பவர்களைப் பார்த்துப் பொறுமைப் பட்டுத் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் அவர்களால் செய்ய முடியாது.



படம் 2

ஆகையால் நோய் நொடி இன்றி வாழத் தினம் காலையிலோ மாலையிலோ ஒரு மணி நேரம் ஆசனத்துக்காகச் செலவிட்டு இன்ப வாழ்வு வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள். மனத்தில் நம்பிக்கையும் விடா முயற்சியும் மட்டும் இருந்தால் போதுமானது. காசு, பணம் தேவையில்லை. (தொடரும்)

தாயும் மகனும்

ஸ்ரீவத்ஸன்

"அன்புள்ள பாலு, உன் பிரிவு தாங்க முடியாமல் உன் தாயார் படும் துயரம் சொல்லி முடியாது. சில வருடங்களாகவே மனம் நலிந்துள்ள அவளுக்கு இப்போது உடல் நலிவும் உண்டாகி அவள் அனுபவிக்கும் வேதனைக்கு அளவேயில்லை. இதே நிலை நீடித்தால் இன்னும் ஒரு மாத காலத்தில் அவளுக்கு நீ அந்திமக் கிரியை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதை யாரும் தவிர்க்க முடியாது. பெற்ற தாயிடம் நீ வைராக்கியம் காட்டுவது அழகல்ல. தவறு யார் பேரில் என்றெல்லாம் ஆராய வேண்டிய சமயமல்ல. நீ எங்கே இருந்தாலும் உடனே புறப்பட்டு வந்தால் மன நிம்மதி இழந்து வாழ்க்கைப் பயணத்தின் கடைசி யாத்திரைக்குத் தயாராகி வரும் ஒரு ஆத்மாவுக்குச் சாந்தி யளித்ததாகும்.

உன்னால் ஒரு வித சுகத்தையும் அடையாத ஒரு தாயாருக்கு அவருடைய மரணத் தறுவாயிலாவது உன் முகத்தை ஒரு தடவையாவது காட்டினால் குடி முழுகி விடாது. அன்ன ஆகாரம் கூடப் புசிக்க அவள் இஷ்டப்படவே இல்லை. சதா "என் பாலுவை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும். அவனைப் பார்த்து அவனுக்கு என்னிடம் கோபமில்லை என்பதைத் தெரிந்து கொண்டு செத்தால்தான் என் நெஞ்சு வேகும்" என்று புலம்பி வருகிறாள். எங்கிருந்தாலும் புறப்பட்டு வா. ஒரு நிமிஷம் தாமதித்தாலும் அதனால் விளையும் பலன் உன் வாழ்நாள் முழுதும் உன்னைப் பாதிக்காமல் விடாது. வைராக்கியத்துக்கோ அலட்சியப் புத்திக்கோ, வெறுப்புக்கோ, இது சமயமல்ல. நிம்மதியிழந்து நிற்கும் ஒரு ஆத்மாவுக்கு நிம்மதியை உண்டாக்கக்கூடிய சக்தி உன்னிடமிருக்கிறது. அதைத் துஷ்பிரயோகம் செய்யாதே. நம் குடும்ப விஷயம் அதிகமாக ஒருவருக்கும் தெரியும்படி விட இஷ்டமில்லா விட்டாலும் நீ இருக்குமிடமே வெகு காலமாக ஒருவருக்கும் தெரியாததாலும் உன் தாயின் நிலைமைக்காகவும் நான் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்துள்ளேன். இந்த விளம்பரம் உன் கண்ணில் படும் என்று நம்பியே செய்கிறேன். உடனே புறப்பட்டு வா. இப்படிக்கு உன் மாமா, நாராயணசாமி."

இந்த விளம்பரத்தைப் படித்ததும் என் மனம் பட்ட பாடு சொல்லி முடியாது. ஒரு தாயின் மனப் புயலை அப்படியே சித்திரித்துக் காட்டும் விளம்பரம் அது. தாங்க முடியாத வேதனை அடிவயிற்றில் கிளம்பித் தொண்டையில் வந்து அடைத்துக் கொண்டது.

"என்னப்பா பத்திரிகையில் விசேஷம்?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் என்னுடைய நண்பன் வரதராஜன்.

"இதோ பார் வரதராஜா, இந்த விளம்பரத்தை. இப்படிப்பட்ட கிராதக நெஞ்சம் கொண்ட பிள்ளைகள் கூட இருக்கிறார்கள் பார்த்தாயா!" என்று சொல்லிக் கொண்டே விளம்பரத்தைக் கொடுத்தேன்.

வரதராஜன் ஒரு தடவை அதைப் படித்தான். அவன் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பெருகி வழிந்து ஓடியது.

"வரதா! உன் மனமும் என் மனமும் மிகவும் கோழைத்தன்மை யுடையது. என்னை விட நீ இன்னும் இளகிய மனம் படைத்தவனப்பா. இந்த விளம்பரத்தைப் பார்த்தவுடனேயே உன் உணர்ச்சிகள் பெருக்கெடுத்துக் கண்ணீராக வருகிறது" என்றேன்.

திடீரென்று அவன் சிரித்தான்.

"சேகர்! விளம்பரத்தைப் பார்த்ததும் நான் அழவில்லையப்பா. இந்த விளம்பரத்தில் கண்ட பாலு, உன்னால் கிராதகன் என்று வர்ணிக்கப்பட்ட பாதகன் யார் தெரியுமா?" என்று கேட்டான் வரதன்.

"அந்த மகா பாவியைத் தெரிந்து கொள்ளவும் வேண்டுமா? அந்தத் துர்ப்பாக்கியம் எனக்குக் கடவுள் அளிக்கக் கூடாது என்பதே என் பிரார்த்தனை."

"சேகர், அந்தப் பாவியை உனக்குத் தெரியும். அந்த மரக்கட்டை இருதயம் உள்ளவன் நான்தான். என் மாமாதான் நாராயணசாமி."

ஆயிரம் பழுக்கக் காய்ச்சிய வேல்களை ஏககாலத்தில் என் மார்பில் முழு பலத்துடன் செலுத்தியதுபோல் இருந்தது.

"என்ன வரதா! விளம்பரத்தில் 'பாலுவுக்கு' என்று போட்டிருக்கிறதே" என்று வியப்புடன் கேட்டேன்.

யார் சொன்னது?



"ஆமாம். வீட்டில் என் செல்லப் பெயர் பாலு. உத்தியோகப் பெயர் வரதராஜன்."

"இப்படிப்பட்ட கருணை உள்ளம் படைத்தவனா உன் தாயிடம் இப்படி யிருக்கிறாய்? என்னால் நம்பவேமுடியவில்லையே" என்றேன்.

"சேகர். இரத்தத் திமிர் பிடித்து அலைந்த நான் ஊருக்கு நல்லவன். ஆனால் என் தாயின் நிம்மதியைக் குலைத்த பாவி. தாயுள்ளம், பெற்ற மனம் என்றெல்லாம் கதைகள் எழுதினேன். அவைகளைப் பாராட்டாதவர்களே இல்லை. ஆனால் நான் எழுதிய உணர்ச்சிகள் வேறு. ஆனால் நடைமுறையில் அனுஷ்டித்தது வேறு. ஊருக்கெல்லாம் பெற்ற மனத்தையும் தாயுள்ளத்தைப் பற்றியும் உணர்ச்சி ததும்ப எழுதிய நான் என் தாயுள்ளத்தை உணராத பாவி. என் கதையைச் சொல்லுகிறேன், கேள்!" என்று ஆரம்பித்தான்.

* * *

எனக்கு ஆறு வயதும் என் அண்ணாவுக்குப் பத்து வயதாயும் இருக்கும்போதே என் தகப்பனார் காலமானார். என் தாய் எங்களைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தாள். என் அண்ணா பெரிய புத்திசாலி. சர்க்கார் உபகாரச் சம்பளம் பெற்று எஸ். எஸ். எல். ஸி. வரை படித்துப் பாஸ் செய்தான். எனக்கு அவ்வளவாகப் படிப்பு வரவில்லை. படிப்புத்தான் வரவில்லையே! அடங்கி ஒடுங்கியாவது நடந்தேனா? என் தாயாருக்கு நான் கொடுத்த துயரை அப்போதெல்லாம் நான் அறியவேயில்லை. சதா ஊர் சுற்றுவதும் தாயை மிரட்டி அவ்வப்போது ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் வாங்கிப் போய் இஷ்டப்படி செலவு செய்வதுந்தான் நான் செய்த வேலை. என் அண்ணா ஆந்திர ஜில்லாவில் சர்க்கார் குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டுச் சென்றான். வேலை ஒப்புக்கொண்ட பின் மாதா மாதம் என் தாய்க்குப் பணம் அனுப்பி வந்தான். வேலை ஒப்புக் கொண்ட ஒரு வருடம் சென்ற பின் அவன் ஒருநாள் திடீரென்று ஊருக்கு வந்தான். சும்மா வரவில்லை. எலும்பும் தோலுமாய் உடம்பெல்லாம் வெளுத்து நடமாடச் சக்தியில்லாதபடி வந்து சேர்ந்தான். அவன் நிலையைப் பார்த்து என் தாய் மனம் இடிந்து போனாள். கண்ணீர் விட்டாள்.

அவனுக்குத் தீராத க்ஷயரோக வியாதி வந்திருந்ததுடன் வயிற்றில் ஒருவிதமான வலியும் உண்டாகி யிருந்தது. பணத்தைப் பார்க்காது அவனுக்கு என் தாய் வைத்தியம் செய்து வந்தாள். அந்த வருடம் ஐந்தாவது பாரத்தில் நான் 'கோட்' அடித்தேன். என் தாய் என்னைத் திட்டினாள். என்னால் குடும்பமே பாழாகி விட்டதாகக் கோபித்தாள். முன்போல் நான் பணம் கேட்கும் போதெல்லாம் அவள் ஒன்றும் கொடுப்பதில்லை. எனக்கென்னவோ என் தாய் என் அண்ணாவிடம் பிரியமாயும் என்னை உதாசீனமாயும் நடத்

துவதாக ஒரு சந்தேகம் உண்டாகி அது நிவர்த்தியாவதற்குப் பதில் பெரிய அளவில் உருவாகி என் தாயையையும் என் அண்ணாவையும் வெறுக்கும்படியான ஒரு சந்தர்ப்பத்தைச் சிருஷ்டித்தது.

"அம்மா, எனக்கோ படிப்பு வரவில்லை. முந்நூறு ரூபாய் பணம் கொடு. இங்கேயே ஏதாவது தொழில் செய்து பணம் சம்பாதிக்கிறேன்" என்று கேட்டேன்.

"பள்ளிக்கூடச் சம்பளம்கூட கட்ட என்னால் முடியவில்லை. என்னிடம் ஏதடா பணம்?" என்றாள். எவ்வளவோ தடவை கேட்டுப் பார்த்தும் அவள் மசியவில்லை. நகைகள் சிலவற்றை விற்று அப்பொழுது கையில் பணம் வைத்துக் கொண்டிருந்தாள்.

"பள்ளிக்கூடச் சம்பளம் ஆறு ரூபாய் கொடுக்க முடியவில்லை. ஆனால் நோட்டு நோட்டாக உன் மூத்த பிள்ளைக்கு வைத்தியத்துக்கு வாரி இறைக்கிறாய். உன் ஓர வஞ்சனை எனக்குத் தெரியாதா?"

"பின்னே வியாதிக்காரனை உயிரோடு பலி கொடுக்கச் சொல்லுகிறாயா? நீ ஒன்றும் பணம் கொடுக்கவில்லை. என் நகைகளை விற்றுச் செலவழிக்கிறேன்."

"உன் நகைதான். ஆனால் எனக்கும் அதில் பாதி பங்கு உண்டு. அதையும் செலவுசெய்ய உனக்கு உரிமை கிடையாது."

"உன் நாட்டாமை வரும்பொழுது அதைப் பற்றியெல்லாம் யோசிக்கலாம்."

"இவ்வளவு செலவழிக்கிறாயே, அவனுக்கு என்ன சொஸ்தமாகிற வியாதியா இது? எல்லாம் வீண் பிரமைதான்."

"படுபாவி. அவன் உன் தமையன் என்கிற வாஞ்சைகூட உனக்கில்லையே."

"நிறுத்தம்மா சரிதான். நீயும் அவனுமாகச் சேர்ந்து எல்லாவற்றையும் தீர்த்துவிட்டு என்னைத் தெருவில் நிறுத்தப் பார்க்கிறீர்கள்."

"நீ ஒருவன் பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன். வீட்டை விட்டு ஓடிப்போ."

"நான் போய்விட்டால் அப்புறம் நீயும் உன் பிள்ளையும் சௌகரியமாகயிருக்கலாம் என்று திட்டமா?"

"அடப் படுபாவி. என் பிள்ளை, என்பிள்ளை என்கிறாயே. நீ என் பிள்ளையில்லையா?"

"நீ என்னையும் உன் வயிற்றில் பிறந்த பிள்ளையாக நினைத்தால் தானே!"

"எனக்கு இரண்டு கண்ணும் சரிதான்."

"ஒரு கண் வெண்ணெய்; ஒரு கண் சுண்ணாம்பு என்று நினைக்கிறாய்."

இப்படியாக வம்பு வளர்ந்தது. அம்மாவைத் தாறுமாறாகத் திட்டிவிட்டு இரண்டு நாள் வீட்டுக்கே வராமல் எங்கெல்லாமோ சுற்றி அலைந்து கொண்டிருந்தேன்.

என் அண்ணாவுக்கு வியாதி அதிகமாகி அவனை வைத்தியத்துக்காகப் பட்டணத்துக்கு அழைத்துப் போனாள் என் தாயார். எனக்குச் சாப்பாட்டுக்குக்கூட ஏற்பாடு செய்யாமல் சென்னையிலிருந்த என் மாமா வீட்டுக்கு என் அண்ணாவுடன் போய் விட்டாள். ஏராள ரூபாய் செலவழித்தாள். பலனில்லை. என் அண்ணா இறந்து விட்டான். தாயார் வாடிய உள்ளத்தோடு ஊர் திரும்பினாள்.

"வியாதிக்காரன் பிழைத்து எழுந்திருந்து உன்னைக் காப்பாற்றுவான் என்று என்னையும் மோசம் செய்து அவனுக்கு வைத்தியம் செய்தாய். அந்த அல்பாயிசுக்கு அவசரம். அதற்குள் இறந்து விட்டான். இப்போ என் காலுங் கீழ்தான் உனக்கு ஜீவன். உன் ஓர வஞ்சனைக்குக் கடவுள் சரியாகக் கூலி கொடுத்தார். அவனுக்குச் செலவழித்த பணம் இருந்தாலாவது ஏதாவது தொழில் செய்திருக்கலாம்" என்று சொன்னேன்.

"அட கிராதகா! ஒரு பெற்ற தாய் புத்திர சோகத்தால் தவிக்கும்போது எவ்வளவு கொடிய விரோதியாயிருந்தாலும் எல்லாவற்றையும் மறந்து ஆறுதல் சொல்வார்கள். என் வயிற்றிலேயே பிறந்த நீ, நான் புண்பட்டு மாண்டு மடிந்து கொண்டிருக்கும்போது குத்திக் காட்டுகிறாயே. தாயாருக்கு ஆறுதல் சொல்லக்கூட முடியாமல் அவனை ஏசக் காட்டுகிறாயே. உன்னைப் பெற்ற என் வயறு பற்றி எரிகிறது. நீ எங்கேயாவது தொலைந்து போ! நான் உன்னை உயிரோடேயே இழந்து விடுகிறேன். இனி நீ எனக்குப் பிள்ளையில்லை" என்றாள்.

அப்போதுகூட அந்தப் பெற்ற தாயின் புத்திர சோகத்தை நான் சரியாக மதிப்பிடவில்லை; பரிதாபப் படவும் இல்லை.

"உன் நெஞ்சே உன்னைச் சுடுகிறதாக்கும். நீ செய்த வஞ்சனைக்கு நீ அனுபவித்துத்தான் தீரவேண்டும். இங்கிருந்து கொண்டு உன்னைக் காப்பாற்ற எனக்குப் பைத்தியமில்லை" என்று சொல்லி வீட்டை விட்டு வெளியேறினேன். அதன் பிறகு பத்து வருடங்களாகி விட்டன. என் மனத்



"திருடன் புகுந்து நேற்று இரவு உங்கள் வீட்டில் எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டானாமே! உங்கள் தலையணைக்கு அடியிலே எப்போதும் கைத் துப்பாக்கி வைத்திருப்பீர்களே. ...அதை...!"

"...நல்ல வேளை, ஸார்! அதை மட்டும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை!"



"சொன்னால் கேளடா, அம்பி! அந்த நாடகத்துக்கு நீ வந்தாயானால் உனக்கு அழுகையாய் வரும். நீ வீட்டிலேயே இரு. பாட்டி இருக்கிறாள்!"

"போ, அப்பா! என்னை விட்டு விட்டு நீமாத்திரம் அந்த நாடகத்துக்குப் போனால் எனக்கு அழுகையாய் வரும். நீ திரும்பி வருகிறவரையில் நான் அழுது கொண்டே இருப்பேன்!"

தில் என் தாயின் ஞாபகம் வரவேயில்லை. ஆனால் சென்ற சில மாதங்களாக என் தாய்க்கு நான் இழைத்த கொடுமைகள் அடிக்கடி ஞாபகம் வருவதுண்டு. அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் உண்டு. ஆனால் புத்திரசோகத்தால் கிடந்து வாடிய போது அவள் மனத்தை நான் எவ்வளவு தூரம் ஆழமாகப் புண்படுத்தினேன் என்பதை நினைக்கும்போது இந்த மகாபாவி அந்த உத்தமியின் எதிரில் போகக்கூட யோக்கியதையற்றவன் என்று என் மனச்சாட்சி சொல்கிறது. ஆனால் வரவர என் நெஞ்சில் வேதனை குடிகொண்டு மன நிம்மதி யிழந்து தவிக்கிறேன்" என்று தன் கதையைச் சொல்லி முடித்தான் வரதராஜன்.

"வரதா! இப்போது உனக்குச் சரியான சந்தர்ப்பம். உன் தாய் உன்னைக் காணத் துடிக்கிறாள். உனக்குத் தாயைக் காண ஆவல். உடனே புறப்படு. நானும் வேண்டுமானால் வருகிறேன் போவோம்" என்றேன்.

"மிகவும் சந்தோஷம். நாளைக்குக் காலையில் புறப்படும் ரயிலில் சென்னைக்குப் புறப்படுவோம். அங்கிருந்து மறுபடியும் ரயிலேறி என் கிராமத்துக்குப் போவோம்" என்றான்.

விடியற் காலையில் ரயிலுக்குப் புறப்பட வேண்டியவைகளைத் தயார் செய்து வைத்து விட்டுப் படுத்து உறங்கலானோம். நல்ல தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

மறுநாள் புறப்பட்டு வரதனின் கிராமத்துக்குப் போனோம். ஊரின் எல்லையைத் தாண்டினோம். இன்னும் சிறிது நேரத்தில் அவனுடைய தாயைப் பார்த்து விடுவோம். அந்தக் கிராமத்துக்குள் நுழைந்தோம். எதிரே ஏழெட்டுப் பேர் வந்தார்கள். "மணி மணியாக இரண்டு குழந்தைகளைப் பெற்றாள். ஒன்று அகாலத்தில் செத்துவிட்டது. இன்னொன்று எங்கு போச்சோ தெரியவில்லை. பாவம் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தாளே ஒழியக் கடைசி காலத்தில் ஒருவரும் இல்லை" என்று சொல்லிக் கொண்டே எங்களைத் தாண்டிப் போனார்கள். இந்தச் சம்பாஷணையைக் கேட்ட வரதன் "ஐயோ அம்மா நீ, என்னைப் பார்க்காமலேயே போய் விட்டாயா? உனக்காகத்தானே ஓடி வந்தேன்" என்று திடீரென அலறிக் கொண்டே வீட்டை நோக்கி ஓடினான். எனக்கு விஷயம் விளங்கி விட்டது. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்து விட்டது. அவனுடைய தாய் இறக்கும்போது வரதனை எண்ணிக் கொண்டே இறந்திருப்பாளே. அவளுடைய பெற்ற மனம் அவனைக் காணாது என்ன பாடுபட்டிருக்கும் என்று என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. வரதன் என்னை நெருங்கி வந்தான். அவனைப் பார்த்ததும் "ஐயோ, வரதா!" என்று அலறி விட்டேன். அடுத்த கணம் நான் படுத்திருந்த கட்டிலிலிருந்து கீழே விழுந்தேன்.

"என்ன சேகர்! ஏதாவது சொப்பனம் கண்டாயா? அலறியடித்துக் கொண்டு கீழே விழுந்து விட்டாயே" என்று என்னைப் பிடித்து உலுக்கி எழுப்பினான் வரதன்.

அப்போதுதான் நான் அவன் தாய் இறந்ததாகக் கண்டது சொப்பனத்தில் என்று தெரிந்தது. வியர்வை வெள்ளம் பெருகியது.

"எழுந்திருப்பா! விடியற்கால ரயிலுக்கு நாழிகை ஆகிவிட்டது" என்று என்னைத் துரிதப்படுத்தினான். நாங்கள் கிளம்பினோம்.

கனவில் கண்டதை நான் வரதனிடம் சொல்ல இஷ்டப்படவில்லை. ஊர் போய்ச் சேரும் வரையில் அந்தக் கனவு என்னை என்னென்னவோ செய்தது. கிராமத்துக்குள் நுழையும்போது என் மனம் படபடத்தது. கனவில் நடந்ததுபோல் ஏதாவது ஏற்படக் கூடாதே என்ற தாங்க முடியாத வேதனையால் என் மனத்தில் நிம்மதியில்லை.

நல்லவேளை, வீட்டுக்குள் நுழைந்தோம்.

"அம்மா, என்னை மன்னித்துவிடு!" என்று கதறியபடி வரதன் அவன் தாயின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தான். அவளும் வரதனை வாரி எடுத்து அணைத்து உச்சி முகர்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள்.

ஒரு வாரம் கழித்து மூத்துப் பேட்டை ஸ்டேஷனில் முதலாவது வகுப்பு வண்டியில் வரதன் அவன் தாயார் நான் மூவரும் பம்பாய்க்குப் பயணமானோம். வண்டியில் போகும்போது நான் அன்று இரவு கண்ட கனவை அவர்களிடம் சொன்னேன்.

"அப்படி ஏற்பட்டிருந்தால் எனக்கு மன நிம்மதியே உண்டாகி யிருக்காது. என் வாழ்க்கையில் நிம்மதியின்றி நான் தத்தளித்திருப்பேன்" என்றான் வரதன்.

"அப்படி நான் இறந்திருந்தால் என் ஆத்மாவுக்கு நிம்மதியே உண்டாகி யிருக்காது" என்றாள் அவன் தாயார்.

"எனக்கும் நிம்மதி இருந்திருக்க முடியாது" என்று முடித்தேன் நான்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras



அவளுடைய
அழகான பற்களை
ஒரு காலத்தில்
எல்லோரும்
போற்றிவந்தார்கள்


...ஆனால் இப்பொழுது
அவளுக்கு

சிரிக்கவே அச்சமாயிருக்கிறது!

ஈறுகளை அசட்டைசெய்தால் பேராபத்து ஏற்படலாம். இன்று உங்கள் பற்கள் எவ்வளவு கவர்ச்சியுடையதாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தாலும் நாளடைவில் ஈறுவியாதிகள் அவைகளை அழித்துவிடும். ஆரோக்கியமான பற்களை ஆரோக்கியமான ஈறுகளில் இருக்கச்செய்ய ஒரு வழிதான் உண்டு—அதுதான் தினமும் எஸ். ஆர். டூத் பேஸ்ட் உபயோகிப்பது. உலகெங்கும் பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளை சிகிச்சைசெய்ய உபயோகிக்கும் ஸோடியம் ரிஸினோலியேட்* இந்த டூத் பேஸ்ட் ஒன்றில்தான் இருக்கிறது. எஸ். ஆர். டூத் பேஸ்ட் உங்களுக்கு இரட்டிப்பு பாதுகாப்பளிக்கிறது—உறுதியுள்ள ஆரோக்கியமான ஈறுகளில் பற்களை ஒழுங்காகவும் வெண்மையாகவும் இருக்கச்செய்கிறது. உங்களுடையவும் உங்கள் குடும்பத்தினருடையவும் க்ஷேமத்தைக்கோரி இன்றே எஸ். ஆர். டூத் பேஸ்ட் உபயோகிக்க ஆரம்பியுங்கள்



எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் சிரிப்பை கவர்ச்சியுடையதாகச்செய்யுங்கள்



பெரிய சைஸில் இப்பொழுது கிடைக்கிறது

* ஸோடியம் ரிஸினோலியேட் பாக்டீரியாவை எதிர்ப்பதோடு பாக்டீரியாவினால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்கும் சக்தியையும் அளிக்கிறது.

டி. அண்டு டபிள்யூ. கிப்ஸ் லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை GSR. 94-50 TM

REGD. No. M. 4392
Registered as a newspaper in Ceylon



[illegible] வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!